
# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்



# பெண்களும் மதமும்

Women and Media Collective
Established 1984

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

# சொல்

பெண்ணியத்தின் மகத்துவம்

முதலாம் அரையாண்டு - 2014
ISSN 1391-958X

**கௌரவ ஆசிரியை**
சித்ரலேகா மௌனகுரு

**சரவை நோக்கு**
குகநிதி குகநேசன்

**அட்டை மற்றும் பக்கங்கள் வடிவமைப்பு**
வேலாயுதம் ஜெயச்சித்ரா

**அட்டைப் படம்**
கமலா வாசுகி

**சஞ்சிகை வெளியீடு**
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு - 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045/5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org
facebook.com/womenandmediacollective
twitter.com/womenandmedia

# நாம் சொல்ல விரும்புவது...

சமூக பண்பாட்டு நிறுவனங்கள் பெண்களைப் பற்றி எத்தகைய பார்வையைக் கொண்டுள்ளன என்பது குறித்து சொல் சஞ்சிகையின் முந்திய இதழ்கள் சில பரிசீலித்துள்ளன. சில புதிய சிந்தனைகளை முன்வைத்துள்ளன. குடும்பம், அரசு போன்ற நிறுவனங்கள் பற்றி நாம் ஏற்கனவே பெண்ணிலைப் பார்வையில் குறிப்பிட்ட இதழ்களில் உரையாடியுள்ளோம். அவ்வகையிலேயே சமூகப் பண்பாட்டு நிறுவனங்களில் ஒன்றான மதம் தொடர்பாக சொல்லின் இந்த இதழ் ஆராய்கிறது: கருத்துக்களை முன்வைக்கின்றது.

நிறுவனமயப்பட்ட பெரும் மதங்களானவை பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கட்டமைத்து வந்துள்ளன. அதேசமயம் மதத்தை மிகுந்த நம்பிக்கையுடன் கடைப்பிடிப்போராக பெரும்பாலும் பெண்களே காணப்படுகின்றனர். அத்துடன் பெண்களின் அன்றாட வாழ்விலும் மதம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. கருத்துநிலை மட்டத்தில் பெண்களைத் தாழ்ந்த பகுதியினராகவும் ஆண்களது அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவராகவும் ஏற்படக் கூடியமனநிலையையும் ஏற்படுத்துகின்றது.

பதிவிரதாதர்மம், பத்தினிப் பெண் போன்ற கருத்துகளும் படிமங்களும் இந்துசமயத்தில் காணப்படுகின்றன. இவை பெண்களை வீட்டுக், குடும்பக் கடமைகளை தவறாது செய்ய வேண்டியவர்களாகவும், கணவனைக் கண்கண்ட தெய்வமாகக் கருதி நடக்க வேண்டியவர்களாகவும் காட்டுகின்றன. இதுபோலவே ஏனைய சமயங்களிலும் பெண்களுக்கு விதிக்கப்பட்ட நியதிகள் உள்ளன. இத்தகைய மதக் கருத்துகள் யாவற்றினதும் சாரம்சமாக அமைவது பெண்களின் தேர்வையும், சுயநிர்ணய உரிமைகளையும் கட்டுப்படுத்துவதாகும். இவ்வகையில் மதங்கள் பெண்கள் குறித்து முன்வைக்கின்ற கருத்துகளைக் கட்டுடைத்துப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

மதமும் பெண்களும் குறித்து நோக்கும்போது கவனம் செலுத்த வேண்டிய இன்னோர் விடயமும் உள்ளது. மக்கள் மத்தியில் இயங்குகின்ற பலம் வாய்ந்த சமூகப் பண்பாட்டு நிறுவனங்களுள் ஒன்றாக மதம் விளங்குகின்றது. தனிப்பட்டஒருவரின் நம்பிக்கை, நடவடிக்கை தொடக்கம் ஒரு குழுவினரின் அல்லது ஒரு தொகுதி மக்களின் கூட்டு நம்பிக்கைகளாகவும் கூட்டு நடவடிக்கைகளாகவும் மதம் செயற்பட்டு வருவதனைக் காணலாம். இவ்வகையில் ஒருதனிநபர் அல்லது சமூகக் குழுக்கள் என்பவற்றை அடையாளப்படுத்தும் மொழி, இனம், நாடு போன்றவை போல மதமும் ஓர் அடையாளஅம்சமாக அமைகின்றது. ஆனால் அடையாளம், நம்பிக்கைகள் ஆகியவற்றுக்கு அப்பால் போட்டி, அதிகாரம், மேலாட்சி, அடக்குமுறை ஆகியவை மதத்தின் பெயரால் நிகழ்த்தப்படும் போது மதவாதம் அல்லது மதத் தீவிரவாதம் என்பவை தலை தூக்குகின்றன. இவ்மதவாதம் மற்றும் மதத் தீவிரவாதம் என்பன சிறுபான்மையினரையும் பெண்களையும் பாதிக்கின்றன. இதற்குப் பல உதாரணங்களை இலங்கையிலும் ஏனைய நாடுகளிலும் நிகழ்வதைக் காணலாம்.

சொல்லின் இந்த இதழ் அச்சுக்குப் போகும் இந்தவேளையிலும் இலங்கையிலும் வேறுநாடுகளிலும் மதத்தின் பெயரால் தமது அதிகாரத்தை நிலைநிறுத்த முயல்வோர் தொடர்ந்தும் தமது செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டேயுள்ளனர். இலங்கையில் ஆனிமாதம் அளுத்கமவில் நடைபெற்ற முஸ்லிம்களுக்கு எதிரானவன் முறைகள், நைஜீரியாவில் பெண்களது கல்வியுரிமையை மறுத்து நடைபெற்ற சிறுமிகள், யுவதிகள் கடத்தல், ஈராக்கில் யசிடி எனும் குழுவினர்மீது தொடரும் வன்முறைகள் போன்றவை மதத்தின் பெயரால் நடைபெற்றவை மற்றும் நடைபெறுபவையாகும். இத்தகையவன்முறைகளின் போது பொதுவாகச் சகலரும் பாதிக்கப்படும் போதும் பெண்களும் பிள்ளைகளும் மேலும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். மதமும் பெண்களும் என்ற தொனிப்பொருளைஆராயும் போது, மதங்களின் கட்டுப்பாட்டுத் தன்மை பற்றியும் மதத் தீவிரவாதம் பற்றியும் கவனிக்க வேண்டியது அவசியமாகும். சொல்லின் இவ்விதழ் இதனையே செய்ய முயல்கிறது.■

# சொல் விடுக்கும் அறைகூவல்!

சொல்லின் இந்த இதழை பெண்கள் மற்றும் மதத்தைத் தொனிப்பொருளாகக் கொண்டு வெளியிட நாம் தீர்மானித்தபோது, நைஜீரியாவில், வடகிழக்கு நைஜீரியாவைத் தளமாகக் கொண்ட மத நிறுவனமாகிய போகோ ஹராம் (Boko Haram), போர்ணோ (Borno) மாநிலத்தில் உள்ள அரசாங்கத்தின் இரண்டாம் நிலைப் பாடசாலையில் இருந்து 276 பெண் பிள்ளைகளைக் கடத்திய செய்தி வெளியாகியது. போகோ ஹராம் மேலைத்தேய கல்விக்கும் குறிப்பாக பெண்கள் கல்விக்கும் எதிரானது. நைஜீரிய அரசாங்கமானது பாரம்பரிய இஸ்லாமியக் கல்வியில் தலையிடும் வரைக்கும், போகோ ஹராம் தான் வன்முறையையும், கடத்தல் மற்றும் கொலை உட்பட்டவற்றையும் பயன்படுத்துவதைத் தொடரும் எனக் கூறுகிறது. பெண்களுக்கு கல்வியூட்டப்படக்கூடாது எனவும், அவர்கள் திருமணம் செய்வதற்கோ அல்லது வீட்டு மற்றும் பாலியல் அடிமைகளாகவோ பயன்படுத்தப்பட வேண்டுமெனவும் அது நம்புகிறது. மதமும் கலாசாரமும், பெண்கள் தமது அடிப்படை மனித உரிமைகளை அனுபவிப்பதில் இருந்து தடுப்பதற்கும், மோசமான வன்முறையைத் தூண்டுவதற்கும் இது ஒரு மிகத் தெளிவான சம்பவமாக உள்ளது. இந்த வரையறைகள் வேறுபட்ட வடிவங்களிலும் கடுமைத் தன்மைகளிலும் உலகம் பூராகவும் இடம் பெறுகின்றன.

கலாசாரம், மதம் என்பன அநேகமாக வேறுபட்ட வகைப்பாடுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டாலும் மதமானது அதன் பரந்த நோக்கில் கலாசாரத்தின் ஒரு பாகமாக உள்ளது. கலாசாரத்தின் ஒரு உள்ளிணைந்த ஒரு அவசியமான பாகமாகவும் அதனைக் கொள்ளலாம். கலாசாரம் மற்றும் மதம் ஆகிய இரண்டும் பெண்களின் சுதந்திரங்களையும், மனித உரிமைகளையும் வரையறுக்கும் ஆண் ஆதிக்க நிறுவனங்களைப் பலப்படுத்துவதற்கும் பேணுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மதமானது கட்டுப்படுத்தும் சட்டங்களாக மத கலாசாரங்களை ஒழுங்கு செய்வதற்கு பயன்படுத்தப்படுகிறது. இலங்கை உட்பட திருமணம், மணமுறிவு, மரபுவாரிசு உரிமையாக அடைந்து கொள்ளுதல் என்பவற்றின் மீது, மத நீதி ஆதிக்கம் கொண்டிருப்பது குறித்தும், பெண்கள் மீது ஆணாதிக்க நெறிகளையும் மற்றும் விழுமியங்களையும் விதிப்பது குறித்தும், இலங்கை உட்பட பல நாடுகளில் சிறிதளவு விழிப்புணர்வே உள்ளது.

பல மத நிறுவனங்கள் மத சித்தாந்தங்கள் மற்றும் விழுமியங்களானவை, பெண்களைத் தாய்மார்களாகவும், வீட்டு மனைவியர்களாகவும் அவர்களது பிரதான வகிபங்கு இதுதான் எனச் சுட்டிக்காட்டும் மாறாநிலைக் கருத்தைக் கொண்டுள்ளன. சனசமூகங்களும், பொருளாதாரங்களும் வளர்ந்து கொண்டிருக்கையில், பெண்கள் பொதுவாழ்வுக்கு நகர்ந்து கொண்டிருக்கையில், அரசியல் மற்றும் பொருளாதார, மத, கலாசாரம் என்பன, மீண்டும் பெண்கள், திருமண நிறுவனங்கள் மற்றும் குடும்பத்திற்கான அவர்களின் பிரதான கடமையில் இருந்து விலகிச் செல்லமாட்டார்கள் என்பதையும், எந்தப் பாலியல் தன்னுரிமையையும் வெளிப்படுத்துவதற்கு நாடி நிற்கமாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்துவதற்கு மீண்டும் தூண்டி நிற்கின்றன. இதனால் தான் அநேகமாக மதகுருமார்கள் தமது போதனைகளில் பெண்கள் கெட்ட மனைவியராக இருப்பது குறித்தோ அல்லது ஆடை ஒழுங்குவிதியை மீறுவது குறித்தோ கடுமையாக விமர்சிக்கின்றார்கள். இது அவர்கள் அரசியலிலோ அல்லது பொருளாதாரத்திலோ, பொதுவாழ்விலோ வினைத்திறனான

முறையில் பங்குபற்றுவதற்கான, அவர்களின் சந்தர்ப்பங்களை வெற்றிகரமாக குறுக்கி விடுகின்றது.

மதம் மற்றும் கலாசாரத்தின் பெயரால் பாதுகாக்கப்படும் பல நடைமுறைகளாவன பெண்களின் மனித உரிமைகளை வரையறுக்கின்றன. இந்த உரிமைகளின் அழிவில் அவைகள் ஆணாதிக்கத்தைப் பாதுகாக்கின்றன. அந்த நடைமுறைகளாவன உள்ளடங்குவனவாவன புத்திரர்களுக்கு முன்னுரிமை அளித்தல், திருமணத்தில் புதல்வியரை விற்றல், சந்தை மணப்பெண்ணாக கட்டாய திருமணத்தில் அவர்களைக் கொடுத்தல் உட்பட பிழையான சீதனங்களை செலுத்தும் பழக்கம், புதல்வரைக் காட்டிலும் புதல்வியர் குறைவாக மரபுரிமை வழியாகப் பெற்றுக்கொள்ளும் ஆணாதிக்க மரபுரித்து முறைமைகள், காணி நிதியங்கள் மற்றும் நடமாட்டச் சுதந்திரம் மீது கணவருக்கு கட்டுப்பாட்டை அனுமதிக்கும் திருமண ஏற்பாடுகள், கீழ்ப்படிந்து நடக்கச் செய்யும் கணவரின் உரிமை, மனைவிக்கு எதிராக வன்முறையை செயற்பாடுகளைச் செய்தல் அல்லது கட்டுப்பாட்டு அதிகாரம், திருமணத்திற்குள்ளான வன்புணர்வு உட்பட, திருமணமாகாத பெண்பிள்ளையுடன் இணக்கமுறையிலான பாலியல் உறவுகள் அல்லது வன்புணர்வுகளை தந்தை அல்லது சகோதரர்கள் வைத்திருப்பதன் மூலம் குடும்ப கௌரவம் பாதிக்கப்படுதல், அடக்குமுறைமை, ஆடை ஒழுங்குகளைக் கட்டாயமாக வரையறுத்தல் என்பனவாகும். இந்த நடைமுறைகளானவை பெண்களின் சுய நிர்ணய உரிமையையும் சுதந்திரமான மனிதர்களாக வாழுவதற்கான உரிமையையும் ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன.

நாம் மத சுதந்திரத்திற்கு எதிரானவர்கள் அல்ல. எனினும், பெண்களுக்கு எதிரான பல பாரபட்ச நடைமுறைகளாவன, மதத்தின் பெயரால் பொறுத்துக் கொள்ளப்படுவதை, நாம் எடுத்துக்காட்ட விரும்புகின்றோம். பெண்களின் மனித உரிமைகளை முழு அளவில் அனுமதிக்காத மதத்தின் பெயரால் ஊக்குவிக்கப்படுகின்ற அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பாரபட்சப் நடைமுறைகளானவை சவாலுக்கு உட்படுத்தப்பட வேண்டும் மற்றும் எதிர்க்கப்பட வேண்டுமென நாம் பலமாக நம்புகின்றோம்.


இலங்கை அதன் அரசியலமைப்பு உறுப்புரை 15 (1) இன் மூலம் அனைவருக்கும் உள்ள சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சியைப் பயன்படுத்தும் சுதந்திரம், மத சுதந்திரம், தமது விருப்பத்தின் பிரகாரம் ஒரு மதத்தை அல்லது நம்பிக்கையைக் கொண்டிருப்பதற்கான சுதந்திரம் ஆகியவற்றுக்கு அனைவரும் உரித்துடையோராய் இருப்பதை எடுத்துரைக்கிறது. இலங்கை ஒரு பங்காளராக இருக்கும் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச சமவாயமானது, அனைவரதும் சிந்தனைச் சுதந்திரம், மனசாட்சியைப் பயன்படுத்தும் சுதந்திரம், மத அல்லது நம்பிக்கை மீதான சுதந்திரத்தை பாதுகாக்கிறது. (உறுப்புரை 18) மத மற்றும் நம்பிக்கை உட்பட்ட பல பாரபட்சங்களுக்கு எதிராக பாதுகாப்பு வழங்குகிறது. (உறுப்புரை 2 மற்றும் 26) மேலும் உறுப்புரை 27 ஆனது மத சிறுபான்மையினர் உள்ளிட்ட, சிறுபான்மைச் சமூகத்திற்கு அவர்களின் குழுவினரின் ஏனைய உறுப்பினர்களுடன், தமது சொந்த கலாசாரத்தை அனுபவிக்கவும், தமது சொந்த மதத்தை உரிமை கொண்டாடி அனுசரிக்கவும் அல்லது சேர்ந்த மொழியைப் பயன்படுத்துவதற்கான உரிமையை மறுக்கப்பட முடியாத அளவுக்கு வழங்குகிறது.

எவ்வாறாயினும், இன்று இலங்கையில் நாம் பொதுபலசேன போன்ற குழுக்களால் ஊக்குவிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் அதிகரித்துவரும் சமய சகிப்புத்தன்மையின்மை மற்றும் வன்முறைச் சுழற்சிக்குள் அகப்பட்டுள்ளோம். பொதுபலசேன என்பது ஒரு தீவிரவாத பௌத்த நிறுவனமாக ஒரு பிக்குவினால் வழிநடத்தப்படுகிறது. அவர் தானே தன்னை இனவாதியாக ஏற்றுக்கொண்டுள்ளார். முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்கள் போன்ற பௌத்தர்கள் அல்லாத குழுக்களுக்கு எதிரான தனது வெறுப்பு பிரச்சாரங்களை கொண்டு செல்வதற்கு இந்த பொதுபலசேனாவின் சுதந்திர கட்டுப்பாடற்ற செயல்கள் அனுமதிக்கபட்டுள்ளன.. அதிர்ச்சி தரக்கூடிய பெருமளவில் காடையர்களால் உருவாக்கப்பட்ட இதன் வன்முறையானது, அளுத்கம பேருவளைப் பகுதிகளில் ஆனி 14 – 16 காலப்பகுதியில் நடைபெற்ற நிகழ்வுகளினால் தெளிவாகியுள்ளது. முஸ்லிம் சமூகமானது முற்றுகைக்குள்ளாகியிருப்பதுடன், இந்த வன்முறையை தமிழ் மக்களுக்கு எதிரான 83 ஆடி இனஅழிப்பின் நினைவுகூரலாக கறுப்பு ஆனி எனப் பெயரிட்டுள்ளனர். அச்சம், பதற்றத்திற்கு இடையில் அளுத்கமவில் ஒன்று சேர பொதுபலசேனாவை அனுமதித்ததையும்,

வன்முறையை நிறுத்த முடியாத, அங்கிருந்த சட்ட அமுலாக்கல் அதிகாரிகளின் பிரசன்னத்திலும், ஊடரங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னரும், வன்முறைகளை மேற்கொள்வதற்காக அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த சுதந்திரத் தன்மையால் நாம் அதிர்ச்சியடைகிறோம்.

தண்டனைப் பயமற்ற சமயப் போதகர்களால் பெண்களுக்கு எதிராக, பெண் வெறுப்புப் பேச்சுக்கள் அநேகமாகப் பயன்படுத்தப்படுகிறன. அநேகமாக இந்த பெண் வெறுப்புப் பேச்சுக்கள், இதற்கு உட்படும் பெண்கள் உட்பட பொதுமக்களால் கண்டும் காணாது கொள்ளப்படுகிறன. அல்லது உள்ளகப்படுத்தப்படுகிறன. இது எப்பொழுதும் அநேகமாக கேள்விக்கு உட்படுத்தப்படுவதில்லை. தொடர்ச்சியானதும் சகிப்புத்தன்மையற்றதுமான வெறுப்புப் பேச்சுக்கள், குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பு பேச்சுக்கள், தற்பொழுது கோயில்களில் இருந்து வீடுகளுக்கும், சமூக ஊடகங்கள் ஊடாக, இணைய வழிகளிலும், பொது மற்றும் தனியார் இடங்களில் சமய வைபவங்களிலும், பொறுப்புணர்வற்ற முறையில், வெளிப்படுத்த அனுமதிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம். இப்போக்கை எதிர்ப்பதில் அரசாங்கம் தவறுவதானது அபாயகரமானதாகவும், பொறுப்பற்றதாகவும் உள்ளதுடன் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறையின் அதிக பற்றியெரிவுக்கு இட்டுச் செல்லக்கூடியதுமாகும். மதமானது மேலும் அதிகமாக அரசியல் மயப்படுத்தப்படுதுவதுடன், அரசியல் ஈட்டுகைக்காக பயன்படுத்தப்படுவதையும் நாம் காண்கின்றோம். 2002ஆம் ஆண்டு குஜராத்தில் முஸ்லிம்களின் படுகொலைக்கு பொறுப்பாக இருந்தபோதும், கடந்த மாதம் இந்திய பாராளுமன்றத் தேர்தலில் நரேந்திர மோடி மற்றும் பாரதிய ஜனதா கட்சி என்பனவற்றின் வெற்றியில் இது பெருமளவில் வெளிப்படுத்தப்படுகிறது. பா.ஜ.க கட்சியானது வன்முறையை ஏவிவிடுவதற்கு சிறுபான்மைப் பெண்களை இலக்கு வைத்ததுடன், அதேவேளையில் அவர்கள் மீது கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடுகளை மேற்கொண்டதுடன், மதம், கலாசாரம் மற்றும் இந்துமதத்தைப் பாதுகாப்பது என்ற பெயரில் அவர்களுக்கு எதிராக கட்டுப்படுத்தல் செயற்பாடுகளையும் நிறைவேற்றியது. இது ஒரு அதிதீவிர அபாயகரமான போக்காகும். குறுகிய அரசியல் நலனுக்காக பெரும்பான்மை தன்மை மற்றும் அடக்குமுறை அரசியலைப் பயன்படுத்துவதை தடுப்பது இலங்கையில் எமக்கு ஒரு சவாலாக உள்ளது. யுத்தத்திற்கு பிந்திய மீள் திரும்புதலில் சமாதானத்தையும் சகவாழ்வையும் கட்டியெழுப்ப வேண்டிய ஒரு பல்மத பல்லின பன்மைச் சமுதாயத்தில் தேசிய நல்லிணக்கத்தைப் பேணுவதற்கான வழி இது அல்ல. ■

**குமுதினி சாமுவேல்**





# இஸ்லாத்தில் பெண்களுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இலங்கையில் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும்

அறிமுகம்

உலகின் உள்ள சமயங்களில் இஸ்லாம் அதன் பெயராலேயே சிறப்புத் தன்மையைப் பெற்றுள்ளது. அந்தப் பெயர் அந்த சமயத்திற்குரிய அர்த்தத்தின் சாராம்சமாக அமைந்துள்ளது. இஸ்லாம் என்ற பதத்திற்கான மூல அர்த்தம் சமாதானத்துக்குள் நுழைதல் என்பதாகும். குறிப்பிட்ட மார்க்கத்தைப் பின்பற்றுவோர் முஸ்லிமகள் என அழைக்கப்படுகின்றனர். முஸ்லிம்கள் என்றால், ஒரு நபர் இறைவனுடனும், மனிதனுடனும் சமாதானத்தை மேற்கொள்ளல் என்று பொருள் கூறப்படுகிறது. இறைவனுடன் சமாதானம் என்பதன் பொருள் இறைவனின் சித்தத்திற்கு அல்லது ஆணைக்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்தல் என்பதாகும். மனிதனுடன் சமாதானம் என்பது, தீமைகளிலிருந்தும் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பதிலிருந்தும் விலகியிருப்பது மட்டுமல்ல, மற்றவர்களுக்கு நன்மை செய்தலும் ஆகும். இதற்கான அர்த்தம் குர்ஆனில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. (Ali Mohamed :1950: 2)

இஸ்லாமிய சகோதரத்துவக் கோட்பாடு பால், நிறம், இனம், நாடு, மொழி, தராதரம் என்பவற்றைக் கடந்த மனித ஒருமைப்பாடு என்று குறிப்பிடப்படுகின்றது. ஆன்மீக உரிமைகள் மட்டுமன்றி, சமூக மற்றும் அரசியல் உரிமைகளையும், சமாதானத்தையும் இஸ்லாம் வலியுறுத்துகின்றது. குர்ஆனில் எல்லா மக்களும் ஒரே சமூகத்தவர்களாகவே ஆரம்பத்தில் இருந்தார்கள் என்று குறிப்பிடப்படுகின்றது. இதுவே இஸ்லாத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இஸ்லாமிய மூலக்கோட்பாடுகளும், நியதிகளும் சமய, சமூக, ஒழுக்க விதிமுறைகளும் இரு பெரு மூலாதாரங்களிலிருந்து ஊற்றெடுக்கின்றன. அவை அல்குர்ஆனும், ஹதீஸ் எனும் முகம்மது நபி (ஸல்) அவர்களின் வழிமுறைகளும் ஆகும். இந்த மூலத்திலிருந்தே முஸ்லிம்களின் ஷரீஆ எனும் மார்க்கச் சட்ட வரையறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தச் ஷரீஆ சட்டத்தில் உள்ளவற்றில் எமது நாட்டுக்கு முக்கியமானவை எனக் கருதப்பட்டவற்றைத் தொகுத்து இலங்கை

முஸ்லிம்களின் இஸ்லாமியச் சட்டம் (விவாக விவாகரத்து, வாரிசுரிமை, வக்பு சட்டம்) என்ற பெயரில் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இதில் பெண்கள் தொடர்பான விடயங்கள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

இந்தச் சட்டத்தை மூலத்திலிருந்து மொழிபெயர்த்தவர்களும், சட்டங்களைத் தொகுத்தவர்களும் ஆண்களாகவே இருந்ததால் பெண்களுக்குச் சார்பான கருத்துக்கள் கூட்டியும், குறைத்தும் எழுதப்பட்டுள்ளன.

இதனால் இலங்கையில் இஸ்லாமியப் பெண்கள் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் பாரபட்சப்படுத்தப்படுவதுடன் ஏனைய சமூகத்தவர்களினால் தவறான (இஸ்லாத்தில் பெண்களுக்கு சுதந்திரம் வழங்கப்படவில்லை, அடக்கியாளப்படுகின்றார்கள்) பார்வைக்கும் உள்ளாகின்றனர்.

எனவே, முஸ்லிம்களின் மூலநூலான திருக்குர்ஆனில் பெண்கள் தொடர்பாக உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் இலங்கையில் முஸ்லிம் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்பவற்றை சுருக்கமாக இங்கு நோக்குவோம்.

## திருக்குர்ஆனில் பெண்கள்

திருக்குர்ஆனில் பெண்களுக்கு பால்நிலை, இறப்பின் பின்னர் உள்ள மறுமை வாழ்வு, திருமணம், விவாகரத்து, ஆடை அணிதல், கல்வி கற்றல், வேலைக்குச் செல்லுதல் போன்ற பல விடயங்களிலும் பெண்களுக்கு உரிமையும், சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளன.

### படைப்பில் சமத்துவம்

"...உங்களை ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான். அதிலிருந்து அதற்குரிய இணையை (மனைவியை) படைத்தான்..." (ஸுரத்துன் நிஸா 4:1) இந்த வசனம் ஆணும் பெண்ணும் சமமாகவே படைக்கப்பட்டுள்ளனர் என்பதனைத் தெளிவாகின்றது.

மனித இனத்தின் பொதுத் தோற்றுவாய் ஒரு தெய்வீக அருட்கொடை என வலியுறுத்தப்பட்டிருப்பதன் காரணமாகத் தோற்றுவாய் வழித்தோன்றல் என்பனவற்றின் அடிப்படையில் உயர்வு, தாழ்வுப் பிரச்சினைக்கு இஸ்லாத்தில் இடமேயில்லை. ஒருவனது பிறப்பு, இனம், சாதி, பால் அல்லது மனிதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஏனைய செயற்கையான பிரிவினைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாம் எத்தகைய வரப்பிரசாதங்களையும் எவருக்கும் அளிப்பதில்லை. ஒருவரின் மேதகமை அவரது நேர்மையில் மட்டுமே தங்கியிருக்கின்றது.

ஆனால், இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் சமத்துவமாக நடத்தப்படாதவர்களாகவும், பாரபட்சங்களுக்கும் ஆளாக்கப்பட்டும் வருகின்றனர்.

### திருமணம்

"அநாதைப் பெண்களை மணம் முடித்து அவர்களின் விஷயத்தில் நீதி செலுத்தமாட்டீர்கள் என நீங்கள் அஞ்சினால், மற்றப் பெண்களில் உங்களுக்கு விருப்பமானவர்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக திருமணம் செய்து கொள்ளுங்கள். அவர்களிடையே நீதம் செலுத்தமாட்டீர்கள் என நீங்கள் அஞ்சுவீர்களாயின், அப்பொழுது ஒருத்தியை மட்டும் மணந்து கொள்ளுங்கள்" (ஸுரத்துன் நிஸா 4:3) எனவும், வறுமையான நிலையில் அடிமைகளாக இருக்கும் பெண்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள் (ஸுரத்துன் நூர் 24:32இ33) எனவும் கூறப்பட்டுள்ளன.

இறைவனின் படைப்பில் சமமாகப் படைக்கப்பட்ட பெண்கள் சனத்தொகையில் அதிகரித்தும், வறுமையினால் அடிமைகளாக்கப்பட்டும் இருக்கும் போது, இவர்களைத் திருமணம் செய்து கொண்டால் நான் நீதியாக நடப்பேன் என்ற நம்பிக்கை உள்ள ஆண்களை மட்டுமே ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்யலாம் எனக் கூறப்பட்டுள்ளது. இங்கு திருமணம் செய்துகொள்ளப்படும் அத்தனை பெண்களும் கணவனால் சமமாக நடத்தப்பட வேண்டும். இந்நிலை இலங்கை போன்ற நாடுகளுக்குச் சாத்தியமற்றதாகவே இருந்தாலும், 'ஆண்கள் ஏக காலத்தில் நான்கு திருமணம் செய்யலாம்' எனக் கூறப்பட்டுள்ள இஸ்லாமிய சட்டத்தில் அவருக்குரிய தகமைகள் பற்றி விரிவாக கூறப்படாததால் இது பெண்களுக்கு பெரும் சவாலாகவே உள்ளது.

எடுத்துக்காட்டாக, இலங்கையில் நடைபெற்று முடிந்த யுத்தத்தைத் தொடர்ந்து இலங்கையின் சகல பகுதிகளுக்கும் தொழிலுக்காகச் செல்லும் முஸ்லிம் ஆண்கள் அப்பகுதிகளில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு வறுமை

நிலையிலுள்ள தமிழ்ப் பெண்களையும், முஸ்லிம் பெண்களையும் காதலித்து அவர்களைத் திருமணம் செய்துகொள்வதற்காக தமது சொந்த இடங்களுக்கு அழைத்து வருகின்றனர். இந்தத் தமிழ்ப் பெண்களை இஸ்லாத்திற்கு மதம் மாற்றி வாழ்க்கை நடத்துவதும், சிலர் இடையில் துரத்தி விடுவதும் ஒருபுறம் இருக்க, இவ்வாறு நடந்துகொள்ளும் ஆண்களுக்கு ஏற்கனவே திருமணமான மனைவி, பிள்ளைகள் இருப்பது இன்னொரு புறம். தன் கணவர் இன்னொரு பெண்ணை கொண்டு வந்துள்ளார் எனத் தெரிய வந்ததும் விவாகரத்துக் கேட்டு அலைந்து திரிந்து கவனிப்பாரற்று நிர்க்கதியாக நிற்பது எனத் தொடர்ந்து பெண்களே பாதிக்கப்படுகின்றனர்.

அதேபோல், திருமணமாகி பிள்ளைகளுடன் வாழ்ந்துகொண்டிருப்பவர்களும் இன்னுமொரு திருமணம் செய்து தமது முதல் மனைவியையும் பிள்ளைகளையும் கவனிக்காமல் விடுவது சாதாரணமாக உள்ளது. விவாகரத்துக் கேட்டு சென்றதும் 'தலாக்' சொல்வதற்கு முன்னரே சில ஆண்கள் ஹாதியாருக்குத் தெரிவிக்காமல் வேறொரு திருமணம் செய்து விடுகிறார்கள். இங்கு இன்னொரு முக்கியமான விடயம் என்னவெனில் தலாக் சொல்வதற்கு முன்னரே பதிவுத் திருமணம் செய்யும் போது அங்கு ஆண்களே பதிவாளர்களாக இருப்பதால் அவர்கள் ஆண்களுக்குப் பக்கச்சார்பாக நடந்து கொள்கின்றனர். எனவே, இவை அனைத்தும் சர்வசாதாரணமாக நடப்பது இலங்கையிலுள்ள முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திலுள்ள குறைபாட்டினாலே எனலாம். இவ்வாறான செயற்பாடுகளினால் முஸ்லிம்பெண்கள் வன்முறை, தனிமை, வறுமை எனப் பலதரப்பட்ட பிரச்சினைகளைத் தற்காலத்தில் எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

- திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் தம்மிடையே உடலுறவு ஏற்படுவதற்கு முன்னரே இருவரும் பிரிந்தால் அல்லது விவாகரத்து பெற்றுவிட்டால் குறிப்பிட்ட அந்தப் பெண் 'இத்தா' இருக்கவேண்டியதில்லை. அவளுக்கு நன்மை ஏற்படக்கூடியவாறு அவளை நன்றாக அனுப்பிவைக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. (ஸுரத்துன் அஹ்ஜாப் *33:49*)

ஆனால், விவாகரத்துச் செய்து கொள்ள விரும்பும் தம்பதிகளில் பெண் மூன்று மாதங்களும், கணவர் இறந்துவிட்டால் அவரது இறப்பிலிருந்து நான்கு மாதங்களும் 10 நாட்களுக்கும் ஒரு பெண் இத்தா இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இங்கு குறிப்பிடப்படும் 'இத்தா' என்பது பெண் கணவரைப் பிரிந்த நாளிலிருந்து வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் வேறு திருமணம் செய்யாமல் சற்று கட்டுப்பாடாக இருக்க வேண்டும். ஏனெனில் சிலவேளைகளில் அந்தப் பெண் கர்ப்பம் தரித்திருந்தால் மூன்று மாதத்தில்தான் தெரிய வரும். இக்காலத்திற்குள் வேறு திருமணம் செய்திருந்தால் குழந்தையின் தந்தை யார் என்கின்ற பிரச்சினை ஏற்படும். எனவே, இதிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதற்கே இத்தா இருத்தல் பெண்களுக்கு குர்ஆனில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இத்தா இருக்கும் பெண்ணை சமூகம் கடுமையான கட்டுப்பாட்டிற்குள் உட்படுத்தி வைத்திருப்பது குர்ஆனில் குறிப்பிடப்பட்டதற்கு முரண்பாடானதாகவே உள்ளது எனலாம்.

- ஒரு பெண் பாலியல் தொழிலில் ஈடுபடுகிறாள் எனத் தெரிந்தால் அதை நான்கு சாட்சியங்கள் நிரூபிக்க வேண்டும். அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்தப் பெண் இறக்கும் வரை அல்லது அவளுக்கு ஏதாவது ஒரு முடிவு கிடைக்கும் வரை அவளை வீட்டில் பாதுகாப்பாக வையுங்கள் என ஸுரத்துன்னிஸா *4:15* குறிப்பிடப்பட்டுள்ளது.

- ஆனால், இன்றைய சமூகத்தில் பெண் பாலியல் தொழிலில் ஈடுபடுகிறாள் என ஏதாவது கதை வந்துவிட்டால் போதும், அதை நிரூபிக்க சாட்சியங்களையோ அந்தப் பெண் அவ்வாறு நடந்து கொள்வதற்கான காரணங்களையோ தேடுவதில்லை. இன்னும் அந்தப் பெண் தொடர்பான விமர்சனங்களைக் கூறி எந்தளவுக்கு அவளையும் அவளது குடும்பத்தையும் இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவிற்குப் பேசி அவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கிவிடுகின்றனர். எனவே, இது குர்ஆனில் குறிப்பிட்டதற்கு முரணாகப் பெண்களை அவதூறுபடுத்தும் நிலையையே வெளிப்படுத்துகின்றது.

<u>நன்கொடை (மஹர்)</u>

"நீங்கள் மணந்து கொண்ட பெண்களுக்கு, அவர்களுக்குரிய மஹர்களை மகிழ்வோடு கொடுத்துவிடுங்கள். ஆகவே, அவர்கள் அதிலிருந்து மனமொப்பிக்

கொடுப்பார்களாயின், அதனை மகிழ்வுடன் தாராளமாக உண்ணுங்கள்'' (ஸுரத்துன்னிஸா 4:4) எனக் கூறப்பட்டுள்ளது.

அதாவது, குர்-ஆனின்படி ஒரு ஆண் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமாயின் திருமணம் செய்யவிருக்கும் ஆண் திருமணம் செய்துகொள்ளவுள்ள பெண் விரும்பும் பொருளை நன்கொடையாகக் கொடுத்தே திருமணம் செய்ய வேண்டும். அவ்வாறு அவர் அவளுக்குக் கொடுக்கும் நன்கொடையிலிருந்து அவள் மனம் விரும்பி கணவருக்கு கொடுத்தால் மட்டுமே அவர் அதனை அனுபவிக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

ஆனால், குர்ஆனில் எந்த இடத்திலும் பெண் ஆணுக்கு சீதனம் வழங்குவது பற்றிக் கூறப்படவில்லை. எனினும், இன்றைய இலங்கை முஸ்லிம் சமூகத்தில் குறிப்பாக கிழக்கு மாகாண முஸ்லிம் சமூகத்தில் தமிழ் சமூகத்தைப் போல சீதனப் பேச்சுவார்த்தை நிறைவேறிய பின்னரே திருமணம் நடைபெறுகின்றது. முக்கியமாக பெண் வீட்டுக்காரர் வீடும், பெண்ணிற்கான அணிகலன்களும், மாப்பிள்ளை வீட்டுக்காரர் கேட்டால் பணம் போன்றவற்றையும் கொடுக்க வேண்டும். திருமணத்தின் போது மாப்பிள்ளை 'மஹர்' என்னும்போது அவர் விரும்பியவற்றையே பெண்ணிற்கு கொடுப்பார். இதனை தமது சமயத்தில் கூறப்பட்டுள்ளது என மற்றவர்களுக்குப் பறைசாற்றுவார். ஆனால், தான் பெண்ணிடம் வாங்கும் சீதனம் ஹராம் என்பது பற்றி தமது சமயத்தில் கூறப்பட்டுள்ளது என்பதனை மறைத்து விடுவார். இந்நிலைமை இன்று இஸ்லாமியப் பெண்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவே உள்ளது.

ஆடை அணிதல்

பெண்கள் தங்களது உடலுறுப்புகளை (வெட்கத் தலங்களை) பேணிக்கொள்ள வேண்டும். இதற்காக தலை, கழுத்து, நெஞ்சுப் பகுதிகளை மறைக்க மேல் சட்டைகளைப் போட வேண்டும். மேலும், ஒரு பெண்ணின் அலங்காரத்தை தனக்குத் திருமணமுறையற்றவர்கள் (இரத்த உறவினர்) தவிர வேறு எவருக்கும் வெளிப்படுத்தக் கூடாது என ஸுரத்துன் நூர் 24:30 குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, மெல்லிய ஆடைகளை அணியாது, தலைமுடி, கை மணிக்கட்டு மறையும்படியாக பெண் ஆடை அணிய வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

இவை பெண்ணைப் பாதுகாக்கும் நோக்கத்தில் கூறப்பட்டுள்ளதே தவிர பெண்ணை அடக்கும் முறையில் கூறப்படவில்லை.

ஆனால், "வஹாபி" என்ற முஸ்லிம் பிரிவினரே முகத்தை முற்றுமுழுதாக மூடிக்கொள்பவர்கள். இவர்கள் முகத்தை மூடிக்கொள்ளாத முஸ்லிம் பெண்களைக் குறைந்தவர்களாகவும், முஸ்லிம்கள் என ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள் எனவும் குற்றம்சாட்டி இழிவாகப் பார்க்கின்றனர்.

அத்துடன், ஹபாயாவினை முஸ்லிம் பெண்கள் அணியவேண்டும் என்ற கருத்து சமூகத்தால் உருவாக்கப்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் இயங்கும் முஸ்லிம் மாணவர்களின் சங்கமான 'முஸ்லிம் மஜ்லிஸ்' என்ற அமைப்பு பெண் மாணவிகளை கறுப்பு ஹபாயா அணியுமாறு பணிக்கின்றனர். இங்கு வறுமையில் இருக்கும் பெண் மாணவிகள் ஆயிரத்திற்கு மேற்பட்ட விலைகொடுத்து கறுப்பு ஹபாயா வாங்குவதற்கு கஷ்ரப்படுவதும், தான் விரும்பிய நிறத்தில் ஆடை அணிய வேண்டும் என ஆசைப்படும் பெண் மாணவிகளின் ஆசைகள் அடக்கப்படுவதையும் எம்மால் அவதானிக்க முடிகின்றது.

மேலும், வழமையாக ஹபாயா அணிந்த பெண் சுரிதார் அல்லது சேலை அணிந்துவிட்டால் முஸ்லிம் சமூகம் அந்தப் பெண்ணின் நடத்தை மீது சந்தேகப்படுவதாகப் பார்க்கும் நடைமுறை குறிப்பிட்ட சமூகத்தில் உள்ளது. ஆடை என்பது இன்று பெரும்பாலான முஸ்லிம் பெண்களுக்கு பெரும் பிரச்சினையாகவே உள்ளது.

கல்வி

இஸ்லாம் ஒவ்வொரு மனிதனும் கல்வியைத் தேடுவதை ஒரு சன்மார்க்கக் கடமையாக்கியிருக்கின்றது. அது சமயம் சார்ந்த கல்வியாயினும் சரி, சமயம் சாராத கல்வியாயினும் சரி அதனைத் தேடும் கடமை ஒவ்வொருவருக்கும் (ஆண், பெண்) பொதுவானது என இஸ்லாமிய அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

அத்துடன், இறைதூதர் (ஸல்) அவர்கள் ஹதீஸில் பெண்களின் கல்வியை வன்மையாக ஆதரித்துள்ளார். "கல்வியைத் தேடுவது ஆண், பெண் இருபாலாரதும் கடமையாகும்" என்பது அவரின் பிரபலமான ஹதீஸாகும்.

மேலும்,

> '... ஓதுவீராக! உம் இறைவன் மாபெரும் கொடையாளி. அவனே எழுதுகோலைக் கொண்டு கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக்கொடுத்தான்'' *(குர்ஆன், 96:1-5)*

என்ற திருக்குர்ஆன் வாக்கியம் மூலம் இறைவன் கொடுத்த கல்வியை யாவரும் கற்க வேண்டும் என்பதைப் பொதுவில் மனித குலத்திற்கான ஒரு தவிர்க்க முடியாத சிந்தனையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், இன்றைய முஸ்லிம் சமூகத்தில் பெண்பிள்ளைகளை உயர் கல்விவரை கற்பதற்கு அனுமதிப்பது குறைவாகவே உள்ளது. கல்வியை இடைநிறுத்திவிட்டு பெண் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்துவிடுகின்றார்கள். சில பெண்கள் உயர்கல்வியைத் தொடர்வதற்கு ஆசைப்பட்டாலும் அவர்களது ஆசை நிறைவேற்றப்படாமல் ஒடுக்கப்படும் நிலைமை காணப்படுகின்றது.

## முடிவுரை


இஸ்லாத்தில் சூழல், கலாசாரத்துடன் முரண்படாமல் நெகிழ்வுத் தன்மையுடன் வாழக்கூடிய சட்டதிட்டங்கள் பெண்களுக்குத் தாராளமாகவே வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதில்தான் பிரச்சினை ஏற்படுகிறது. ஏனெனில், நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாட்டைச் செய்பவர்கள் ஆண்களாகவே இருப்பதனால் பெண்களுக்குப் பாராபட்சம் இழைக்கப்படுகின்றது. எனவே, இலங்கைச் சமூகத்தில் பெண்களுக்கான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தும் ஏற்பாடுகளைச் செய்வதில் பெண்களையும் உள்வாங்கி, அவர்களது கருத்துக்களையும் கவனத்தில் எடுப்பார்களானால் இஸ்லாத்தில் கூறப்பட்டுள்ளவாறு பெண்களுக்கு உரிமைகளை வழங்கவும், ஏனைய சமூகத்தவர்கள் இஸ்லாமிய சமயப் பெண்கள் மீது கொண்டுள்ள தப்பபிப்பிராயங்களை இல்லாமல் செய்யவும் முடியும். ■


எஸ். சுமித்திரா

Ali, M. (1950) **The Religion of Islam**, Lahoor

*அல்குர்ஆன் (மொழி.பெ) (1992) மன்னர் /பஹ்து புனித முஸ்ஹப் அச்சக வளாகம்.*

■ ■ ■





# எங்களின் சிறகுகள் எமக்குரியவையே!

## அறிமுகம்

இஸ்லாம் என்றதும் அனேகருக்கு நினைவில் எழுவது, பெண்ணடிமைத்தனம்தான். இது தொடர்பில் இஸ்லாம் மதம் காலங்காலமாகப் பல்வேறு காரசாரமான விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் எதிர்கொண்டு வருவதை நாம் அறிவோம். குறிப்பாக, இன்று உலகின் பலபாகங்களிலும் மலாலா யூசுப் எனும் முஸ்லிம் சிறுமியை முன்வைத்து, முஸ்லிம் பெண்களுக்குக் கல்விஉரிமை மறுக்கப்படுவதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டின் பின்னணியில் இருப்பது, மதமா? மதஅடிப்படைவாதிகளா என்ற கேள்வி மிகமுக்கியமானது. அந்தவகையில், இக்கட்டுரை இஸ்லாத்தில் பெண்களின் கல்விஉரிமை என்ற அம்சம் குறித்த இஸ்லாத்தின் கண்ணோட்டம், நடைமுறையில் உள்ள இடைவெளிகள், அவற்றுக்கான காரணங்கள் என்பன பற்றிய சிறு அலசலாகவே அமைகின்றது.

## பெண்களின் கல்வி உரிமை

இஸ்லாம்,"கல்வியைத் தேடிப் பெறுவது முஸ்லிமான ஆண் - பெண் இருபாலார் மீதும் கடமையாகும்"என்று கூறுகின்றது. இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் பெரும் கல்விமான்களாய், ஆசிரியைகளாய் அமைந்த பெண் கல்விமான்கள் பலர் இருந்து வந்துள்ளனர். முஹம்மது நபி அவர்களின் மனைவியர், அவர் காலத்தில் வாழ்ந்த பெண்கள் என கல்வியிலும் மார்க்கப் பணிகளிலும் முஸ்லிம் பெண்கள் முன்னணியில் இருந்துள்ளனர். புகழ் பெற்ற இஸ்லாமிய அறிஞர் இமாம் ஷாபிஈயின் ஆசிரியர்களில் ஒரு பெண்மணியும் இருந்துள்ளார். அவ்வாறே, ஆயிஷா அப்துர் றஹ்மான் என்ற பெண்மணி அல்குர் ஆனுக்கு விளக்கவுரை எழுதி உள்ளார். நவீன இஸ்லாமிய அறிஞர்களான அல்லாமா யூசுப் அல் கர்ளாவி, ராஷித் அல் கன்னூஷி ஆகியோரின் மகள்மார் முறையே பல்கலைக்கழகப் பேராசிரியைகளாய் கலாநிதிப் பட்டம் பெற்றவர்களாய் சமூகக் களத்தில் முன்னோடி முஸ்லிம் பெண்களாய் சமகாலத்தில் வாழ்ந்து வருகின்றனர். இவைபோன்ற ஆயிரக்கணக்கான உதாரணங்களை இஸ்லாமிய வரலாறு கொண்டிருக்கின்றது.

இன்று நம் நாட்டில் ஒப்பீட்டளவிலே முஸ்லிம் ஆண்களை விட முஸ்லிம் பெண்கள் அதிகளவு கல்வி கற்கின்றனர். குறிப்பிடத்தக்க அளவிலான பெண்கள் உயர்கல்வியைப் பெற்று, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

அதேநேரம், பெண்களில் மற்றொரு கணிசமான பிரிவினர் உயர் கல்வியைத் தொடரக்கூடிய திறமையைக் கொண்டிருந்தும், உயர்கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படும் துர்ப்பாக்கியமான நிலையினை எதிர்கொண்டு வருகின்றனர் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும். இதன் காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்:

அ) திருமண வயது தள்ளிப் போகின்றது, திருமணச் சந்தையில் உயர் கல்விகற்ற பெண்களுக்கு ஏற்ற வரன்களைத் தேடுவது சிரமம் என்கின்ற பெற்றோரின் அச்சம்

ஆ) கல்வியை உலகக் கல்வி, மார்க்கக் கல்வி என்று வேறுபடுத்தி, கல்வி கற்பது தொடர்பான இஸ்லாத்தின் கூற்றை சில"முல்லாக்கள்" மார்க்கக் கல்வியையே அதுகுறிக்கின்றது என்றும் திரிபுபடுத்தி மக்களிடம் பரப்பி வருகின்றமை

இ) ஆணாதிக்கச் சமூகக் கட்டமைப்பில் உயர் கல்வி கற்ற பெண்கள் தொடர்பில் கட்டியெழுப்பப்பட்டுள்ள எதிர்மறையான கருத்துகளும், மத அடிப்படைவாதிகளின் மனதில் உள்ள தாழ்வுச்சிக்கலும், வீடுகளில் தமக்கான சொகுசுகள் மற்றும் சௌகரியங்கள் பறிபோய்விடுமோ என்ற அச்சவுணர்வும்

ஈ) பெண்களில் ஒருசாராரிடம் இதுதொடர்பில் காணப்படும் ஆர்வமின்மையும் அசட்டை மனப்பாங்கும்

உ) திருமணத்தின் பின் உயர்கல்வி தடைப்படல்

இக்காரணங்கள் தனித்தோ ஒன்றிணைந்தோ முஸ்லிம் பெண்களின் உயர் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. குறிப்பாகத் திருமண வாழ்வில் இணையும் பெண்களில் அனேகருக்கு உயர் கல்வி வாய்ப்பு சாத்தியப்படுவதில்லை. வேலைப்பளு, கணவனும் மனைவியும் வீட்டுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்ளுதல் குறித்த விழிப்புணர்வு இன்மை, ஆண்கள் வீட்டுவேலைகள் செய்வது தொடர்பில் பாரம்பரியமாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள எதிர் மனநிலை, பெண்களின் உயர்கல்வியின், அவர்களின் சமூகப் பங்களிப்பை ஊக்குவிப்பது தொடர்பிலான ஆர்வமோ விருப்பமோ இன்மை முதலான இன்னோரன்னஅம்சங்கள் இதில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பெண்களில் அனேகர் இது பற்றிய விழிப்புணர்வு மழுங்கடிக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

**"இன்று நம் நாட்டில் ஒப்பீட்டளவிலே முஸ்லிம் ஆண்களை விட முஸ்லிம் பெண்கள் அதிகளவு கல்வி கற்கின்றனர். குறிப்பிடத்தக்க அளவிலான பெண்கள் உயர்கல்வியைப் பெற்று, பல்வேறு தொழில்களில் ஈடுபட்டும் வருகின்றனர். அதேநேரம், பெண்களில் மற்றொரு கணிசமான பிரிவினர் உயர் கல்வியைத் தொடரக்கூடிய திறமையைக் கொண்டிருந்தும், உயர்கல்வி வாய்ப்புகள் மறுக்கப்படும் துர்ப்பாக்கியமான நிலையினை எதிர்கொண்டு வருகின்றனர் என்பதையும் நாம் கவனத்திற் கொள்ளவேண்டும்."**

"சிறந்த தாய்மார்களை உருவாக்குதல்"என்ற சுலோகத்துடன் (moto) நடத்தப்படும் முஸ்லிம் பெண்கள் மத்ரஸாக்களின் மறைமுகப் பங்கும் இதனோடு பின்னிப் பிணைந்துள்ளது என்பதை நாம் மறுக்கமுடியாது.

## முடிவுரை

முஸ்லிம் பெண்களின் உயர் கல்வி தொடர்பான இப்பிரச்சினை தீர்க்கப்படுவதில் உள்ள மிக அடிப்படையான அம்சம் சமூக மனநிலை மாற்றமே ஆகும். இந்த சமூக மனப்பாங்கை மாற்றுவதில் பெண்களின் வகிபாகம் (role) மிகமுக்கியமானதாகும்.

அந்தவகையில்,'இஸ்லாத்தின் போதனைகளில் பெண்ணின் கல்வி உரிமைக்கு முழு உத்தரவாதம் இருந்தது. இஸ்லாமிய வரலாறு நெடுகிலும் பெண்ணின் கல்விநிலை மிகுந்த முன்னேற்றத்துடன் காணப்பட்டது'என்ற அம்சத்தை சமூகத்தில் நிலைநிறுத்தும் வகையிலான சுயதேடலையும் அதனடியான தெளிவான அறிவையும் அதிகமதிகம் வளர்த்துக் கொள்வதன் மூலமும் அதனை மிகுந்த அழுத்தத்தோடு சமூகத்தில் பரப்பி விழிப்புணர்வூட்டுவதன் மூலமுமே முஸ்லிம் பெண்கள் இப்பிரச்சினையை மிக வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியதாய் இருக்கும். ஏனென்றால், மதஅடிப்படைவாதிகள் இவை பற்றிய கதையாடலுக்குப் பெரும்பாலும் முக்கியத்துவமளிப்பதில்லை என்பதோடு, அவற்றை இயன்றளவு இருட்டடிப்புச் செய்வதிலும் அதிக முனைப்போடு செயற்பட்டு

வருகின்றமை குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் பெண்கள், அவர்களின் உரிமைகள் குறித்து மேலெழும் கதையாடல்களை (discourse), "இஸ்லாத்துக்கு எதிரான மேலைத்தேய மூளைச்சலவை சிந்தனை" என்ற ரீதியில் முத்திரை (brand) குத்தி,எதிர்மறையான விம்பங்களைக் (image) கட்டியெழுப்புவதன் மூலம் ஒருவகையான சிந்தனை மழுங்கடிப்பை "முல்லாக்கள்" ஊக்குவிக்கின்றனர்.

இந்தநிலை மாறவேண்டும் எனில், முள்ளை முள்ளால் எடுப்பது போல, இஸ்லாத்தின் அடிப்படைகளையும், இஸ்லாமிய வரலாற்றையும், குறிப்பாக பல்வேறுதுறைகளிலும் பங்களிப்புகளைச் செய்து சாதனைகள் செய்துள்ள முஸ்லிம் பெண் ஆளுமைகளையும் பற்றி முஸ்லிம் பெண்கள் அதிகத் தெளிவு பெறுவதன் மூலம், இஸ்லாத்தின் பெயரால் பெண்களின் கல்வி உரிமை முதலான இன்ன பிற அடிப்படை உரிமைகளை மறுதலிக்கும் மத அடிப்படைவாதிகளை மிக வெற்றிகரமாக எதிர்கொள்ளக் கூடியதாய் இருக்கும்.

இஸ்லாம் என்பது முஸ்லிம் பெண்களுக்குமானது. அதனை ஆண்களுக்கு மட்டுமானதாகக் குறுக்கி, பெண்களை இரண்டாம் நிலைக்குப் புறந்தள்ளப்படவோ, ஆண்களுக்குச் சாதகமான ஒருதலைப்பட்ச அம்சங்கள் மட்டும் மேலெழுவதையோ ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்ற திடவுறுதியோடு முஸ்லிம் பெண்கள் தம்மைத் தம்மளவிலும் சமூகக் களத்திலும் உறுதியாக நிலைநிறுத்திக் கொள்ள முன்வரல் வேண்டும். ■

**லறீனாஅப்துல் ஹக்**



# பெண் பிள்ளைகளை தெய்வீகத் தன்மைக்கு கொண்டுவரும் நேபாளத்தின் சம் பிரதாயம்

கிராமமொன்றில் பெண்கள் தீவிரவாதிகளின் வன்முறைக்கு உள்ளாகும் வேளையில் மற்றுமோர் இனக்குழு பெண் தெய்வங்களுக்கு பூஜைகளை நடத்துகின்றன. இந்து மதத்தில் ஸ்ரீலக்ஷ்மி, சரஸ்வதி, துர்க்கை, பத்ரகாளி அம்மன் ஆகிய தெய்வங்கள் இவர்கள் பிரதானமாக உள்ளனர். கத்தோலிக்க மதத்தில் மரிய மாதா மிகவும் பக்தியுடன் வணங்கப்படுகின்றார்.

இதேவேளை நேபாளத்தில் பூப்படையாத பெண் பிள்ளையொன்றினை இளவரசியாக அபிஷேகம் செய்வதோடு, தெய்வீகத் தன்மையுடன் மதிக்கப்படும் சம்பிரதாயம் உள்ளது. அவர் துர்க்கையின் சிறுபராயத்தினராகக் கொண்டு "தலேஜூ" என அழைக்கப்படுகின்றார். இளவரசி என்பதனால் கருதப்படுவது கண்ணிப் பெண் என்பதாகும். தமது குடும்பத்திலிருந்து ஒரு பெண் பிள்ளை இதற்காக தேர்ந்தெடுக்கப்படுவதை அவர்கள் பாக்கியமாக கருதுகின்றனர். இந்தப் பிள்ளைகளின் உடலுக்கு எத்தகைய பாதிப்பும் ஏற்படாதவாறு அவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். அவர்கள் பல்லாக்கில் தூக்கிச் செல்லப்படுவதுடன், பல்லாக்கிற்கும் பூஜைகள் நடைபெறும் இடங்களுக்கும் இந்த பிள்ளைகளை தந்தையினால் சுமந்து செல்லப்படுவார்கள்.

தெய்வீகத் தன்மையுடன் குறிப்பிட்ட பிள்ளையை மற்றவர்கள் வணங்கினாலும் இதில் காணப்படும் ஓர் பாதகமான தன்மை யாதெனில், இந்தப் பெண் பருவமடையும் போது அவளை திருமணம் செய்துகொள்ள எந்தவோர் இளைஞனும் முன்வருவதில்லை. அவளை திருமணம் செய்துகொள்ளும் ஆண் மரணித்துவிடுவார் என அவர்கள் நம்புவது இதற்கு காரணமாகும். ■

# பெண்களைத் தாக்கும் மதவாதம்

ஓர் இனத்தின் அல்லது மதத்தின் செயற்பாடுகளின் தீவிரநிலை தொடரும்போது குறிப்பிட்ட மதத்தை அல்லது இனத்தைச் சேர்ந்த பெண்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிப்புக்குள்ளாகின்றனர். இதற்கு ரிசானா நவ்வீக் மற்றும் ஸர்மிளா ஸெய்யித் ஆகியோரது அண்மைக்கால சம்பவங்கள் எடுத்துக் காட்டாகவும் சான்றாகவும் அமைகின்றன. முஸ்லிம் பெண்ணான ஸர்மிளா ஸெய்யித் பொதுத் தளத்தில் ஒரு பெண்ணாக நின்று செயற்படுகின்ற போது அவரது சமூகத்தில், குறிப்பாக ஆண்களால் பல்வேறு நிலைகளில் எதிர்ப்புக்குள்ளாகி மழுங்கடிக்கப்பட்டது சமய ரீதியில் பெண் அடக்குமுறையின் உச்சபட்ச வெளிப்பாடாகும்.

பெண்கள் மீதான மத ஆதிக்கத்தின் மற்றொரு வன்முறைச் செயலாக அண்மையில் கொடூரமாக கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட ரிசானா நவ்வீக் மீதான சவூதி அரசாங்கத்தின் அநீதியான அதிகாரச் செயலைக் கூறலாம். அதாவது போதியளவிலான மற்றும் நீதியான விசாரணைகள் மேற்கொள்ளப்படாது இச்செயலை ஷரிஅத் சட்டத்தைக் காரணமாகக் காண்பித்து ஒரு பெண் அப்பட்டமாகக் கொலை செய்யப்பட்டதைக் கண்டனம் செய்யாது, குறிப்பாக மதவாதிகள் ஒன்றாகச் சேர்ந்து அர்த்தப்படுத்துகிறார்கள். இறந்த குழந்தை தொடர்பான விஞ்ஞான ரீதியான மருத்துவ பரிசோதனை ஆதாரங்களையோ அல்லது குற்றப்புலனாய்வு முறைமைகளைப் பின்பற்றியோ, ரிசானா தொடர்பான போதியளவு நீதியான வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ளப்படாதது குறித்தோ அக்கறைப்படாது தன்னிச்சையாக நிறைவேற்றப்பட்ட அதிகார ஆதிக்க மிலோச்சைத்தனமாகவே



http://cpnagasaki.files.wordpress.com/2014/02/islam-domestic-violencecapture.jpg

அமைகிற ரிசானாவினது கொலையை நியாயப்படுத்துவதிலேயே மதவாதிகள் கவனம் எடுத்துக் கொண்டுள்ளனர்.

ஷரிஅத் சட்டம் எல்லா முஸ்லிம் நாடுகளிலும் ஒரே மாதிரிப் பின்பற்றப்படுவதில்லை. பல நாடுகள் ஷரிஅத் சட்டத்தைப் பின்பற்றும் போக்கில் பல மாற்றங்களை உள்வாங்கி உள்ளன. நாட்டுக்கு நாடு ஷரிஅத் முறைமை அமுலாக்கம் வேறுபடுகிறது. நாகரீகம் வளர வளர இம்மாற்றங்கள் இடம்பெறுகின்றன. ஆனால் சவூதி அரசாங்கத்தால் இலங்கைப் பணிப் பெண்கள் மட்டுமல்லாது தெற்காசிய மற்றும் ஆபிரிக்க நாட்டுப் பணிப் பெண்களும் அடிமைகளாக சவூதி அரசாங்கத்தின் ஹபீர் சட்டத்தின் பிரகாரம் நடத்தப்படுகிறார்கள். ஹபீர் சட்டமானது அடிமைகளைப் பராமரிக்கும் ஆதிகால வழிமுறை. ரசூலுல்லாவைப் பின்பற்றுபவர்கள் ஏன் கீழைத்தேசப் பெண்கள் அடிமைகளாக நடத்தப்படுவதைக் கேள்வி கேட்பதில்லை? கேள்வி கேட்பவர்களையும் ஏன் எதிர்க்கிறார்கள்?

ஸர்மிளா ஸெய்யித் பாலியல் தொழில் தொடர்பாக கருத்துக் கூறிய போது அவரது வீடு வரை சென்று எதிர்ப்புத் தெரிவித்து வன்முறைகளை நிகழ்த்தியதோடு மட்டுமன்றி, ஸர்மிளா கூறிய கருத்திற்கு அவரை மன்னிப்புக் கேட்க வைக்கும் நோக்கோடு ஒரு குழுவையே நியமித்த முஸ்லிம் ஆதிக்க மதவாதிகள், ஸர்மிளா ஸெய்யித்தின் கருத்திற்கு எதிராக வாரிக்கட்டிக் கொண்டு கண்டன அறிக்கைகளை வெளியிட்ட தலைவர்கள், ரிசானா நவ்வீக் அநியாயமாகக் கொல்லப்பட்ட போது எதிர்த்து குரல் கொடுக்க முன்வரவில்லை. ஏன்? சவூதி அரசை பகைக்க இங்கு யாருக்கும் துணிவில்லை. தமது பொருளாதார வருமானம் மற்றும் ஹஜ் பயணத்திற்கான கோட்டாவைத் தக்கவைப்பதற்காகவே அமைதி காத்துக் கொண்டு இஸ்லாமிய சட்டம், அதனை எதிர்க்க முடியாதது எனக் கூறிக் கொள்கின்றனர்.

சவூதி என்பது சவூத் என்கின்ற மன்னர் குடும்பத்தைச் சார்ந்த பெயர். அதாவது ஒரு அரச குடும்பத்தின் பரம்பரையினது பெயரையே அந்நாட்டின் பெயராகக் கொள்ளப்பட்டுள்ளது. இதனூடாக சவூதி நாட்டின் அரசாங்கமானது எவ்வளவு தூரம் வர்க்க ரீதியான பலத்தையும், செல்வாக்கையும் தக்கவைத்துள்ளது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இலங்கையில் யுத்த வெற்றியின் பின்னர் பெரும்பான்மை மதத்தின் மத ஆதிக்கம் அல்லது மத வெறி பரவலாக கோலோச்சுகிறது. தற்போது முஸ்லிம் மதத்திற்கு எதிரான பௌத மதவாதிகளது அடக்குமுறைகள் பரவலாக அதிகரித்த வண்ணம் உள்ளன. பெரும்பான்மையினரின் பரவலான ஆதிக்க நிலையினால் சிறுபான்மை மதத்தவர்களது உரிமைகள் பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அத்தோடு, சிறுபான்மை இனத்தவர்களுக்காக இந்த நாட்டில் உள்ள இறுதியான மற்றும் எஞ்சியுள்ள ஒரு சில கட்டமைப்புகளான நீதி, சட்டம் போன்றவற்றையும் சிறுபான்மை இனத்தவரது மௌனம் நலிவுபடுத்துகின்றது. காணாமல்போனோர், பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட பெண்கள், பெண்களது காணி உரிமை எனப் பெண்கள் நீதி தேடிச் செல்லும் இடம் நீதிமன்றாகும். அதாவது அநீதி எனப் பெண்களுக்கு இடம்பெறும் அநியாயங்களைச் சுட்டிக் காட்டும் இடம் நீதிமன்றமேயாகும். இலங்கையில் அதுவும் இன்று அதிமேதகு ஜனாதிபதி அவர்களது அதிகாரத்திற்குள் அடக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பொது பலசேன, இலங்கை பாதுகாப்புப்படை என்பன சிறுபான்மை இன, மதத்தவரது கலாசார அடையாளங்களை திட்டமிட்டு அழித்து வருகின்றன. சிறுபான்மை சமூக பொருளாதார அடித்தளத்தை அதாவது பொருளாதாரம் ஈட்டும் வழிமுறைகளை சுருக்கிக் கொண்டு செல்லும் போக்கைக் காணலாம். எடுத்துக்காட்டாக No Limit என்ற வர்த்தக ஸ்தாபனத்தின் முன்னரான ஆர்ப்பாட்டம் மற்றும் ஹலால் உணவுச் சான்றிதழ் தொடர்பான வாதம் போன்றவற்றைக் கூறலாம்.

வடக்குக் கிழக்குப் பகுதியில் எண்ணற்ற இந்து ஆலயங்களை அழித்து விட்டு புத்த விகாரைகளை அமைத்தும், ஊர்ப் பெயர்களை சிங்களப் பெயர்களாக மாற்றியும் இராணுவ நடடிவக்கைகள் வாயிலாக சிங்கள நகரமயமாக்கல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ வணக்க ஸ்தலங்கள் மீதான மத வெறித் தாக்குதல்களை பௌத்த மதத் துறவிகளே முன்னின்று நடாத்துவது வருந்தத்திற்குரியது. இத்தருணத்தில் பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த நாங்கள், சிறுபான்மை இனத்தைத் சார்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து ஏகாதிபத்தியத்தைக் கையில் கொண்டு செயற்படுபவர்களைக் கேள்வி கேட்காத நிலையைப் பார்த்து மிகவும் அதிருப்தி அடைந்துள்ளோம்.

குறிப்பாக முஸ்லிம் தலைமைகள் உயர் பீடத்தை பகைக்க மனம் இன்றி உரிய கட்டமைப்புகளுக்கூடாகத் தமது பிரச்சினைக்குத் தீர்வு பெறாது ஆதிக்கம் செலுத்தும் குடும்பத்திற்கும் அவர்களது சகோதரர்களுக்கும் பணிந்து போகின்ற போக்குக் காணப்படுகிறது. இதனால் தமது தனித்துவத்தை இழந்து சோரம் போக வேண்டியுள்ளது. இவர்கள் எல்லோருக்கும் எடுத்துக்காட்டாக அஷ்ரப் நகரினை இராணுவம் வலுக்கட்டாயமாகத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தோடு மட்டுமன்றி அங்கு வசித்த 69 கும்பங்களையும் வெளியேற்றியபோது அவர்களில் ஓர் வயதான பெண்மணி அதனை எதிர்த்து உச்ச நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இன்று அவரது வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்ற அதேநேரத்தில் இவ்வழக்கைத் தாக்கல் செய்ததற்காக அவர் பலவழிகளிலும் சித்திரவதைக்குள்ளாகி வருகின்றார். இராணுவத்தை எதிர்த்து நீதிமன்றம் சென்று தமது அஷ்ரப் நகர் என்ற கிராமத்தினது அடையாளத்தைக் கேட்கின்ற அந்தப்

பெண்மணிக்கு இருந்த தைரியமானது சோரம் போய் அரசியல் செய்யும் அரசியல்வாதிகள் பலருக்கு ஒரு சாட்டையடியாகும்.

இவ்வாறு அரசியல்வாதிகள் பணிந்து போவதற்குக் காரணம் பதவி பொருளாதாரம், அதிகாரம் மற்றும் வர்க்க பேதங்களேயாகும். தாங்கள் எவ்விதத்திலும் பாதிப்படையாது நலிந்த மக்களை அதற்கு இரையாக்கி வருகின்றனர். இதற்கு பல உதாரணங்களை அண்மைக் காலத்தில் இடம் பெற்ற நிகழ்வுகள் மூலம் கண்டு கொள்ளலாம். அனுராதபுரம், தம்புள்ளை பள்ளி வாசல் தாக்குதலில் காட்டப்பட்ட விட்டுக் கொடுப்பும் மற்றும் சிறுமி ரிசானாவினது கொலையைக் கண்டிக்காத நிலைமையும், அஷ்ரப் நகர் கிராமத்தினை இராணுவம் திட்டமிட்டு அழிக்கின்ற போக்கை வேடிக்கை பார்க்கும் செயற்பாடும் அவற்றில்

**பொதுச்சட்டத்தின்படி இலங்கையில் குற்றமாக்கப்படாத ஓர் விடயத்தைப் பற்றி ஸர்மிளா உரையாடியதற்காக அவரைத் தொடர்ந்து இன்னல்களுக்கு உட்படுத்தியவர்கள் தமது வாதத்தின் போது இஸ்லாத்தில் குற்றமாக்கப்பட்ட விடயத்தைப் பற்றி ஸர்மிளா கருத்துக் கூறியதாக குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் பொதுச்சட்டத்தின் கீழ் இலங்கையில் விபச்சாரம் குற்றமாக்கப்படவிலை.**

சிலவாகும். இவ்வாறு முஸ்லிம் சமூகம் ஏதோ ஒரு வகையில் தமது உரிமைகளை கேட்காது விட்டுக் கொடுத்து அரசுடன் இணைந்து போகின்ற போக்கு இருப்பதனாலேயே முழு சிறுபான்மை சமூகத்தின் உரிமை மீறல்கள் அதி தீவிரத்தை அடைந்துள்ளன. தமிழின அழிப்பு மற்றும் தமிழர் அடையாளங்களைப் பெரிதும் இராணுவம் அழிவடையச் செய்த போது ஏதோ ஒரு வகையில் மௌனம் காத்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இன்று தமது இன மற்றும் கலாசார அடையாளங்கள் அழிவடைவதையும் தடுத்து நிறுத்த முடியாது மௌனம் சாதிக்கும் நிர்ப்பந்தத்துள் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இலங்கையில் விபச்சாரம் செய்வது சட்டத்தின் முன்பாக தண்டனைக்குரிய குற்றம் அல்ல. ஆனால் விபச்சார விடுதிகளை வைத்து வியாபாரம் செய்வது வருமானம் ஈட்டுவது குற்றத்திற்குரிய செயலாகும். தற்காலத்தில் இடம்பெறுகின்ற பாலியல் தொழில் சம்பந்தமான கைதுகள் எதன் அடிப்படையில் இடம்பெறுகின்றன என்றால் பொது இடத்தில் அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம் (Vagrants Ordinance) என்ற சட்டத்தின் அடிப்படையிலேயே ஆகும். ஆகவே இதை அடிப்படையாக வைத்துப் பார்க்கும் போது பாலியல் தொழில் தொடர்பாக ஸர்மிளா அளித்த செவ்விக்கு எதிர்ப்புத் தெரிவித்த இளைஞர்கள் தொடர்பாக வருத்தப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், பொதுச்சட்டத்தின்படி இலங்கையில் குற்றமாக்கப்படாத ஓர் விடயத்தைப் பற்றி ஸர்மிளா உரையாடியதற்காக அவரைத் தொடர்ந்து இன்னல்களுக்கு உட்படுத்தியவர்கள் தமது வாதத்தின் போது இஸ்லாத்தில் குற்றமாக்கப்பட்ட விடயத்தைப் பற்றி ஸர்மிளா கருத்துக் கூறியதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். ஆனால் பொதுச்சட்டத்தின் கீழ் இலங்கையில் விபச்சாரம் குற்றமாக்கப்படவிலை. அத்தகைய சட்டத்தின் கீழ்தான் தாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற அடிப்படை அறிவை மதவாதம் மழுங்கடித்துவிட்டது.

முஸ்லிம் பெண்கள் இந்நாட்டின் பிரஜைகள். அவர்களும் இந்நாட்டுச் சட்டம் தொடர்பாக கருத்துக் கூறுவதற்கும் உரிமையுடையவர்கள். எனவே எமது நாடு ஷரி அத்து சட்டத்தைப் பின்பற்றும் நாடு அல்லாதபோது எவ்வாறு ஸர்மிளா கூறிய கருத்து மட்டும் குற்றமாக முடியும் என்பதை எதிர்ப்புத் தெரிவித்த முஸ்லிம் சகோதரர்கள் மட்டுமல்ல கண்டன அறிக்கைகளை வெளியிட்ட பொறுப்பான அரசியல் மற்றும் கலாசார, சமய, தனிநபர் ஊடகங்களைச் சார்ந்தோரும் புரிந்து கொள்ள வேண்டும். அது மட்டுமன்றி ஸர்மிளாவினை குற்றவாளியாக்கி குழுக்களை நியமித்த ஆண்கள் ஏன் ரிசானாவினது குற்றமற்ற தன்மையை வெளிக்காட்டவும் அவருக்கு ஆதரவு அளிக்கவும் ஓர் பொது வெளியிலான அனுதாப மற்றும் இரங்கல் கூட்டத்தினையோ அல்லது பத்திரிகை மாநாட்டினையோ நடாத்த முன்வரவில்லை?

ரிசானாவுக்கு வழங்கப்பட்ட கொடூரம் ஷரி அத்து சட்டத்தின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது என வாதிடுபவர்களாக எம்மில் பெரும்பாலானோர் இருக்கிறார்கள்.

அவ்வாறான ஷரி அத்து சட்டமே கொலைக் குற்றத்தை ஒப்புவிக்க நேரில் கண்கண்ட சாட்சிகள் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதனை இவர்கள் அறிவார்களா? இறந்த குழந்தையின் தாய் கூட கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேரத்தின் பின்பே வந்துள்ளார். அத்தோடு இறந்த குழந்தையின் மரணப் பரிசோதனை அறிக்கை கூட மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆராயப்படவில்லை. சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் சவூதி அரசாங்கம் கையெழுத்திட்டுள்ளது.

ஆகவே, ரிசானா தொடர்பான வழக்கு நியாயப்படி சிறுவர் நீதிமன்றுக்கு கொண்டு செல்லப்பட்டிருக்க வேண்டும். அத்தோடு ரிசானா சிறுமி என்பதை நிரூபிப்பதற்கு எமது அரசதரப்பு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டது என்பதையும் அதற்கு முஸ்லிம் சமூகத்தினதும் முஸ்லிம் அரசியல்வாதிகளினதும் உளப்பூர்வமான கரிசனை எத்தகையது என இன்றைய இளம் முஸ்லிம் இளைஞர்கள் புரிந்து செயற்பட்டிருந்தனரா? ரிசானா என்ற சிறுமி கிட்டத்தட்ட ஏழு வருடங்களாக சிறையில் வளர்க்கப்பட்டு குறிப்பிட்ட வயதைத் தாண்டி வந்த பின்னர் ஆடு, மாட்டினை வெட்டுவது போல வெட்டிக் கொன்ற கோரத்தை எவ்வாறு ஷரி அத்து சட்டத்தின் அடிப்படையிலேயே நிகழ்ந்த தண்டனையாகக் கொள்ள முடியும்?

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உலகில் உள்ள நாடுகள் எல்லாம் தனித் தனி நாடுகள் அல்லாமல் ஐக்கிய நாடுகள் அங்கத்துவ நாடுகள் என்ற கட்டமைப்பின் கீழ் இயங்குகின்றன. இன்னொரு உலக யுத்தம் இடம்பெறக் கூடாது எனக் கருதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமை சாசனத்தில் கையொப்பம் இடுவதன் மூலம் மனித உரிமை என்ற விடயத்தை ஒரு குடையின் கீழ் கொண்டு வந்தது. அதன் பின்னர் மனித உரிமை என்ற விடயத்தில் உலகில் உள்ள நாடுகள் தனித் தனி நாடுகள் இல்லை. ஐக்கிய நாடுகள் என்ற ஓர் அமைப்பைச் சுற்றி கட்டமைப்புடன் இயங்குகின்ற ஓர் ஒழுங்கைக் கொண்டுள்ளன. குறிப்பிட்ட மனித உரிமைகளுக்கான சாசனத்தில் கையொப்பமிட்ட நாடுகள் மனித உரிமைக்குப் பொறுப்புக் கூறவேண்டும். அவ்வாறான மனித உரிமை சாசனத்தில் சவூதி அங்கம் வகிக்கின்றது. எனவே அவ்வாறான ஒன்றை மீறுவது என்பது மனித உரிமை மீறலான செயலே ஆகும்.

ஆகவே, சவூதி அரசானது தனது நாட்டைச் சேராத பிறிதொரு நாட்டைச் சேர்ந்த ஓர் ஏழைச் சிறுமியைக் கொலை செய்து விட்டு ஷரி அத்து சட்டத்தின் மேல் பாரத்தைப் போடுவதன் மூலம் அக்கொலையை மூடி மறைத்துவிட முடியாது. மனித உரிமைக்கு உலகளாவிய ரீதியில் அங்கீகாரம் இருக்கும் போது சவூதி அரசானது இவ்வாறு மிலோச்சைத்தனமாக அதிகாரத்தை மேற்கொண்டு விட்டு அதனை ஷரி அத்து சட்டம் எனக் கூறும் போது நாமும் வேடிக்கை பார்ப்பதானது அதற்கு ஆதரவு தருவதாகவே அமையும். நாமும் மனித உரிமை மீறலை ஆமோதிப்பதாகவே அமையும். மனித கௌரவத்தை காலின் கீழ் போட்டு மிதிக்கும் இச்சம்பவமானது உலகளாவிய அளவில் பரவலாக இஸ்லாமிய மதத்தைக் கொச்சைப்படுத்திய ஒரு சம்பவமாகவே பார்க்கப்படுகிறது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போகக் கூடாது என சில ஆணாதிக்க சக்திகள் வாதிடுகின்றனர். இந்த இடத்தில் 'மஹரம்' என்ற இஸ்லாமிய முறையை ஆதாரமாக முன்வைக்கின்றனர்.

அதாவது ஒரு முஸ்லிம் பெண் வீட்டை விட்டுச் செல்லும் போது திருமண முறையற்ற ஆணுடன் அதாவது சகோதரன், தந்தை போன்றவர்களோடு மாத்திரமே வெளிச் செல்லல் வேண்டும் என்ற பிற்போக்குத்தனத்தை மீள ஏற்படுத்த முனைகின்றனர். இது பெண்களது நடமாட்ட சுதந்திரத்தை அடியோடு அழிக்கின்றது. விருப்பமான தொழிலைத் தெரிவு செய்யவும், சுதந்திரமாக நடமாடவும் பெண்களுக்கு உரிமை உண்டு. அதற்கான பாதுகாப்பை சமூகமும் அரசும் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இலங்கைச் சட்டத்திலும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சாசனத்திலும் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் நாட்டிற்கு பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் பெண்களது அன்னியச் செலாவணியே விளங்கியது. தற்போது யுத்தம் நிறைவடைந்த பின்னர், தமது தேவைகளை நிறைவேற்றி விட்ட பின்னர் "நீங்கள் பெண்கள் வீட்டில் முடங்குங்கள்" என்றவாறு பெண்களை வீட்டோடு அமிழ்த்துகின்ற தன்மை இலங்கையின் அனைத்து சமூகங்களிலும் காணப்படுகிறது. இது ஆணாதிக்க செயற்பாட்டின் அதி உச்ச வடிவமாகும். ■

**எஸ். இஸ்மயில்**

# மலையகப் பெண்களின் "இறைவி" வழிபாடும் அவர்களின் தற்போதைய சமூக அந்தஸ்தும்

இறைவி என்றால் என்ன என்று உடனே பதில் சொல்ல எம்மில் பலருக்கு முடியாமல் இருக்கின்றது. இதற்குக் காரணம் இச்சொற்பிரயோகம் எமது அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படாமையேயாகும். மேலும், பெண் செயற்பாட்டாளர்கூட இவ்வாறான பதப் பிரயோகத்தினை அறிந்துள்ளார்களா என்பதுவும் கேள்விக்குறி. எவ்வாறாயினும், இறைவி என்பது பெண்பால் கடவுளைக் குறிக்கும். பண்டைய கிரேக்க மதம், இந்து மதம் போன்றவற்றில் பெண் கடவுளை வணங்கும் முறை உள்ளது. சில சமயங்களில் பெண் கடவுளே முதன்மைக் கடவுளாகவும் உள்ளனர். இந்து மதத்தில் சாக்தம் எனும் பிரிவினர் சக்தி மட்டுமே கடவுள் என்றும் வேறு தெய்வங்கள் இல்லை எனவும் வாதிடுகின்றனர். திபெத்திய புத்த மதத்தில் ஆர்ய தாரா எனும் பெயரில் ஒரு பெண் போதிசத்துவரை வணங்குகின்றனர் (மூலம்: http://ta.wikipedia.org/wiki/)

இலங்கையில் இன்று மலையகத்தில் காணப்படும் பெரும்பாலான ஆலயங்கள் இறைவிக்குரியதாகும். கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணை 1 இன்படி நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் 523 பதிவுசெய்யப்பட்ட ஆலயங்களில் 371 ஆலயங்கள் அம்மன் ஆலயங்களாகும். இது மொத்தம் பதிவு செய்யப்பட்ட ஆலயங்களில் 70 சதவீதத்திற்கு மேலாகும். (மூலம் : http://www.hindudept.gov.lk/web/images/pdf/templelist/ne.pdf). எனவே, மலையக மக்களின் வாழ்வில் பெண் தெய்வமான அம்மன் வழிபாடு பிரதான நிலையைப் பெற்றிருப்பதைக் காணலாம்.

*அட்டவணை 1: இலங்கையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் இந்து ஆலயங்களின் விபரம். (2012 புரட்டாதி மாதம் வரையில்)*

| மாவட்டம் | பதிவுசெய்யப்பட்டுள்ள ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பதுளை | 263 |
| கண்டி | 255 |
| கேகாலை | 192 |
| மாத்தளை | 87 |
| நுவரெலியா | 523 |
| இரத்தினபுரி | 213 |
| மொாத்தம் | 1533 |

(மூலம்: http://www.hindudept.gov.lk/web/index.php?option=com_content&view=article&id=58&Itemid=103&lang=ta)

செவிவழி வரலாற்றுக் கதைகளின் பிரகாரம் பிரித்தானியர் காலத்தில் பெருந்தோட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட பெண்கள் தாங்கள் தொழில் புரியும் நேரத்தில் தங்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டி தேயிலைத் தோட்டங்களில் மரங்களுக்கடியில் கற்களை வைத்து வழிபடத் தொடங்கினர். இவற்றை அவர்கள் இறைவியாகவே வணங்கினர். இவற்றின் நாமங்கள் மாரியம்மன், காளி, மலையம்மன் எனக்கூறினாலும் அவையனைத்தும் இறைவியின் வடிவங்களாகவே காணப்பட்டன. இவ்வாறு வழிபடத் தொடங்கிய சில காலத்தின் பின்னர் இவ்விடங்கள் பொது வழிபாட்டு மையங்களாக மாற்றம் பெற்றன. தோட்ட நிர்வாகங்களும் தெய்வ வழிபாட்டிற்காக அவ்விடங்களை ஒதுக்கிக் கொடுத்தன. இவ் ஆலயக் காணிகள் போராட்டங்களாலேயோ அல்லது விலை கொடுத்தோ வாங்கப்பட்டவையல்ல மாறாக பெண்களின் கூட்டு முயற்சியினால் கிடைக்கப் பெற்றவையாகும். ஆனால்

இவர்களின் இச்செயல் இன்றுவரை எவராலும் அங்கீகரிக்கப்படவில்லை.

மலையகத்தில் காணப்படும் கோயில்களில் 90 சதவீதமானவை இவ்வாறு தோற்றம் பெற்றனவாகும். எந்த இடத்தில் கோயில் அமையப் பெறவேண்டும், சிலை எப்பக்கம் திரும்பியிருக்க வேண்டும் என்பவை ஆகம முறைப்படி அமைந்தவையல்ல. மாறாக பெண்கள் தாங்கள் விரும்பியவாறு இவற்றை வடிவமைத்துக் கொண்டனர். இன்று தேசிய ரீதியாக செல்வாக்குப் பெற்று விளங்கும் நுவரெலியா மாவட்டத்தில் காணப்படும் பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலயம் மற்றும் பத்தனைக் காட்டு மாரியம்மன் ஆலயம் போன்றன இவ்வாறே தோற்றம் பெற்றனவாகும்.

இவ்வாறு பொது வழிபாட்டு இடங்களாகக் காணப்பட்ட இடங்களில் ஆலயக் கட்டிடங்கள் அமைக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் அவை ஆண்களின் அதிகாரத்திற்கு உட்பட்டன. கோயில்கள் வருமானத்தை ஈட்டித்தரும் இடங்களாக, வியாபார ஸ்தலமாக, சமூக அந்தஸ்தைப் பெற்றுக்கொள்ளும் ஒரு களமாக மாற்றம் பெறத் தொடங்கியமையால் ஆண்கள் அவற்றை தமது அதிகாரத்தினுள் அடக்கிக் கொண்டுள்ளனர். உதாரணத்திற்கு நுவரெலியா மாவட்டத்தின் பச்சத்தண்ணி மாரியம்மன் ஆலயமானது பல வருடங்களுக்கு முன்னர் மரத்தடி ஒன்றின் கீழ் கற்களை வைத்து வழிபட்டுள்ளனர். அங்கு யார் வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் தங்களுக்கு விரும்பிய விதத்தில் பூசை செய்து வழிபடலாம். இங்கு ஆண், பெண் என்ற வேறுபாடு காட்டப்படவில்லை. ஆனால் இன்று இறைவிக்கு யார் வேண்டுமானாலும் பூசை செய்ய முடியாது. திடீரென்று முளைத்த ஆண் அர்ச்சகர்கள் பூசை செய்வதற்கு 100 ரூபா முதலான டிக்கட்டுகளை வழங்குகின்றனர். இறைவிக்கும் மக்களுக்குமிடையில் வகுப்புவாதம் ஒன்று (Class Difference) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது.

அண்மையில் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் பெண்களும் அர்ச்சகராகலாம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கியுள்ளமை தொடர்பில் இணையத்தள வாயிலாக அறியக்கிடைத்தது. இதனை உடனடியாக மலையகப் பகுதிகளிலுள்ள கோயில்களோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். இதற்குக் காரணம் ஏனைய பிரதேசங்களைப்

**இந்துசமய வழிபாட்டு முறைகளில் பூஜித்தல் என்பதுவும் காணப்படுகின்றது. எப்படி பூஜித்தாலும் மனமுவந்து பூஜித்தால் இறைவன்(வி) ஏற்றுக்கொள்வார் என்பது நம்பிக்கை என்று எழுத்தாளர் என். கணேசன் கூறுகின்றார்**

போலல்லாமல் மலையகத்தில் காணப்படும் கோயில்களின் நிர்மாணத்தில் பெண்களின் பங்கு அதிகமாகக் காணப்படுகின்றமையும் ஏலவே பெண்கள் அக்கோயில்களில் அவ்வாறு பூசை வழிபாடுகளை மேற்கொண்டவர்கள் என்பதாலும் ஆகும்.

சிறுதெய்வ வழிபாட்டில் யார் வேண்டுமானாலும் பூசை செய்யலாம் ஆனால் கோவில்கள் கட்டி பூசை செய்வதாக இருந்தால் ஆகம முறைப்படி செய்ய வேண்டும் என வியாக்கியானம் பேசலாம். இவ்வாறு சிறுதெய்வ வழிபாடு மற்றும் ஆகம வழிபாடு என்று கடவுளை வகுப்புவாதத்திற்குள் மனிதர்களே உட்புகுத்தியுள்ளனரே அன்றி கடவுள் வகுப்பு வாதத்தைத் தோற்றுவிக்கவில்லை. அதேநேரம் இந்துசமய வழிபாட்டு முறைகளில் பூஜித்தல் என்பதுவும் காணப்படுகின்றது. எப்படி பூஜித்தாலும் மனமுவந்து பூஜித்தால் இறைவன்(வி) ஏற்றுக்கொள்வார் என்பது நம்பிக்கை என்று எழுத்தாளர் என்.கணேசன் கூறுகின்றார் (http://enganeshan.blogspot.com/search/label/ஆன்மீகம்). இவற்றிற்கெல்லாம் புறம்பாக ஒரே ஒரு கேள்வி, எங்காவது ஆண்கள் மாத்திரம்தான் இறைவன்(வி)க்கு பூஜை செய்ய வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதா? இல்லை, உண்மையான பக்தி இருக்கின்ற எவரும் பூஜை செய்யலாம். எனவே பெண்கள் கோவில்களில் பூஜை செய்யலாம் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

எல்லாம் வல்லவர் கடவுள் என்றால் அவருக்கு எல்லா மொழிகளும் புரியும். எனவே கடவுளைப் பூஜிப்பதற்கு சமஸ்கிருத மொழியறிவு அவசியமில்லை. சுந்தரமூர்த்தி

நாயனார் போன்ற நாயன்மார்கள் தமிழிலே தேவாரம் பாடி இறையருளைப் பெற்றுள்ளனர் என்கிறது வரலாறு. எனவே தமது மொழியில் கடவுளை வழிபடலாம். இடைத் தரகருக்கு பணம் வழங்க வேண்டியதன் அவசியமில்லை. இதனைக் குறிப்பிடுவதற்கான காரணம் என்னவென்றால் இன்று மலையகத்தில் காணப்படும் பெரும்பாலான கோயில்களில் அர்ச்சகர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுகின்றது. இவர்களை அர்ச்சகர்களாக நியமித்தமைக்கு ஒரேயொரு காரணம் அவர்கள் தமிழ் அல்லாத ஏதோ ஒரு மொழியில் மந்திரம் ஓதுகின்றார்கள் என்பதாலேயாகும். அரசாங்கத்தாலோ, இந்து கலாசார அமைச்சினாலோ அல்லது வேறு எந்த நிறுவனங்களினூடாகவோ இக்கோவில்களுக்கு நிதி வராதவிடத்து அங்குள்ள மக்களே நிதியை திரட்டி அர்ச்சகருக்கான சம்பளத்தை வழங்குகின்றனர். அதன்போதும் மலையகப் பெண்களின் பொருளாதாரம் மற்றுமொரு வகையில் சுரண்டப்படுவதை அவதானிக்கலாம்.

மேற்காட்டப்பட்டுள்ள அட்டவணைக்குப் புறம்பாக மலையகத்திலுள்ள மேலும் பல கோவில்கள் இன்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் பதியப்படாமல் இருக்கின்றன. அக்கோவில்களின் நிர்வாகத்திற்கும் பொது மக்களே பங்களிப்புச் செய்கின்றனர். இவ்வாறு பொதுமக்கள் எனக் கூறும்போது அங்கு 50 சதவீதத்திற்கும் மேலாகப் பெண்களும் பங்களிப்புச் செய்கின்றனர். ஆனால் இங்கு காணப்படும் கோவில் கமிட்டிகள் பெண் உறுப்பினர் ஒருவரைக் கூட நியமிப்பதில்லை. நான் அறிந்து இதுவரை கோவில் கமிட்டி தலைவராக ஒரு பெண் நியமிக்கப்பட்டதாக சரித்திரம் இல்லை. இதற்குக் காரணம் அதிகாரமும், கோவில்கள் வருமானத்தை ஈட்டித்தரும் இடங்களாகவும் காணப்டுகின்றமையேயாகும். அவ்வாறின்றி பெண்கள் தலைவர்களாக நியமிக்கப்படாமைக்கு அவர்கள் அசுத்தமானவர்கள் என்ற கருத்தியலில் வாதிடுவார்களேயானால் அவர்கள் இறைவி வழிபாட்டையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஏனெனில் இந்து மதத்தில் கடவுள்கள் இல்லற வாழ்க்கை வாழ்பவர்களாக இருக்கின்றார்கள். எனவே, அவர்களும் அசுத்தமானவர்களா? அதேவேளை பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட இவ்வழிபாட்டு இடங்களை கோவில்களாக மாற்றி அவற்றை நிர்வகிப்பதன் அவசியம் என்ன என்பது வினாவாகும்.

மேலும், இன்று சமூக நிறுவனமான (Social Institution) மதம் பல விடயங்களில் தாக்கம் செலுத்துகின்றது. இன்று அரசியல் ஆட்சியை தீர்மானிப்பதே மதம் சார்ந்த நிறுவனங்களேயாகும். உதாரணமாக மலையகத்தில் அரசியல் கூட்டங்கள் நடாத்தும்போது தோட்ட கமிட்டி தலைவர்களைப்போல் இந்தக் கோவில் கமிட்டித் தலைவர்களுக்கும் தனியிடம் காணப்படுகின்றது. அவர்களின் ஆதரவில்லாமல் அத்தோட்டத்திலுள்ள வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கோ அல்லது ஒரு கூட்டத்தை நடாத்துவதற்கோ அரசியல்வாதிகளுக்கு மிகவும் கடினமாகும். அந்தளவிற்கு அவர்களின் செல்வாக்குக் காணப்படுகின்றது.

எனவே, மதம் என்ற நிறுவனத்தை புறந் தள்ளிவிட்டு பெண்கள் தனித்து நின்று சம உரிமையைப் பெறமுடியாதுள்ளது. ஒருபுறம் மதத்தின் பெயரால் பெண்களுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்ற அதேவேளை இன்று நூற்றிற்கு 99 சதவீதமான மலையகப் பெண்கள் கடவுள் நம்பிக்கையுடன் காணப்படுகின்றனர். ஆகவே, பெண்களுக்கு மத ரீதியாகக் காணப்படும் இப்பாரபட்சங்களை ஒழிக்கப்பட வேண்டுமெனில் மத நிறுனங்களில் பெண்களின் பங்களிப்பு மற்றும் அவர்களின் தீர்மானமெடுக்கும் நிலைமை அதிகரிக்கப்படுதல் வேண்டும். கீழ்வரும் ஆலோசனைகள் இவற்றை முன்னெடுப்பதற்கு வழிவகுக்கும்:

## ஆலோசனைகள்

முதலாவதாக மத ரீதியாகக் காணப்படும் சில மூட நம்பிக்கைகளை ஒழிப்பதற்கான விழிப்புணர்வு பிரசாரத்தை சமூகத்திலும் குறிப்பாக ஆண்கள் மத்தியிலும் மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக பெண்களை பாரபட்சப்படுத்தும் பழக்க வழக்கங்களான கோவில் கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவிடாமல் தடுத்தல், சிலைகளைத் தொட்டு வணங்குவதற்கும், அபிசேகம் செய்வதற்கும், தொட்டு அலங்கரிப்பதற்கும் தடை விதித்தல், மாதவிடாய்க் காலப்பகுதியில் கோவிலுக்குள் செல்வதைக் குற்றமாக எண்ணும் மனப்பாங்கு பெண்கள் மத்தியில் தோற்றுவிக்கப்பட்டிருத்தல் போன்றவற்றை முற்றாக இல்லாமல் செய்வதற்கு மற்றுமொரு சமய மறுமலர்ச்சி பெண்களால் தோற்றுவிக்கப்பட வேண்டும்.

மலையகத்தில் காணப்படும் கோவில் கமிட்டிகளில் பெண்களை

இணைத்துக்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு இணைத்துக் கொள்வதற்கான பரிந்துரை செய்யும்போது இப்பெண்கள் மலையகத்திலுள்ள இக்கோவில்களின் வரலாற்றை அறிந்துகொள்வது மிகவும் முக்கியமாகும். அதாவது பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட இக்கோவில்களில் அவர்களுக்கு எல்லா அதிகாரமும் காணப்படுகின்றது என்பதை பெண்கள் உணர வேண்டும்.

கோவில்களில் மலையகப் பெண்களும் அர்ச்சகராவதற்கு பெண் செயற்பாட்டாளர்கள் மற்றும் நிறுவனங்கள் என்பன கூட்டு முயற்சியுடன் செயற்படுதல் வேண்டும். இதுவரை சட்ட ரீதியாக ஆண்கள்தான் அர்ச்சகராக வேண்டும் என எவ்விடத்திலும் குறிப்பிடப்படாமையானது இது தொடர்பாக பரிந்துரை செய்வதற்கு இலகுவாக அமையும்.

மேலும், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்துக் குருமார்களுக்கு அடையாள அட்டை ஒன்று வழங்கப்படுகின்றது. இதுகூட அவர்களுக்கொரு சமூக அந்தஸ்தையும் அதிகாரத்தையும் வழங்கும் செயன்முறையாகும். எனவே, பெண்கள் மதகுருமார்களாக செயற்படும்போது அவர்களுக்கும் இவ்வாறான ஒரு சமூக அந்தஸ்து கிடைக்கப்பெறும். அவ்வாறான சமூக அந்தஸ்தையும் அதிகாரத்தையும் ஆண்களைப் போலல்லாமல் பெண்கள் சமூகத்திற்குக் குறிப்பாக பெண்களுக்கு சாதகமான விதத்தில் பயன்படுத்துவார்கள் என்பது திண்ணமாகும்.

இறுதியாக இக்கட்டுரையை ஆரம்பத்திலிருந்து இறைவி என்று வாசிக்கும் ஒவ்வொரு இடத்திலும் வாசகர்கள் சற்று தடுமாறியிருந்திருக்கலாம். இதற்குக் காரணம் இது அன்றாடப் பாவனைச் சொல்லாக காணப்படாமலிருப்பதாகும். எனவே பெண்களாகிய நாம் மொழியியலிலும் மாற்றத்தைக் கொணர்வதற்கு இவ்வாறான சொற்களை அன்றாடம் பாவித்தல் வேண்டும். ■

**லெட்சுமணன் கமலேஸ்வரி**



http://stories.pavelgospodinov.com/tea-gardens-bangladesh/

# பெண்ணின் உழைப்பும் கண்ணில் படட்டும்

மரகதப் பசுமை போர்த்திய
பனிமலைச் சாரலில்
தேயிலை பறிக்கின்ற,
தேசத்தின் முதுகெலும்பை,
வெறும் பாலியல் பலிக்கடாவாய்
"வேவு" பார்க்கும் கங்காணியின்
கழுகுக் கண்கள்...!

பெற்றெடுத்த மகவைப் பிரிந்து,
உற்ற மனை, உறவு தொலைத்து,
வளைகுடாவின் - செல்வம் செழிக்கும்
வீட்டுப் பணிப் பெண்ணாய்,
வியர்வை சிந்தும் அவளின்,
வறுமையை
உடற்பசிக்கு உபாயமாக்கிடத் துடிக்கும்
வெறி படர்ந்த விழிகள்...!

வயல்வெளியிலும், வாவிக்ரையிலும்,
வலைவாடியிலும்,
தோட்டம், துரவிலும், பெண் அவள்
உழைத்துக் களைத்து முடிக்கும் தருணம்
அங்கே, பல் இளித்து, அவளின்
கனவுகள் கலைத்திடுகின்ற பொம்பளைக் கூலி!...

பொருளாதாரப் பேரேடுகளில்
எழுதப்படாத,
பெண்ணின் உழைப்பு –
பெறுமதி இல்லாமற் போவது ஏன்?

பழைய கணக்குகளை மூடி விட்டு,
பெண்ணின் உழைப்பைக்
கௌரவிக்கும் புதிய சிந்தனைக் கதவுகளை
நாம் திறக்க வேண்டிய தருணம் இது...!

**முறையூர் ச. சசீதரன்**



# "மனித பக்தி" சமயம் என்பதற்கு மற்றுமொரு பொருளாக அமையட்டும்

புகைப்படம் - துஷ்யந்தினி கனகசபாபதிப்பிள்ளை http://www.passionparade.blogspot.com/

இன்றைய உலகில் பல நாடுகளையும் சேர்ந்த மக்கள் தமது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் பிரதான மதிலாகப் பயன்படுத்துவது மதத் தத்துவத்தையேயாகும். மதத் தத்துவங்களின் அடிப்படைக் கற்பித்தலுக்கு முரணாகச் சென்று பிற்காலத்தில் பல்வேறுபட்ட நபர்களினதும் குழுக்களினதும் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகக் கட்டியெழுப்பப்பட்டு விஸ்தரிக்கப்படுகின்ற மதத் தீவிரவாதத்தின் காரணமாகப் பாரிய அநீதிக்கும் அழுத்தத்திற்கும் உள்ளாகியிருப்பது பெண்களேயாகும். உலகத்திற்குச் சமாதானத்தினதும் சமத்துவத்தினதும் செய்தியைக் கொண்டு வரத்தக்க மதத் தத்துவங்களின் பேரில் பல்வேறுபட்ட இனங்களைத் துன்புறுத்தலுக்கும் தரக்குறைவுக்கும் உள்ளாக்குவதை அங்கீகரிக்க முடியாது.

மதத் தீவிரவாதத்தை ஏற்றுக்கொண்டுள்ள சமூகத்தில் பெண்களுக்குத் தமது வாழ்க்கையை விரும்பியவாறு நடத்த முடியாது. கல்வியைப் பெறுதல், தொழில்புரிதல், திருமணம், ஆடை அணிகலன்களைத் தெரிவு செய்தல், மற்றும் மதங்களைப் பின்பற்றுதல் போன்ற பல விடயங்களை மதத்தின் நாமத்தினால் தியாகம் செய்வதற்கு அல்லது வரையறுப்பதற்கு பெண்களுக்கு நேர்ந்துள்ளது. பழமை வாதத்தினால் வேரூன்றச் செய்யப்பட்டுள்ள போலியான கருத்துக்களை யதார்த்தபூர்வமாக ஆராயாமல் அவ்வாறாகவே ஏற்றுக்கொள்வதற்கும்

**இந்தியச் சிந்தனை வரலாற்றில் புதிய பக்கமொன்றைப் புரட்டி உருவாகிய பல சிந்தனை அலைகளின் மத்தியில் புத்த தருமத்துக்குத் தனித்துவமான இடம் உரித்தாகின்றது. நிலையான பெறுமதியையும் உயர்ந்த ஒழுக்கநெறியியலையும் உண்மையாகவே புத்தபெருமான் போதித்து அருளியுள்ளார்.**

சமூகம் பழக்கப்பட்டுள்ளது. சமயத்தின் பிரகாரம் வாழ்வதற்காகவன்றி சமயத்திற்காகப் போர்க் களத்துக்குச் செல்வதற்கும் பலர் விருப்பம் தெரிவிக்கின்றனர். பக்தியால் ஏமாற்றமடைவதைத் தவிர உண்மையான அறநீதியான புரிதல் பெரும்பாலானவர்களிடம் கிடையாது.

இந்தியச் சிந்தனை வரலாற்றில் புதிய பக்கமொன்றைப் புரட்டி உருவாகிய பல சிந்தனை அலைகளின் மத்தியில் புத்த தருமத்துக்குத் தனித்துவமான இடம் உரித்தாகின்றது. நிலையான பெறுமதியையும் உயர்ந்த ஒழுக்கநெறியியலையும் உண்மையாகவே புத்தபெருமான் போதித்து அருளியுள்ளார். பாரத சமூகத்தில் காணப்பட்ட பழைமைவாத மரபுகளைத் தகர்த்துப் புதிய மரபுகள் பலவற்றை உருவாக்குவதற்குப் புத்த சமயம் வழிவகுத்துள்ளது. குறிப்பாகப் புத்தர் கால பாரதச் சமூகத்தில் காணப்பட்ட பெண்களை ஓரங்கட்டும் பிராமண வழக்கத்தைக் கேள்விக்குட்படுத்தி, பிக்குணிகளுக்கான சாசனத்தை உருவாக்கி, புத்த சாசனத்திலுள்ள உயர் பதவிகளைப் புத்தபெருமான் பெண்களுக்கும் பெற்றுக்கொடுத்தார். பெண் குழந்தைகளின் பிறப்பினைத் துரதிஷ்டமாகக் கருதிய ஒரு யுகத்தில் தமது மகளின் பிறப்பையொட்டித் துயரம் கொண்டிருந்த கோசல் மன்னரை விளித்து புத்தபெருமான் தெரிவித்ததாவது, "மகள் என்பவள் ஒரு குடும்பத்தையோ அல்லது பரம்பரையையோ மட்டுமன்றி முழு உலகத்தையுமே நறுமணமாக்கும் ஒரு மலர் ஆவாள்" என்பதாகும். "ஒரு மகளாகவிருந்தாலோ, மகனாகவிருந்தாலோ மிக முக்கியமாக அமைவது நல்லொழுக்க ரீதியான மற்றும் புத்திசாலியான பிள்ளையாக இருப்பதேயாகும்" என்பது புத்த போதனையாகும்.

புத்தபெருமான் புத்த நிலையை அடைந்தது தொடக்கம் பரிநிர்வாணமடையும் வரையான 45 வருட காலம் முழுவதும் பால்நிலை சமத்துவத்துடன் பணியாற்றியுள்ளார். பெண்களுக்குச் சமூகத்திலிருந்து கிடைக்கப்பெற வேண்டிய உரிய வரவேற்பு மற்றும் கௌரவம் தொடர்பாகப் புத்தபெருமான் விசேடமாகச் செயற்பட்டுள்ளார் என்பது புத்த சரிதையையும் புத்தரின் போதனைகளையும் பயிலும்போது தெளிவாகத் தெரிகின்றது. புத்த நிலையை அடைந்ததன் பின்னர் உறவினர்களைச் சந்திக்கச் சென்றபோது அவர் தமது மனைவியாகிய யசோதரையைச் சந்திப்பதற்காக

**புத்தபெருமான் புத்த நிலையை அடைந்தது தொடக்கம் பரிநிர்வாணமடையும் வரையான 45 வருட காலம் முழுவதும் பால்நிலை சமத்துவத்துடன் பணியாற்றியுள்ளார்.**

யசோதரையின் மாளிகைக்குச் சென்றதாகக் குறிப்பிடப்படுகின்றது. புத்தபெருமான் பெண்கள் தொடர்பாகச் செயற்பட்ட கௌரவம் மிக்க சுபாவத்தை முன்மாதிரியாக எடுத்துக்காட்டிய ஒரு தனித்துவமான சம்பவமாக அதனைச் சுட்டிக்காட்டலாம்.

புத்தபெருமான் குடியிருந்த ஒரு விகாரைக்கு அருகாமையில் அம்பபாலி எனப்படும் விலைமாது வாழ்ந்து வந்தாள். புத்தபெருமான் அதனை அறிந்திருந்தாலும்கூட ஒருபோதும் அவளுக்குத் துன்புறுத்தல் செய்யுமாறு கட்டளையிடவில்லை. தவறான காம நடத்தை பாரதூரமான தவறு எனவும், அதில் ஈடுபடுகின்றவர்கள் நரகம் செல்வார்களெனவும் போதித்தார். அக்குற்றத்திற்கும் தண்டனைக்கும் அம்பபாலி மட்டுமல்ல, அவளைத் தேடி வருகின்ற அரசர்கள், சிற்றரசர்கள், அமைச்சர்கள், மற்றும் இளவரசர்கள் போன்ற உயர் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும் உள்ளடங்கினார்கள் எனக் கூறப்படுகின்றது. பிற்காலத்தில் அம்பபாலி புத்தரிடம் சரணடைந்து தருமத்தைப் புரிந்துகொண்டார் எனக் குறிப்பிடப்படுகின்றது. இச்சம்பவங்கள் புத்தபெருமானிடம் காணப்பட்ட சமத்துவத்தையே காட்டிநிற்கின்றன.

புத்த சமயத்தின் பிரகாரம் பெண் என்பவள் இரண்டாம் தரத்தைச் சேர்ந்த ஒரு பிராணியல்ல. ஆண்களுக்கு நிகரான பெறுமதிகள் அவளுக்கும் உள்ளன. இருப்பினும்
தூய்மையான புத்த சமயம் பாதுகாப்பாக உள்ளதெனக் குறிப்பிடுகின்ற இலங்கையின் பல பௌத்த சமய நிகழ்ச்சிகளிலேயே பெண் இரண்டாம் தரப் பிரஜையாக மாறியுள்ளனர். புத்தபெருமானின் உடற் பாகங்களைக் கொண்டுள்ள பேழையைக் கொண்டுவருதல்

போன்ற விசேட நிகழ்வுகளில் பெண்கள் தள்ளி வைக்கப்படுவதைக் காணமுடியும். அத்தகைய கௌரவமிகு சந்தர்ப்பங்களுக்குப் பெண்கள் ஒன்றுசேர்வது தீட்டு என்பது பெரும்பாலான பௌத்த பக்தர்களின் கருத்தாக அமைந்துள்ளது. பிள்ளைப் பிரசவம், பூப்படைதல், மாதவிடாய் ஆகிய சந்தர்ப்பங்கள் தீட்டுமிகு சந்தர்ப்பங்களாகப் பெயரிடப்பட்டுள்ளன. பெண் என்பவள் இயற்கையாகவே தீட்டுடன் கூடிய பிராணியென்பதால் கௌரவமிகு பணிகளிலிருந்து அவளை அகற்றிவைப்பது பிராமண மரபாகும். அத்தகைய போலியான கருத்துக்களைப் பௌத்த தத்துவத்தின்படியும் மருத்துவ விஞ்ஞான ரீதியாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கையின் அரச மதமாகப் போற்றப்படுவதும் நாட்டின் மக்கள் தொகையில் பெருவாரியானோரால் பின்பற்றப்படுவதும் பௌத்த மதமேயாகும். இருப்பினும், பிக்குணி சாசனத்தை முன்னேற்றுவதற்காக அரச துறையில் ஊக்கம் காட்டப்படவில்லை. நாடு பூராவுமுள்ள பிக்குணிமார்கள் தமது நால்வகைப் பொருள்களையும் கடினமாகப் பூர்த்தி செய்து கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

பௌத்தர்களின் சீருயர் சின்னமாகக் கருதப்படுகின்ற ஜெயசிறி மகாபோதியும் புனிதத் தந்தமும் இரு பெண்களின் புனித கரங்களில் வைத்தே இலங்கைக்குத் தருவிக்கப்பட்டதென்பதை இன்று பலர் மறந்துவிட்டனர். இற்றைக்குச் சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் கதிர்காமத்தில் அஷ்ட பல போதி பூஜையொன்றில் நான் எனது நண்பியொருத்தியுடனும் குடும்பத்தாருடனும் பங்கேற்றிருந்தேன். அதற்காக உதவியளித்த தேரர் தெரிவித்ததாவது, பூஜைப் பொருட்களைக் கொண்டுவந்தது பெண்களாக இருந்தாலும் போதியின் முற்றத்திற்குச் செல்வதற்குப் பெண்களுக்கு அனுமதி இல்லை என்பதாகும். புத்த சமயத்தைப் போன்ற விஞ்ஞான ரீதியானதும் யதார்த்தபூர்வமானதுமான தருமமொன்றைப் பின்பற்றுகின்ற நாட்டுக்கும் உலகிற்கும் பொருளுடனும் அறத்துடனும் போதிக்கின்ற படித்த புத்திஜீவியான ஒரு பிக்குவின் சிந்தனை இவ்வளவு குறுகிய மட்டத்தில் இருக்குமானால் அவர்களிடம் போதனைகளைப் பெறுகின்ற சாதாரண மக்கள் எப்போதுதான் உண்மையைப் புரிந்துகொள்ளப் போகின்றார்கள் என எனக்கு எண்ணத் தோன்றியது.

ஆண்களுக்கு நீளக் காற்சட்டை அடக்கமான உடையாகும். பெண்களுக்கு அது அடக்கமற்ற ஓர் ஆடையாகும். இத்தகைய மனப்பாங்குடன் வாழ்கின்ற பிக்குமார்களைப் போன்ற இல்லறத்தோரும் உள்ளனர். விகாரைகளிலே மத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற காற்சட்டை அணியும் ஆண்களுக்கு இல்லாத தடைகள் பெரும்பாலும் காற்சட்டை அணியும் பெண்களுக்கு அமுலில் உள்ளன. தியான நிகழ்ச்சியொன்றுக்குச் சல்வார் அணிந்து சென்ற எனது நண்பியொருத்திக்கு அதனை நெறிப்படுத்திய பிக்கு, மறுதினம் சேலை அல்லது கண்டியச் சேலை அணிந்து வராவிட்டால் அந்த எல்லைக்குள்ளேயே அனுமதிக்கமாட்டேன் எனத் தெரிவித்திருந்தார். புத்த பெருமான் எந்த ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட நிறத்திலான குறிப்பிட்ட ஆடைகளை அணிந்து வரவேண்டுமென ஒருபோதும் இல்லறத்தோருக்குத் தெரிவிக்கவில்லை. பட்டாச்சார எனப்படும் பெண் சுயநினைவு பாதிக்கப்பட்டு நிர்வாணமாகப் புத்தபெருமானிடம் வந்தடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இருந்தாலும், அவருக்கு அறத்தைப் போதிக்குமளவுக்குப் புத்தபெருமான் கருணை மிக்கவரானார். காற்சட்டையை அணிந்தாலும் சேலை அணிந்தாலும் ஆடை எதுவாக இருந்தாலும் அறரீதியான வாழ்க்கை வாழ்வதே தேவையானதாகும்.

உடலில் புத்தபெருமானின் படத்தைப் பச்சை குத்திக்கொண்டு இலங்கைக்கு வருகை தந்த ஒரு வெளிநாட்டுப் பெண் நாடு கடத்தப்பட்டதான செய்தி அண்மையில் ஊடகங்களின் மூலம் வெளியானது. பச்சை குத்திக்கொள்வதனை எந்தவொரு நாடும் தடை செய்யவில்லை. புத்தபெருமான் கூட அத்தகைய தடை தொடர்பாகப் போதிக்கவில்லை. "அம்மா புதுவேவா!" (அம்மா புத்தர் நிலையடையட்டும்!) அல்லது "மறுசீரா" என்ற வகையில் பச்சை குத்திக்கொள்வதற்கு ஒரு இலங்கையருக்குத் தடை இல்லாவிட்டால் ஒரு வெளிநாட்டுப் பெண் புத்தர் படத்தை பச்சை குத்திக்கொண்டதிலுள்ள தவறுதான் என்ன? அப்பெண் சில சமயங்களில் புத்தபெருமான்மீது கொண்டுள்ள பெரும் பக்தியுடன் அதனைச் செய்திருக்க முடியும். எவ்வாறாயினும், இத்தகைய சம்பவங்களின்மூலம் இலங்கையர்களிடமுள்ள மூடத்தனமான பக்தியும், இந்த நாட்டு அதிகாரிகள் கொண்டுள்ள புரிதலின்மையும் வெளிப்படுகின்றது.

நீண்ட காலத்துக்கு முன் மரணித்த இராவணனின் பலத்தை மனதிற்கொண்ட சில

பௌத்த தேரர்கள் கூட்டிணைந்து இலங்கை கிரிக்கெட் குழுவின் இந்திய விஜயங்களை இரத்துச் செய்யுமாறு கோரி நிருபங்களைக் கையளித்து உலகிற்குப் புதிய நகைச்சுவைகளை வழங்கி வருகின்றனர். இருப்பினும், நாம் காலையிலும் மாலையிலும் வழிபடுவதும் பின்பற்றுவதும் ஈடிணையற்ற பாரதப் புத்திரராகிய புத்தபெருமானையே என்பதை அவர்கள் மறந்துள்ளனர். கடந்த காலத்தில் பௌத்த தேரர்கள் முஸ்லிம் பெண்களின் கலாசார ரீதியான ஆடையை இலங்கையில் தடைசெய்யுமாறு அரசாங்கத்துக்குக் கட்டளையிட்டனர். உண்மையான புத்த புத்திரர்களின் செயற்பொறுப்பாக அமையவேண்டியது ஒவ்வொருவரினதும் மத்தியில் குரோதத்தின் விதைகளைப் பயிரிடுவதும், மதத் தீவிரவாதத்தைப் பரப்பி மக்களை மோகத்தினால் ஏமாற்றுவதுமல்ல. மாறாக, மக்கள் மத ரீதியான தத்துவங்களின் பிரகாரம் தமது வாழ்க்கையை வடிவமைத்துக் கொள்வதற்காகப் பொருளையும் அறத்தையும் போதிப்பதாகும். புத்த சமயத்தில் உள்ளடங்கியுள்ள அஹிம்சை, சகவாழ்வு, சமத்துவம் என்பன பாதுகாக்கப்படும் வகையில் முன்மாதிரியாக வாழ்வதாகும். ■

**சுனேத்திரா சமந்தி எலபாத்த**

■ ■ ■




காட்டூன்: **கமலா வாசுகி**

# பெண்களுக்கு எல்லைகளை விதிக்கும் அதிகாரம்

**கடந்த சில வருடங்களில் உருவாகிய ஒரு வன்முறையான செயற்பாடு யாதெனில் பிக்குமார்களின் தீவிரவாதமாகும். பிக்குகளின் இத்தீவிரவாதமானது ஏனைய மதங்களைப் பின்பற்றுதல் மற்றும் பேணுதல் தொடர்பாக எதிர்ப்பினை எழுப்பியும், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியும் வருகின்றது. சிங்கள இனத்தைக் கட்டியெழுப்பும் கருத்தளவிலான செயற்பாட்டின் முன்னோடிச் செயற்பாட்டாளர்களின் குறிக்கோளை யதார்த்தமாக்கிக் கொள்ளும் முகமாக இந்த பௌத்த கோட்பாட்டுவாத தீவிரவாதக் குழுக்கள் செயற்படுகின்றன. அவர்களது தீவிரவாதச் செயற்பாடுகளைக் கண்டுகொள்ளாததுபோல் இருப்பதன் பெறுபேறுகளாக இன்னுமோர் இனத்துக்கு எதிரான மிலேச்சத்தனமான செயற்பாடுகளின் நீடிப்பு அளுத்கமவில் ஆரம்பமான விதம் உலகிற்கே வெட்டவெளிச்சமானது.**

தேசிய சமாதானத்திற்கும் சுதந்திரத்திற்கும் தடைகளை ஏற்படுத்தும் வகையில் இடம்பெறுகின்ற மத ரீதியான தீவிரவாதச் செயற்பாடுகளே இன்று நமது நாடு முகங்கொடுத்துள்ள பிரதான சிக்கலாக அமைந்துள்ளது. மத ரீதியான கோட்பாட்டுவாதிகளால் அந்தந்த மதத் தலைவர்கள் போதித்த தருமத்துக்கு முரணாக மேற்கொள்ளப்படுகின்ற தீவிரவாதச் செயற்பாடுகளின் மூலம் பொதுவாக ஒட்டுமொத்த மக்களுமே பாதிக்கப்படுகின்றனர்.

பௌத்த மதத் தீவிரவாதிகளால் புத்த போதனையின் சீருயர் தன்மையும் பொருளும் அழிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற ஒழுக்கத்திற்கு மாறான மற்றும் மானுட தருமத்துக்கு எதிரான செயற்பாடுகள் கடந்த சில வருடங்களில் அதிகரித்து, இன்று உயிர்களையும் சொத்துக்களையும் அழிக்கின்ற ஒரு ஒட்டுண்ணியாக மாறியுள்ளது.


எந்தவொரு நாட்டிலும் பெரும்பான்மை இனத்தைத் தவிர ஏனைய பல்வகை இனங்களும் வாழ முடியும். அது இலங்கையைப் பொறுத்தமட்டிலும் அப்படியேயாகும். அதேவேளை, எந்தவொரு மதத்தையும் பின்பற்றுவதற்கான உரிமையும் இலங்கையர்களுக்குக் கிடைத்துள்ளது. இலங்கைக் குடியரசின் அரசியலமைப்பின் IIIஆம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின்கீழ் மதச் சுதந்திரம் தொடர்பாகப் பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது:

> *"15(1) ஆளொவ்வொருவரும், தான் விரும்பும் மதத்தை அல்லது நம்பிக்கையை உடையவராயிருத்தற்கான அல்லது மேற்கொள்ளுதற்கான சுதந்திரமுட்பட, சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும்."*

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும் சிக்கல்களுக்கும் பிரதான காரணம் அரசியல் செயற்பாடுகளேயாகும். அமைச்சர்கள் உள்ளிட்ட அரச தலைவர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் அதன் உத்தியோகத்தர்கள் உரியமுறையில் தமது கடமைகளை நிறைவேற்றாவிடின் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் மனித அபிவிருத்திக்கும் உரியதான தொடர்புகள் உரியவாறு செயற்படாமல், நாடு படுபாதாளத்தில் தள்ளப்படும் என்பது தெளிவானதொரு விடயமாகும்.

இது இன்று நிலவுகின்ற அரசியலின் தவறு மட்டுமே எனக் குறிப்பிட முடியாது. அண்மைக்கால வரலாற்றில் ஆட்சிக்கு வந்த ஒவ்வோர் அரசாங்கத்தினதும் செயற்பாடுகளுக்கான பெறுபேறுகளை நாம் தற்போது அனுபவித்து வருகின்றோம். எதிர்காலத்தில் பிள்ளைகளினதும், பேரப் பிள்ளைகளினதும் சந்ததியினர்கூட இதனைவிடக் கூடுதலான துன்பத்தோடு இந்த அழிவுகரமான அரசியல் செயற்பாடுகளின் பெறுபேறுகளை அனுபவிப்பார்கள். பொருளாதாரம், கல்வி, சுகாதாரம், கலாசாரம் ஆகிய துறைகளில் பொதுவாகக் காணப்படுகின்ற சிக்கல்களை அண்மைக்கால வரலாற்றில் ஆரம்பமாகி நிகழ்காலம் வரையிலும், எதிர்காலத்திலும் நாம் சுமக்க வேண்டியிருக்கும்.

**அரச சுகாதார கிளினிக்குகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விதை நாள அறுவைச்சிகிச்சை, மற்றும் எல்.ஆர்.ரி. பெண்களுக்கான சத்திரசிகிச்சைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்பதாகும். இங்கே ஆண்களின் இனப்பெருக்கத் தன்மையை சத்திரசிகிச்சைகளின் மூலம் நிறுத்துவதற்கு எதிராகச் செயற்பட வேண்டுமென அவர்கள் முன்மொழிந்தனர்.**



கடந்த சில வருடங்களில் உருவாகிய ஒரு வன்முறையான செயற்பாடு யாதெனில் பிக்குமார்களின் தீவிரவாதமாகும். பிக்குகளின் இத்தீவிரவாதமானது ஏனைய மதங்களைப் பின்பற்றுதல் மற்றும் பேணுதல் தொடர்பாக எதிர்ப்பினை எழுப்பியும், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை நிறுத்துமாறு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியும் வருகின்றது. சிங்கள இனத்தைக் கட்டியெழுப்பும் கருத்தளவிலான செயற்பாட்டின் முன்னோடிச் செயற்பாட்டாளர்களின் குறிக்கோளை யதார்த்தமாக்கிக் கொள்ளும் முகமாக இந்த பௌத்த கோட்பாட்டுவாத தீவிரவாதக் குழுக்கள் செயற்படுகின்றன. அவர்களது தீவிரவாதச் செயற்பாடுகளைக் கண்டுகொள்ளாததுபோல் இருப்பதன் பெறுபேறுகளாக இன்னுமோர் இனத்துக்கு எதிரான மிலேச்சத்தனமான செயற்பாடுகளின் நீடிப்பு அளுத்கமவில் ஆரம்பமான விதம் உலகிற்கே வெட்டவெளிச்சமானது.

## பௌத்த அணிகளின் எழுச்சி

பொதுபல சேனா அமைப்பானது அதன் முதலாவது தேசிய சம்மேளனத்தை 2012 ஆனி 28ஆம் திகதி பண்டாரநாயக்க கருத்தரங்கு மண்டபத்தில் நடத்தியதோடு, அங்கு முன்மொழியப்பட்ட பிரதான விடயம் யாதெனில், அரச சுகாதார கிளினிக்குகளின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற விதை நாள அறுவைச்சிகிச்சை, மற்றும் எல்.ஆர்.ரி. பெண்களுக்கான சத்திரசிகிச்சைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்பதாகும். இங்கே ஆண்களின் இனப்பெருக்கத் தன்மையை சத்திரசிகிச்சைகளின் மூலம் நிறுத்துவதற்கு எதிராகச் செயற்பட வேண்டுமென அவர்கள் முன்மொழிந்தனர். சுமார் 1970ஆம் தசாப்தத்தில் எமது நாட்டுக்கு விதை நாள அறுவைச் சிகிச்சையும், எல்.ஆர்.ரி. சத்திரசிகிச்சையும், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளும் அரச தலையீட்டின் பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட குடிசனத்தொகைக் கணக்கெடுப்புத் தரவுகளையும் உபயோகித்தே அறிமுகப்படுத்தப்பட்டன. இங்கே அவர்கள் வலியுறுத்துவதாவது இனப்பெருக்கத்திற்காக உள்ள ஆட்களின் உரிமையை இரத்துச் செய்து, சிங்கள சமுதாயத்தின் பிறப்பு விகிதாசாரத்தை

அதிகரிக்க வேண்டுமென்பதாகும். ஒரு நாட்டின் மக்கள் தொகை அதிகரிப்பு வேகமானது அந்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் குடும்பங்களுக்கும் அநாவசிய சுமையை ஏற்றுகின்றதென்பதை இந்தப் பிக்குகள் மறந்துள்ளனர். அதேவேளை, அவர்கள் இல்லற வாழ்க்கைமீது முறையற்ற தாக்கங்களை ஏற்படுத்துவதையும் மேற்கொள்ளுகின்றனர்.

அவர்கள் 2013 மாசி 17ஆம் திகதி மஹரகமவில் கூட்டமொன்றை நடத்தினர். அக்கூட்டத்திற்குச் சுமார் 1300 பிக்குமார் வருகை தந்திருந்ததோடு, சுமார் 16,000 மக்கள் வருகை தந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்கூட்டத்தில் பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் முஸ்லிம் தீவிரவாதிகளை எதிர்க்கவேண்டுமெனத் தெரிவித்திருந்தார். அதேவேளை, இலங்கைப் பெண்கள் மத்திய கிழக்கில் வேலைக்குச் செல்வதைத் தடுக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார். மேலும், பெண்கள் குடும்பக் கட்டுப்பாட்டு முறையாகப் பயன்படுத்துகின்ற கருத்தடை மாத்திரைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடைசெய்வதற்கு அரசாங்கம் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

அங்கே, முஸ்லிம் வியாபாரிகளுக்குச் சொந்தமான "பஷன் பஹ்", "நோலிமிற்" போன்ற புடவைக் கடைகளில் சிங்கள பௌத்தர்கள் ஆடைகளைக் கொள்வனவு செய்யக்கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கடைகளில் அதிகளவில் ஆடைகளைக் கொள்வனவு செய்வது பெண்களே. ஒரு பௌத்த பிக்குவின் செயற்பொறுப்பு இல்லறத்தோரின் பிரச்சினைகளுக்குப் பொருத்தமானவாறு தருமம் சம்பந்தப்பட்ட விடயங்களைப் போதித்து, அவர்களது வாழ்க்கையை உரியமுறையில் வடிவமைத்துக் கொள்வதற்கு ஆலோசனை வழங்குவதேயொழிய "முட்டாள்தனமான பக்தி" கொண்ட பௌத்த மதத்தவர்களுக்குப் புடவைக் கடைகளைத் தடை செய்வதல்ல.

புத்த தருமமானது ஆண்-பெண் பால் பாகுபாடின்றி பின்பற்றி அடைந்து கொள்ளக்கூடிய ஓர் அறமாகும். தேரி எனப்படும் பாடல்களின்மூலம் கூறப்படுகின்ற பிக்குணிமார்களின் உன்னத வாக்கியங்களைப் பரிசீலிக்கும்போது கூட பொதுவாக விலங்கினத்தின்பொருட்டே போதிக்கப்பட்ட அறிவின்மூலம் புரிந்துகொள்ளக்கூடிய அறமாகவே அது தெரிகின்றது.

புத்தபெருமான் பிக்குமார்களுக்காக ஒழுக்கநெறி முறைமையொன்றை முன்மொழிந்தார். "வினய பிட்டகய" எனப்படும் நூலின் ஒரு பகுதியில் அவை உள்ளடங்கியுள்ளன (பெல்லன்வில விமலரத்தன தேரர், சஞ்சலமற்ற உள்ளம்: பக்கம் 100). புத்தபெருமான் பிக்குமார்களுக்காக ஒழுக்கநெறிகளை விதித்த முறையே அதுவாகும். ஒழுக்கச்சீர் பிக்குமார் சாசனம் எனப்படுவது ஒரு நாட்டின் மிக முக்கியமானதோர் அம்சமாகும். அதேவேளை புத்த தருமத்தில் பெண்களைப் பாகுபாட்டுக்கு உள்ளாக்கவேண்டுமெனவோ அவர்களின் உடல் ரீதியான உரிமைகளை ஆண்கள் சுவீகரித்துக்கொள்ள வேண்டுமெனவோ குறிப்பிடப்படவில்லை.

"புத்த சமயத்தில் ஏனைய கீழைத்தேய மதங்களைப் போன்று பெண்கள்மீது எதிர்ப்புக் காணப்படவில்லை. அது முஸ்லிம்களின் அந்தப்புரம், பர்தா, அல்லது இந்து மதத்தில் காணப்படுகின்ற உடன்கட்டையேறுதல் போன்ற கண்டனத்திற்குரியவற்றிலிருந்து விடுபட்டது. இன்றுவரை பெண்களின் சுதந்திரம் பற்றிய உரிமை பாதுகாக்கப்பட்டுள்ளது. பௌத்த பெண்ணுக்கு அந்தரங்கத்தன்மை உள்ளது. அவர்கள் ஒரு பொருளோ அல்லது பண்டமோ அல்லர்" (பெல்லன்வில விமலரத்தன தேரர், சஞ்சலமற்ற உள்ளம்: பக்கம் 107).

இந்தப் பௌத்த தத்துவத்தையும் பௌத்த கொள்கைகளையும் பின்பற்றாத மற்றும் பிக்குகளின் தீவிரவாதத்திற்கு வித்திடுகின்ற பௌத்த அணிகளால் மிகவும் பாதிப்படைபவர்கள் பெண்களேயாவர். இங்கே மேற்படி பௌத்த அணிகளுடன் இணைந்துள்ள இல்லறத்தோரும் இந்த "முட்டாள்தனமான பக்தி"யுடன் அநாகரிகமான செயற்பாடுகளுக்குப் பக்கபலம் அளிக்கின்றனர்.

## இனப்பெருக்க உரிமைக்கான வரையறைகள்

இனப்பெருக்க உரிமையை வரையறுத்துக் கொண்டு தமக்குத் தேவையான அளவுக்குப் பிள்ளைகளைப் பெறுவது பெண்ணுக்குள்ள உரிமையாகும். அதேவேளை, மேற்படி உரிமை தொடர்பாக பெரும்பாலானவர்கள் தமது கணவரின் அனுமதியுடனும் தூண்டுதலுடனுமே செயற்படுகின்றனர். கருத்தடையை ஏற்படுத்துகின்ற மாத்திரை சாப்பிடுவது புண்ணியச் செயலா, பாவச் செயலா என்ற

அறம் ரீதியான சிக்கலைத் தீர்ப்பதனை ஒருபுறம் வைத்துள்ள இந்த பௌத்த குண்டர் அணிகள் உருவாக்கத் துடிக்கும் கருத்து யாதெனில், "பிறக்கப்போகின்றவன் ஒரு சிங்களவனா அல்லது வேறு இனத்தவனா எனும் கொடூரமான மனநிலையையேயாகும். எல்.ஆர்.ரி. சத்திரசிகிச்சை, கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடுதல் போன்றவை பெரும்பாலும் தாயின் ஆரோக்கியத் தன்மையின் பொருத்தம் அல்லது பொருத்தமின்மையை ஆராய்ந்து மருத்துவர்களால் உறுதிப்படுத்தப்படுகின்ற ஒன்றாகும். அதேவேளை, தொழிலுக்குச் செல்லும் பெண்களுக்கு இரண்டு பிள்ளைகளுக்கு மேலதிகமாகப் பேணி வளர்க்க முடியாதமைக்கான காரணம் பிள்ளைகளின் பாதுகாப்பின் பொருட்டு வீட்டில் பெரியவரொருவர் இல்லாமையேயாகும். மறுபுறுத்தில், இன்று நிலவுகின்ற சமநிலையற்ற பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதற்காக குடும்பமொன்றுக்கு ஒரு நபரின் வருமானம் போதுமானதா என்பது இந்த இல்லற வாழ்க்கையின் கசப்பான யதார்த்தமாகும். இந்த யதார்த்தத்திற்கப்பால் சென்று கனாக்கண்டு இப்போதனையாளர்கள் போதிப்பது "தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகப் பிள்ளைகளைப் பெறவேண்டும்" எனப்படும் பொருளற்ற வாதத்தையேயாகும். அவர்கள் மறந்த ஒரு விடயமும் உள்ளது. அதாவது தேசத்தைக் கட்டியெழுப்புவது பிள்ளைகளும் அவர்களைப் பெற்ற தாய்மாரும் என்பதே அதுவாகும்.

இல்லறச் செயற்பாடுகளில் தலையிடுகின்ற இத்தீவிரவாத பௌத்த குழுக்கள் பல தடவைகளில் எல்.ஆர்.ரி. (பெண்களின் கருத்தடை சத்திரசிகிச்சை) மேற்கொள்ளப்படுகின்ற நிலையங்களுக்குச் (கிளினிக்) சென்று அங்கிருந்த மருத்துவப் பொருட்களை அழித்துப் பாதகமான முறையில் செயற்பட்டிருப்பதைச் செய்தித்தாள்களில் வெளியான அறிக்கைகள் மூலம் நாம் அறிந்துள்ளோம். எல்.ஆர்.ரி. சத்திர சிகிச்சையானது அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சுகாதார நிலையங்களினால் மேற்கொள்ளப்படுகின்றதும் அரச தலையீட்டுடன் நிறைவேற்றப்படுகின்றதுமான ஒரு பணியாகும்.

"ஆசியாவில் இலட்சக்கணக்கான பெண்களுக்கு மத்தியில் புத்த சமயம் எனப்படுவது ஒரு வெறும் நவநாகரிகம் மட்டுமல்ல, அது ஓர் உயிரோட்டமான பக்தியுமாகும். புத்தபெருமானின் போதனைகள் தொடர்பாகப் பெண்களின் உணர்வுகள் மிகவும் உணர்வுபூர்வமிக்கதாக இருக்கக்கூடும். காரணம் அவள் உடல் ரீதியான வேதனையை அனுபவ ரீதியாகவே புரிந்துகொண்டிருப்பதனாலாகும். பிறப்பாக்கம் செய்யும் மகிழ்ச்சியை ஆண்-பெண் இருபாலாரும் பெறுகின்றனர். இருப்பினும் குழந்தைப் பிரசவத்தின் வலியைப் பெண்கள் மட்டுமே அறிகின்றனர்'. (பெல்லன்வில விமலரத்தன தேரர், சஞ்சலமற்ற உள்ளம்: 2013, பக்கம் 107).

பொதுபல சேனாவினால் நடத்தப்பட்ட அதன் முதலாவது அமர்வின்போது ஆண்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற விதை நாளச் சத்திர சிகிச்சையையும் நிறுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. விதை நாளச் சத்திர சிகிச்சையின் மூலமாகவும் பெண்கள் கருத்தரிப்பதே நிறுத்தப்பட்டுள்ளது. கிராமிய மக்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற இச்சுகாதார சேவைகள் ஒரு பெண்ணின் சுகாதார நிலைமையைப் பேணிச்செல்வதற்காக நெறிப்படுத்தப்படும் ஒரு சேவையாகும். பிள்ளைகளுக்கு இடையிலான இடைவெளி, குடும்பமொன்றுக்கு ஈடு கொடுக்கக் கூடிய அளவிலான பிள்ளைகளைப் பெற்றெடுத்தல் ஆகிய விடயங்கள் இல்லற வாழ்க்கைக்கு உரிய விடயங்களாகும்.

## ஆடையை ஒரு பிரச்சினையாகக் கொள்ளுதல்

இத்தகையதொரு பிக்குகள் முன்னணி அண்மையில் பொது இடமொன்றுக்கு ஹிஜாப் பர்தா அணிந்து வந்த முஸ்லிம் பெண் ஒருவருக்கு எதிர்ப்புத் தெரிவித்தமைக்கான காரணம் அவர் ஓர் ஆணா, அல்லது பெண்ணா என்பதை இனங்காண்பது எவ்வாறு என்பதை ஆவேசத்துடன் வினாவியேயாகும். ஹிஜாப் அல்லது பர்தா அணிவது அல்லது அணியாது விடுவது முஸ்லிம் பெண்களின் ஓர் உரிமையாகும். எந்தவோர் இனமாக இருந்தாலும், மதமாக இருந்தாலும் அவர்களின் அடையாளத்தை எடுத்துக்காட்டும் ஆடையின் ஒரு பகுதியை எம்மால் அகற்ற முடியாது. அதனை அவர்களே மாற்ற வேண்டும். முஸ்லிம் பெண்களை 'ஊமாண்டி' எனக் குறிப்பிட்டுக் கிண்டல் செய்வதும் எமது கிராமப்புறப் பேச்சுவழக்கில் கூறுவதைப்போல் "வாயாடிப் பேச்சுக்கள்" கூறுவதும் பிக்குவுக்குப்



பொருத்தமற்றது. அதன்மூலம் ஏளனப்படுவது ஒட்டுமொத்த பிக்குமார் சமூகமே என்பதை இவர்கள் அறியமாட்டார்கள் என எண்ண முடியாது.

மறுபுறத்தில் இங்கே அணி சேர்வது முஸ்லிம் பெண்களின் ஆடை பற்றிய கருத்தியலோ, வியாபார ரீதியான பொறாமையோ அல்ல முஸ்லிம் இனத்தவர்கள், அரசியல்வாதிகள், மக்கள் மற்றும் சிங்கள பௌத்தர்களுக்கிடையிலான இனவாத மோதலொன்றின் ஆரம்பத்திற்கேயாகும்.

2013 ஆவணி 26ஆம் திகதி "இராவணா சக்தி" எனப்படும் பிக்குகளின் அமைப்பானது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் திருமதி நவநீதம்பிள்ளை அவர்களை நாட்டிலிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டது. மேற்படி பிக்குகளுக்கான அமைப்பினால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் முன்னணியில் இருந்தவர்கள் சிறிய பிக்குமார்களாவர். இச்சிறிய தேரர்களுக்கு எதிராகப் பொலீசாரினாலும் எதையும் செய்ய முடியவில்லை. ஒரு நாட்டின் பிள்ளைகள் எனப்படுவது பெரியோர்களால் பாதுகாக்கப்படவேண்டிய மலர் மொட்டுக்களாவர். இருப்பினும், குறிப்பிட்ட மூத்த தேரர்களால் தமது தீய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக இச்சிறிய தேரர்களே பயன்படுத்தப்பட்டார்கள். சிறுவர் உரிமைகள் பாதுகாக்கப்படுவதனுள் சிறிய தேரர்கள் உள்ளடக்கப்படவில்லையா?

புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் பிரச்சினையிலும் தீவிரவாத, மத ரீதியான மோதல்களை உருவாக்கிக்கொண்டே அவர்கள் தலையிடுகின்றனர். மத்திய கிழக்கானது முஸ்லிம்களுக்குச் சொந்தமாகவிருப்பதனால் மத்திய கிழக்கைச் சேர்ந்த பெண் தொழிலாளர்களது பிரச்சினையில் ஓர் அரசியல் சுபாவமே காணப்படுகின்றது. புலம்பெயர் பெண் தொழிலாளர்களின் மூலம் அரசாங்கம் பெறுகின்ற அந்நியச் செலாவணியின் அளவானது மிகவும் உயர்ந்த விகிதாசாரத்தில் காணப்படுகின்றது. எனவே இவர்கள் மத்திய கிழக்கிற்குச் செல்லாவிட்டால் அந்த அளவு குறைவடையும். அதேவேளை, பெண்களுக்குத் தமது உரிமைகளைச் சுதந்திரமாக அனுபவிப்பதற்குள்ள உரிமையை எதிர்த்து மேற்கொள்ளப்படுகின்ற இத்தீவிரவாத செயற்பாடுகளினால் மறுபுறத்தில் இந் நாடு நிந்தனைக்குள்ளாக்கப்படுகின்றது.

## பிக்குகளின் பணிகளுக்கு ஒரு பொலிஸ்

மேற்படி பௌத்த கோட்பாட்டுவாத அல்லது தீவிரவாதக் குழுக்கள் காரணமாக மத அலுவல்களுக்கான பொலிஸ் ஒன்றைத் தாபிப்பதற்கு அரசுக்கு நேர்ந்தமையானது ஒருபுறத்தில் நகைப்புக்கிடமான ஒரு விடயமாகும். அஹிம்சையை நோக்கமாகக் கொண்டதான பௌத்த மதத்தைப் பின்பற்றுகின்ற ஒரு நாட்டுக்கு மதம் தொடர்பான பொலிஸ் படையொன்று தேவைப்பட்டமையானது நகைப்புக்கும் வேதனைக்கும் உரியதொரு விடயமாகும். எவ்வாறாயினும் இடம் பெறுகின்ற மூடத்தனமான செயற்பாடுகளைத் தடுப்பதற்காக தனியான நிறுவனங்கள் உருவாக்கப்பட வேண்டும். இருப்பினும் இராவணா சக்தி மேற்படி விசேட பொலிஸ் அலகிற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தலையணை பாய்களைத் தூக்கிக்கொண்டு அலுவலக வளாகத்திற்குள் பிரவேசித்தது, தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்வரை பாய்களை விரித்துக்கொண்டு தாம் அங்கு தங்கியிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டது. இத்தீவிரவாதக் குழுக்களின் பல் வடிவ கேலிக்கூத்துகளையும் வன்முறைச் செயற்பாடுகளையும் காண்கின்ற உண்மையான பௌத்தர்கள், அத்தகைய பிக்குமார்மீது பட்ட காற்றுக் கூடத் தம்மீது படுவதை விரும்பமாட்டார்கள். ■

**எட்னா மல்காந்தி**

மூலங்கள்: விமலரத்தன, பெல்லன்வில, 2013 – சஞ்சலமற்ற உள்ளம்

wikipedia.org/wiki/Bodu-Bala-Sena

wikipedia.org/wiki/Rawana-balaya

### அடிப்படைவாதிகளின் பகைமைக்கு உள்ளான

# உலக நன்மதிப்புக்குரிய பெண்கள்





"இனம், மதம், வழிபாடுகள் மற்றும் கலாசாரங்கள் என்றவகையில் நீங்கள் உங்களைப் பிரித்துக்கொள்ளும்போது, அதன்மூலம் துன்புறுத்தலே உருவாகின்றது. துன்புறுத்தல் என்றால் என்னவென்பதைப் புரிந்துகொள்வதற்கு முயற்சிக்கும் ஒரு நபர் எந்தவொரு நாட்டுக்கும், மதத்துக்கும், இனத்துக்கும், அரசியல் கட்சிக்கும் அல்லது தரப்புக்கும் உரியவரல்ல. அவரது முழுக் கவனமும் மானுட வகையைப் புரிந்துகொள்வதற்காகவே குவிக்கப்படுகின்றது." இந்திய தத்துவவாதியான ஜே. கிருஷ்ணமூர்த்தி அவர்களின் இவ்வசனங்களுக்கு இன்று எவ்வளவு செல்லுபடியான தன்மையுள்ளது?

மேற்படி கூற்றின் பிரகாரம் இனம், மதம், வழிபாடுகள் மற்றும் கலாசாரங்கள் என்ற வகையில் மனிதர்கள் பிரிந்திருப்பது மனித பல்வகைமையின் முக்கியமான இயல்பாகும். இருப்பினும், மேற்படி பல்வகைத் தன்மையை ஒருவர் தீவிரவாதமான முறையில் இன்னுமொருவருக்கு எதிராகப் பயன்படுத்துவாராயின் அல்லது மற்றவரிடமிருந்து பிரித்து ஒதுக்குவதற்காகப் பயன்படுத்துவாராயின் அதன்மூலம் துன்புறுத்தலே உருவாகும். அடிப்படைவாத துன்புறுத்தல் என்றால் என்னவென்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளும் ஒருவர் தாம் எந்த நாட்டுக்கு, மதத்துக்கு, இனத்துக்கு, அரசியல் கட்சிக்குச் சொந்தமாயினும் அதனைக் கோத்திர மனோபாவமாகப் புரிந்து கொள்ளாத வரை அந்த நபரின் முழுக் கவனமும் மனித இனத்தைப் புரிந்து கொள்வதற்கே செலுத்தப்படும். மத அடிப்படைவாத ரீதியான துன்புறுத்தலானது பல்வேறுபட்ட சமூகங்களில் பெரும்பாலும் அது மத வழிபாட்டை அல்லது நம்பிக்கையைவிட அச்சமூகத்தின் அரசியல் அதிகாரத்தை உறுதிப்படுத்துவதற்கு அல்லது பறித்துக்கொள்வதற்கு மதப் பின்னணியைப் பயன்படுத்துவதனுடனேயே செயற்படுகின்றது. மக்களின் சம்மதத்தின் மூலம் அதிகாரம் தீர்மானிக்கப்படாத மன்னராட்சிகள் அல்லது மதக் கூட்டுத்தாபனங்களில் அதிகாரத்தைப் பறித்துக் கொள்வதற்காகத் துன்புறுத்தலைப் பயன்படுத்துகின்ற குழுக்களால் மேற்படி துன்புறுத்தல்கள் நியாயப்படுத்தப்படுவதைக் காணலாம். அதற்காக மத ரீதியான அடிப்படைவாதத்தினையும்

மதச் சட்டங்களையும் பக்கபலமாகக் கொள்ளுதலானது அச்சமூகத்தின் முன்னேற்றத்துக்கு இடையூறு ஏற்படுத்துவது மட்டுமன்றி, ஒட்டுமொத்த சமூகத்தையே பீதிக்கும் அச்சத்துக்கும் உள்ளாக்குகின்றது. இதன்மூலம் பெரிதும் துன்பப்படுவது பெண்களும் சிறுவர்களுமாவர்.

ஒரு மதம் ஒரு தருணத்தில் பெண்களைப் பூஜா ஆசனத்தில் வைத்து மரியாதை செய்கின்றபோது, இன்னுமொரு மதம் ஒரு பெண்ணை உயிருடன் புதைத்து, கற்களை வீசிக் கொல்கின்றது. இவை ஆயிரம் வருடங்களுக்கு அல்லது சில தசாப்தங்களுக்கு முன்னர் இடம் பெற்ற சம்பவங்களல்ல. இருபத்தோராம் நூற்றாண்டிலும் அத்தகைய மிலேச்சத்தனமான சம்பவங்கள் இடம்பெற்றன. 2004ஆம் ஆண்டு அமீனா எனப்படும் பெண்ணை ஆப்கானிஸ்தானின் வட மாகாணத்தில் உள்ள கிராமத்தில் உயிருடன் புதைத்து கற்களை எறிந்து அவளைக் கொன்றமைக்கான காரணம் அவள் தீயொழுக்கத்துடன் செயற்பட்டாள் என்ற குற்றச்சாட்டாகும். எவ்வாறாயினும் பெண்களைப் பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்துகின்ற ஆண்களுக்கு எதிராக ஷரியா சட்டமோ வேறு சட்டங்களோ நடைமுறைப்படுத்தப்படவில்லை.

பெண்களின் உரிமைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற "ராவா" (Revolutionary Association for the Women of Afghanistan (RAWA) அமைப்புக்கான இணையத்தளத்தில் பெண்களுக்கு எதிரான இத்தகைய துன்புறுத்தல் செயற்பாடுகள் நிதமும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அமைப்பானது பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஆப்கானிஸ்தானில் முதன்முதலில் உருவாகிய பெண்கள் அமைப்பாகும். அதன் மிகவும் துன்பகரமான கதை யாதெனில் அதன் ஆரம்பகர்த்தாவாகிய "மீனா"வும் மதத் தீவிரவாதிகளால் படுகொலை செய்யப்பட்டமையாகும்.

> **ஒரு மதம் ஒரு தருணத்தில் பெண்களைப் பூஜா ஆசனத்தில் வைத்து மரியாதை செய்கின்றபோது, இன்னுமொரு மதம் ஒரு பெண்ணை உயிருடன் புதைத்து, கற்களை வீசிக் கொல்கின்றது.**



## மீனா கேஸ்வர் கமால்

மீனா ஆப்கானிஸ்தான் பெண்களை "உறங்கும் சிங்கங்கள்" என்றே அறிமுகப்படுத்தினார். அவர்கள் நிச்சயமாக எப்போதாவது ஒருநாள் விழித்தெழுந்து தமது உரிமைகளுக்காகக் கர்ச்சித்துப் போராடுவது உறுதி என்பதைச் சபதமிட்டே மீனா அவ்வாறு கூறினார். இருபது வயதை அடைந்தவுடனேயே பல்கலைக்கழகக் கல்வியைப் புறந்தள்ளி அவர் 1977ஆம் ஆண்டு பல எதிர்பார்ப்புக்களை மனதிற்கொண்டே "ராவா" அமைப்பினை ஆரம்பித்தார். சனநாயகத்தைத் தாபித்தல், பெண்களுக்கும் ஆண்களுக்கும் சம உரிமைகளைப் பெற்றுக் கொடுத்தல், சமூக நீதி மற்றும் மத இராஜ்ஜிய ஆட்சியிலிருந்து விடுபடுதல் ஆகிய நியாயமான விடயங்களே அதன் அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது. அதேவேளை, இராணுவப் படையினதும் அவர்களது பொம்மை ஆட்சியாளர்களினதும் அநீதியான ஆட்சிக்கு எதிராக அவர் 1979ஆம் ஆண்டு கூட்டங்களை ஒழுங்குசெய்து, ஆர்ப்பாட்டங்களை நடத்திச் செயற்பட்டமைக்கான காரணம் பொதுசன கருத்தியலை உருவாக்குவதேயாகும். பெண்களை விழிப்பூட்டுவதற்காக "பாயம் இ சான்" (பெண்களின் செய்தி) எனப்படும் இருமொழிச் சஞ்சிகையையும் ஆரம்பித்தார்.

அதேவேளை, யுத்தத்தினால் இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கும் பெண்களுக்குமாக வைத்தியசாலையொன்றையும், பாடசாலைகளையும் ஆரம்பித்ததுடன், பெண்களுக்காகக் கைப்பணி நிலையமொன்றையும் பாகிஸ்தானில் ஆரம்பித்து வைத்தமைக்கான காரணம் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக வெளியேறிச் செல்லும்

அகதிகளுக்கு உதவி செய்வதற்காகவேயாகும். பிரான்ஸ் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் இவரது சேவைகளைப் பாராட்டி, இவரது சமூக சேவைகளுக்கு உதவியளித்தன. இச்சேவைகளையும் செயற்பாடுகளையும் சகித்துக்கொள்ள முடியாத மத ரீதியான அடிப்படைவாதக் குழுக்களும் மற்றும் ரஷ்யாவின் கே.ஜி.பீ. குழுவுடன் சம்பந்தப்பட்ட ஆப்கான் குழுக்களும் இணைந்து அவரை 1987 மாசி 04ஆம் திகதி படுகொலை செய்தனர். இருப்பினும் "ராவா" அமைப்பானது மீனாவின் நோக்கங்களை நிறைவேற்றியவாறு இன்றைக்கும் ஆப்கானிஸ்தானின் பெண்கள் உரிமைகளுக்காகக் குரலெழுப்பி வருகின்றது.

சல்மான் ருஷ்டி என்ற எழுத்தாளரைப் போன்று தஸ்லிமா நஸ்ரீன் என்ற எழுத்தாளரும் அடிப்படைவாதத்தினால் தாக்கப்பட்ட உலகம் போற்றும் நிலையை அடைந்த ஒரு எழுத்தாளராவர்.



# தஸ்லிமா நஸ்ரீன்

பங்களாதேசில் 1962 ஆவணி 25ஆம் திகதி பிறந்த தஸ்லிமா நஸ்ரீன் ஓர் எழுத்தாளராகவும் கவிஞராகவும் செயற்பட்டதுடன், தொழில் ரீதியாக ஒரு மருத்துவராவார். பெண்களுக்கு எதிராக உள்ள தடைகள், காலங்கடந்த சட்டங்கள், அநீதிகள் அவரின் ஆக்கங்களுக்குக் காரணமாக அமைந்தன. அதேவேளை அவரது படைப்புகள் பெண்ணியல்வாத பார்வையில் அமைந்தன. பெண்ணியல் நோய் மருத்துவராகப் பணியாற்றிய காலப்பகுதியில் ஆண்களின் பாலியல் ரீதியான பலாத்காரத்துக்கு இரையாகிய சிறுமிகளும் பெண்களும் அவரிடம் சிகிச்சை பெறுவதற்கு வருகை தந்தபோது அச்சம்பவங்களின் மிலேச்சத்தனத்தை அவர் கண்டார். அவற்றுக்கு எதிராகக் குரலெழுப்ப வேண்டுமெனப் புரிந்துகொண்ட அவர், தமது எதிர்ப்பினைத் தமது கவிதை படைப்புகளினதும் ஏனைய எழுத்து ஆவணங்களினதும் ஊடாக வெளியிட்டார்.

1982 இற்கும் 1993 இற்குமிடையில் எழுதி வெளியிட்ட அனைத்துக் கவிதைகளிலும் பெண்களுக்கு எதிராக நிலவுகின்ற அளவுக்கதிகமான அழுத்தமே தொனிப்பொருளாக அமைந்தது. அவரது ஐந்தாவது நாவலாகிய "லெஜ்ஜா" என்ற நூலின் தொனிப்பொருள் ஓர் இந்துக் குடும்பத்தை முஸ்லிம் பக்தர்கள் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியமையாகும். இந்த நூலை வெளியிட்டதன் பின்னர் அவர் பாரிய துன்புறுத்தல்களுக்கும் உடல் ரீதியான சித்திரவதைகளுக்கும் உள்ளானதோடு, பங்களாதேசத்தைச் சேர்ந்த பெரும்பாலான முஸ்லிம் பக்தர்கள் அவரது "லெஜ்ஜா" எனப்படும் நாவலைத் தடைசெய்யுமாறு ஆர்ப்பாட்டம் செய்தனர். 1993 ஐப்பசி மாதம் முஸ்லிம் அடிப்படைவாதக் குழுவொன்று (Council of Islamic Soldiers) அவருக்கு மரண தண்டனையை வழங்குமாறு வலியுறுத்தியது.

இந்த மரண அச்சுறுத்தலின் பின்னர் இரண்டு மாத காலம் மறைந்திருந்த அவர், 1994ஆம் ஆண்டு தமது மருத்துவத் தொழிலை நிரந்தரமாகக் கைவிட்டுவிட்டு சமூகச் செயற்பாட்டாளராகப் பணியாற்றுவேன் என்ற திடசங்கற்பத்தோடு சுவீடனுக்குத் தப்பிச் சென்றார். இவ்வாறு நாட்டிலிருந்து வெளியேறிய அவர் 2004ஆம் ஆண்டுவரை மேற்கத்தேய நாடுகளில் வாழ்ந்து வந்தார். சுவீடன் அரசு அவருக்குப் பிரஜா உரிமையைப் பெற்றுக்கொடுத்ததோடு, அவர் ஜெர்மனியில் அகதி அந்தஸ்துடன் வாழ்ந்து வந்தார். எவ்வாறாயினும் தனது நோயாளித் தாயையும் தந்தையையும் பார்ப்பதற்காக வருவதற்கு மரணத் தருவாயில்கூட அவரது தாய் நாடாகிய பங்களாதேஷ் அவருக்குக் கடவுச்சீட்டினை வழங்கவில்லை. 2000ஆம் ஆண்டு அவர் தனது "சுத்தி" எனப்படும் நாவலின் மொழிபெயர்ப்பினை வெளியிடுவதற்காக மும்பாய்க்கு வருகை தந்தார். அச்சந்தர்ப்பத்திலும்

“கருத்துச் சுதந்திரத்தை” தொனிப் பொருளாகக் கொண்ட, அவர் பங்குபற்ற உத்தேசித்திருந்த நிகழ்ச்சியை, முஸ்லிம் அடிப்படைவாதிகள் தடை செய்ததோடு அவரை உயிருடன் எரிப்பதாகவும் அச்சுறுத்தினர்.


2004ஆம் ஆண்டு அவருக்கு வதிவிடப் பிரஜாவுரிமை இந்திய அரசினால் வழங்கப்பட்டதோடு, அவர் கல்கத்தாவில் மேற்கு வங்காளத்தில் குடியேறினார். அக்காலப்பகுதியில் அவர் இந்தியப் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் தமது கட்டுரைகளை வழங்கி தமது எழுத்தாளர் வாழ்க்கையை முன்னெடுத்தது அவர் பேசுகின்ற மற்றும் எழுதுகின்ற மொழி அப்பிரதேசத்தில் பயன்படுத்தப்படுகின்ற மொழியாக அமைந்திருந்ததனாலாகும். “ஆனந்த பசார் பத்திரிகா” மற்றும் “தேஷ்” ஆகிய வெளியீடுகளில் அவரது கட்டுரைகள் நிதமும் பிரசுரிக்கப்பட்டன. அக்காலப்பகுதியில் அவர் எழுதியவற்றின் காரணமாகவும் அவரது செய்யுள் ஆக்கங்கள் காரணமாகவும் பல்வேறுபட்ட அடிப்படைவாத அமைப்புகளினால் அவருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் எல்லை கடந்தன.

வெளிநாட்டில் கூட அவற்றுக்குக் குறைவில்லை என்பதற்கான உதாரணம் 2005ஆம் ஆண்டு அவர் “அமெரிக்கா” எனும் யுத்தத்துக்கு எதிரான கவிதையொன்றை வாசிப்பதற்காக நியூயோர்க் நகர மெடிசன் சதுக்கத்தின் மேடைக்குப் பிரவேசித்தவுடனேயே அவரை அங்கிருந்து வெளியேற்றும் அளவுக்கு அடிப்படைவாதிகளால் முடிந்தது என்பதாகும். அது மட்டுமல்ல, அந்தக் காரணத்தை அடிப்படையாகக்கொண்டு இந்தியாவைச் சேர்ந்த (All India Muslim Personal Board) ஒரு அடிப்படைவாதக் குழுவொன்றினால் அவரைச் சிரச்சேதம் செய்பவருக்கு இந்திய மதிப்பில் 500,000 ரூபாய் வழங்குவதாகப் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது.

தஸ்லிமா நஸ்ரீன் அவமானங்களுக்கும் விருதுகளுக்கும் பாராட்டுதல்களுக்கும் ஒருசேர ஆளானமை அவரது ஆக்கபூர்வமான தன்மை மற்றும் அச்சமின்மை என்பவை ஒன்றாகக் கைகோர்த்துக் கொண்டிருந்தமையாலும் அவருக்கிருந்த சர்வதேச அங்கீகாரத்தினாலும் இடம்பெற்றது. அவர் பல நாடுகளிடமிருந்து 28 சர்வதேச விருதுகளை வென்றிருந்ததோடு பாரிஸில் உள்ள அமெரிக்கப் பல்கலைக்கழகத்திலிருந்து விசேட கலாநிதிப் பட்டமொன்றினாலும் கௌரவிக்கப்பட்டார். அவர் யதார்த்தபூர்வமாக எழுதியவை விமர்சனத்துக்கு உட்படுத்தப்பட்டுத் தடைசெய்யப்படுகையில் அவர் அவருக்காகவே ஆஜராகி வாதாடினார். அவரது ஆக்கத்திறனைப் பாராட்டி, அவரை ஊக்குவித்து, அவருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காகப் பல எழுத்தாளர்களும் கலைஞர்களும் முன்வந்தனர். மகேஸ்வதா தேவி என்ற எழுத்தாளரும் திரைப்பட இயக்குநர் விபாஷ் சக்கரவர்த்தி, கவிஞர் ஜோகோசுவாமி, சித்திரக் கலைஞர்களாகிய பிரகாச கர்மகர் மற்றும் பரிதோஷ் சென் மற்றும் அருந்ததி ரோய், கிரிஷ் கர்னாத் போன்ற எழுத்தாளர்களும் அவரை வீட்டுக்காவலில் வைப்பதற்கு எதிராக அவர் சார்பில் பேசினர்.

## மலாலா

அண்மைக்காலத்தில் முழு உலகையுமே சோகத்துக்குள்ளாக்கிச் சர்வதேச கவனத்தை ஈர்த்துக்கொண்ட மலாலா எனும் சிறுமி அடிப்படைவாதிகளின் மற்றுமோர் இலக்கானாள். மலாலா யூசுப்சாய் 1997 ஆடி 12ஆம் திகதி இவ்வுலகில் பஷ்ரூன் மொழி பேசுகின்ற சுன்னி முஸ்லிம் குடும்பமொன்றின் அங்கத்தவராகப் பிறந்தார். தென் ஆப்கானிஸ்தானில் வாழ்ந்த பிரபல்யமான பஷ்ரூன் கவிஞராகவும் போராட்டவாதியுமான மைவாந்த்ஹி மலாலாய் எனும் வீரப் பெண்ணுக்குச் செய்யும் மரியாதையாகவே இவருக்கு மலாலா எனப் பெயர் சூட்டப்பட்டது. அவர் தமது அடிப்படைக் கல்வியை அவரது தந்தையாகிய சியாயுத்தீன் யூசுப்சாயிடம் பெற்றுக்கொண்டார். அவர் திறமையான ஒரு கவிஞர் என்பதைப்போலவே ஒரு பாடசாலையின் உரிமையாளராகவும் இருந்ததோடு கல்வி உரிமைக்காகச் செயற்பட்ட செயற்பாட்டாளராகவும் இருந்தார். அவரின்கீழ்



"குஷால் பொதுப் பாடசாலைகள்" என்ற பெயரில் பாடசாலை முறைமையொன்று இயங்கிவந்தது.

மலாலா தமது தந்தையின் வழிகாட்டல்களின் பிரகாரம் சென்று சிறுமிகளின் கல்வி உரிமை தொடர்பாக மாகாண ஊடக மாநாடொன்றில் தமது 11ஆவது வயதில் உரை நிகழ்த்தினார். அது 2008 புரட்டாதி மாதத்திலாகும். அது தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடாக ஒளி, ஒலிபரப்புச் செய்யப்பட்டதுடன், அச்சு ஊடகங்களின் மூலமும் வெளியிடப்பட்டிருந்தது. உரையின் தொனிப்பொருளானது "கல்விக்காக எனக்குள்ள உரிமையைத் தலீபான்கள் பறித்துக்கொள்வது எவ்வாறு?" என்பதாகும்.

அக்காலப்பகுதியில் தலீபான் அடிப்படைவாதிகள் மலாலா குடியிருந்த ஸ்வாத் பள்ளத்தாக்கின் அதிகாரத்தைக் கைப்பற்றியிருந்ததோடு, அதன் தலைமைத்துவத்தை மௌலானா, பசி உல்லாஹ் வகித்தார்.

தலீபான் போராளிகள் சிவில் மக்களை அச்சுறுத்தி பெண் பிள்ளைகள் தொலைக்காட்சி மற்றும் இசை நிகழ்ச்சிகளில் பங்குபற்றுவதையும், பெண்கள் பாடசாலை செல்வது மட்டுமன்றிப் கடைகளுக்குச் செல்வதையும் தடைசெய்து தமது கட்டளைகளைப் பரப்பினார்கள். அவர்கள் நகரங்களின் மத்தியில் சிரச்சேதம் செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் முண்டங்களைத் தொங்கவிட்டு, மக்களைப் பீதியடையச் செய்து அச்சுறுத்தல் விடுத்தனர்.

இந்த அச்சுறுத்தல்கள் தொடர்பாகச் சர்வதேசம் தொடர்ந்தும் கவனஞ் செலுத்தி வந்ததுடன் 2008ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் உருது மொழியில் பி.பி.சி. சேவையில் பணியாற்றுகின்ற அமீர் அஹமட் கான் என்பவர் மேற்படி தகவல்களை மேற்படி அழுத்தங்களுக்குள்ளாகும் ஒரு சிறுமியைக் கொண்டே உலகுக்கு வெளிப்படுத்த எண்ணி, அதற்காக 'ப்ளொக்' ஒன்றைச் செய்வதற்காக யாரேனுமொருவரைத் தேடித் தருமாறு மலாலாவின் தந்தையிடம் கேட்டுக்கொண்டார்.

இதற்காக மலாலாவின் தந்தையினுடைய பாடசாலையொன்றிலிருந்த அயேஷா எனப்படும் ஒரு சிறுமி இணக்கம் தெரிவித்தாலும் அதற்கு அவளது குடும்பத்தாரின் அனுமதி கிடைக்கவில்லை. மலாலாவிடம் மேற்படி சவால் இந்த வகையிலேயே ஒப்படைக்கப்பட்டது. சிறுமிகளுக்கான கல்வி உரிமை பறிக்கப்படுவது தொடர்பாக அவளிடம் காணப்பட்ட மனவருத்தத்திற்கெதிராக குரலெழுப்பக் கிடைத்தமை தொடர்பாகப் பெரிதும் மகிழ்ச்சியடைந்த அவள் அப்பணியை ஏற்றுக்கொண்டாள். இருப்பினும் அவளது பாதுகாப்பின் பொருட்டு உண்மையான பெயரிலன்றிப் புனைபெயரில் எழுதுவது மிகவும் பொருத்தமானதென்பது அவர்களது கருத்தாக அமைந்தது. அதன்படி அவள் "சோளம் பூ" (குல் மக்காய் -கோன் ப்ளவர்) என்ற பெயரில் எழுத ஆரம்பித்தாள்.

2009 தை 29ஆம் திகதி அவளது முதலாவது கட்டுரை பி.பி.சி. உருது ப்ளொக்கில் வெளியானது. அவள் தனது ஆக்கங்களைக் கைகளால் எழுதி அறிக்கையாளர் மூலம் ஸ்கேன் செய்து பி.பி.சி.க்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பிவைத்தாள். ஸ்வாத் பள்ளத்தாக்கில் தலீபான் போராளிகள் போராட்டத்தை ஆரம்பித்தவுடன் பெரும்பாலான பெண் பிள்ளைகளின் பாடசாலைப் பயணம் தடைப்படும் துன்பியல் தொடர்பான அவளின் அதிர்ச்சி அதன் மூலம் எடுத்தியம்பப்பட்டது. அப்போதுகூட சுமார் 100 மகளிர் பாடசாலைகள் குண்டுத் தாக்குதல் மூலம் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. அவள் நாளுக்குநாள் அனுபவிக்கும் துன்பங்களை எழுத்தில் பொறித்தாள்; பாரறியச் செய்தாள். அவர்களது வீட்டைத் தலீபான்கள் கொள்ளையிட்டதோடு தொலைக்காட்சி இயந்திரத்தையும் எடுத்துச்சென்றனர். ஆண்களுக்கான பாடசாலைகள் திறக்கப்பட்டாலும் பெண் பாடசாலைகள் தணிக்கை செய்யப்பட்டு மூடப்பட்டன. தடை செய்யப்பட்டதனால் 700 பிள்ளைகளுள் சுமார் 70 பேர் மட்டுமே பாடசாலைக்கு வருகை தந்ததாக அவள் எழுதி அனுப்பினாள். மூன்று நாட்களுக்குப் பின்னர் பாடசாலைகளைத் திறப்பதாகவும் இருப்பினும் சகல பெண் பிள்ளைகளும் புர்கா அணிந்து பாடசாலைக்கு வரவேண்டுமெனவும் பிராந்திய தலீபான் தலைவர் தெரிவித்தார். மலாலாவின் வகுப்பைச் சேர்ந்த 27 மாணவிகளில் 19 பேர் பாடசாலைக்கு வருகை தந்ததாக அவள் எழுதினாள். இருப்பினும் தொடர்ச்சியாக இராணுவத்தினருக்கும் தலீபான் போராளிகளுக்குமிடையில் யுத்தம் இடம்பெறுவதனால் அவர்கள் ஷெல் வெடிகுண்டுகளால் அச்சமடையும் விதம் தொடர்பாகவும் அவள் எழுதினாள்.

பங்குனி 09ஆம் திகதி தாம் விஞ்ஞான பாட வினாத்தாளுக்கு வெற்றிகரமாக விடையளித்ததாக எழுதி அறிவித்தாள். அவள் எழுதிய ப்ளொக் 2009 பங்குனி 12ஆம் திகதி முடிவுற்றது.

2009 மார்கழி மாதம் பி.பி.சி. உருதுமொழி ப்ளொக்கிற்கு எழுதியது அவள் என்பது வெளியானது. மரண அச்சுறுத்தல்கள் பல பக்கங்களிலுமிருந்து வந்தாலும் அவற்றினால் சலனமடையாத அவள் தனது கருத்துக்களைப் பல ஊடகங்களின் வாயிலாகவும் வெளியிட்டாள். ஒரு தடவை மரண அச்சுறுத்தல் அவளது வீட்டின் கதவின் இடுக்கின்வழியே வீட்டுக்குள் போடப்பட்டிருந்தது. 2012 கோடை காலத்தில் அவளைக் கொலை செய்வதற்குத் தலீபான் அமைப்புத் தீர்மானித்தது. 2012 ஐப்பசி 09ஆம் திகதி அவள் பாகிஸ்தானின் ஸ்வாத் பள்ளத்தாக்கில் பரீட்சையொன்றுக்குத் தோற்றி மீண்டும் திரும்பி வருகையில் தலீபான் தீவிரவாதியொருவன் அவளைச் சுட்டான். துப்பாக்கி ரவையானது தலையையும் கழுத்தையும் துளைத்துக்கொண்டு அவளது தோள்பட்டைவரை சென்றது.

ஹைனத் றியாஸ் மற்றும் ஷாசியா ரம்ஸான் ஆகிய அவளது இரு நண்பிகளும் இத்தாக்குதலுக்குள்ளாயினர். சுடப்பட்டதன் பின்னர் அவள்
பெஷாவர் இராணுவ ஆஸ்பத்திரிக்கு வாகனத்தின் மூலம் கொண்டு செல்லப்பட்டாள். மூன்று மணித்தியால சத்திரசிகிச்சையின் பின்னர் ரவை அகற்றப்பட்டது. மேலதிக சிகிச்சைக்காக பர்மின்ஹாம் குயீன் எலிசபெத் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டாள். 2012 ஐப்பசி 17ஆம் திகதி அவள் கோமா நிலையிலிருந்து மீட்சி பெற்றதோடு 21ஆம் திகதி அவளது நிலைமை உறுதியானது எனவும் மூளையில் ஏற்பட்ட சேதங்களினால் எதிர்காலத்தில் ஆபத்து நிலை ஏற்படமாட்டாதெனவும் மருத்துவர்கள் தெரிவித்தனர். அவளுக்கு ஏற்பட்ட அநீதி தொடர்பாக சர்வதேச ரீதியாகப் பாரியளவில் பேசப்பட்டது. அடிப்படைவாதிகளுக்கு எதிராகக் கடுமையான எதிர்ப்பு உலகம் பூராவும் உருவானதோடு மலாலாவின் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்கும் சிறுமிகளின் கல்வி உரிமைக்கான அவளது போராட்டத்தை முன்னெடுத்துச்செல்வதற்கும் உதவியளிக்கும் அமைப்புகள் உருவாயின. மலாலா மன்றம் என்ற பெயரில் அவளின் சார்பாக ஓர் உதவி நிறுவனம் உருவானது. மடோனா எனப்படும் பிரச்சித்திபெற்ற பாடகி அவளுக்காக ஒரு பாடலைப் படைப்பாக்கம் செய்ததோடு அஞ்சலினா ஜொலீ எனப்படும் பிரசித்தி பெற்ற ஹொலிவுட் நடிகை மலாலா மன்றத்துக்கு 200,000 அமெரிக்க டொலர்களைக் கொடையளித்தார்.

பக்கிங்ஹாம் மாளிகைக்குச் சென்று இரண்டாம் எலிசபெத் மகாராணியைச் சந்தித்த அவள் அவளது 16வது பிறந்த நாளாகிய 2013 ஆடி 12ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னால் சிறுமிகளின் கல்வி உரிமை தொடர்பாகத் தனது கருத்துக்களைத் தெரிவித்தார். அத்திகதி "மலாலா தினம்" எனப் பெயரிடப்பட்டது. 2011 தொடக்கம் இன்றுவரை அவள் தேசிய மற்றும் சர்வதேச விருதுகள் 35இனைப் பெற்றுள்ளதுடன் நோபல் பரிசுக்கும் தேர்ந்தெடுப்பதற்காக அவளது பெயர் முன்மொழியப்பட்டதாக "நான் மலாலா" என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. நோபல் பரிசுக்காக பெயர் முன்மொழியப்பட்ட மிகவும் வயது குறைந்தவராக அவள் உலக சாதனை படைத்துள்ளாள்.

அவள் கிறிஸ்டினா லேம்ப் உடன் எழுதிய "நான் மலாலா" ( I am Malala) என்ற நூலைத் தடைசெய்யுமாறு ஒட்டுமொத்த பாகிஸ்தான் தனியார் பாடசாலைகள் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளதுடன் அவர்களது 152,000 ஒருங்கிணைந்த நிறுவனங்களில் அந்த நூல் பரிசீலிக்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது.

அடிப்படைவாதிகளிடமிருந்து நிந்தனைகள், அவமானங்கள் மற்றும் அச்சுறுத்தல்கள் வரும் அளவிற்கு உலகத்திலிருந்து பாராட்டுகளும் விருதுகளும் கிடைக்கும். இருப்பினும் உரிமைக்காக தமது கருத்துக்களைத் தெரிவிக்கும் அடிப்படையில் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் மதத்தின் அல்லது கலாசாரத்தின் பெயரால் இவ்வாறு சித்திரவதைகளைச் செய்வது அல்லது உயிருக்கு அச்சுறுத்தல் விடுப்பது 21ஆம் நூற்றாண்டின் இறுதியிலேனும் முடிவுக்குக் கொண்டுவரும் பொறுப்பினை பொறுப்பேற்பது யாரென உரத்த தொனியில் கேட்கின்றேன். ■


**கலாநிதி புஷ்பா ரம்லனீ**

மூலங்கள்

http://en.wikipedia.org/wiki/Taslima_Nasrin) http://www.rawa.org/meena_time.htm

http://en.wikipedia.org/wiki/Malala_Yousafzai /

I AM MALALA / by Malala Yousufzai with Christina Lamb



# மதங்களும் பெண்களும்

எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின் கேட்கிறார் "இது தான் மதம் என்றால் அதனை ஏன் பெண்கள் தங்கள் தோள்களில் சுமக்க வேண்டும்.?" அவர் கேள்வியில் முதல் வார்த்தைகளான இது தான் மதமென்றால் ... என்பதை விளக்கி ஆம் இது தான் "மதம்" என்று காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். முதலில் மதம் என்பது என்ன? அந்நிறுவனத்தைப் பற்றி நாம் என்ன கருத்து வைத்திருக்கின்றோம்? இன்று மதத்தைப் பற்றி பல புதிய வியாக்கியானங்கள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மதம் மனித இனத்தின் "ஆன்மா" "இளைப்பாறுதல்" இப்படியாகப் பல.. இவற்றிற்குள் உள்ளே போவதோ இவற்றைப் பரிசீலிப்பதோ நமது நோக்கமன்று. இக்கட்டுரை தனது பயணத்தைத் துவங்குமுன் வரலாற்றில் மதம் வகித்திருக்கும் பாத்திரத்தின் அடிப்படையில் "மதத்தை" வரையறை செய்து கொள்ள விரும்புகிறது.

மதம் என்பது என்ன? மதத்தின் தலைவன் "கடவுள்"காரண கர்த்தாவாகக் கற்பிக்கப்பிட்டிருப்பினும் கடவுள் தான். இந்தக் கடவுளின் கருவறை ஆதிமனிதனின் அறியாமையும், பயமும் தான். கடவுளின் தொடர்ந்த இருத்தலுக்கு ஆயிரம் காரணத்தைக் கற்பிக்கலாம்.

ஆனால் தோற்றுவாய் இது தான் என்பதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை.

அறியாமை தோற்றுவித்த இந்தக் குழந்தையை "அயோக்கியர்கள்"தத்தெடுத்து வளர்த்தனர்.

மதம் ஒரு மிகப் பெரிய நிறுவனமானது புரோகித கூட்டங்களின் நன்மைக்காகவே. நமது நாட்டில் மட்டுமல்ல உலகெங்கிலும் இதுவே உண்மையாக உள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளாக இதுவே மதங்களின் வரலாறாக உள்ளது. இந்த நீண்ட வரலாற்றில் இம்மதமானது அரசு, தேசம், இனம், குடும்பம், இலக்கியம் இப்படி மானுடவியலின் அனைத்து அம்சங்களுடனும் இணை பிரியாத் தோழமை பூண்டு விட்டது. மதத்துடனான மோதலிலேயே கருக்கொண்டு உருக்கொண்டு வளர்ந்த அறிவியலுடன் கூட இன்று அது சமரசம் பேசிக் கொண்டு தனது ஆளுமையை நிலை நிறுத்திக் கொள்ள வழி தேடிக் கொண்டு விட்டது. இப்படி அனைத்திலும் ஊடுருவி நிற்கும் மதத்தை எதிர்த்து மக்களிடையே பணி செய்ய முடியாது என்று முற்போக்களார்களும் மயங்கும் காட்சியில் இன்று நாம் நிற்கிறோம்.

நம்மைப் பொறுத்தவரையில் மதத்தின் வரலாற்றுப் பாத்திரத்தையும் அதன் வன்முறை முகத்தையும் மறந்து விட்டு எந்த திரிபுவாத விளக்கங்களுக்குள்ளும் போக விரும்பவில்லை. மதம் இன்று தோற்றம் தருவது போல் வெறும் கருத்தியல் ரீதியான வன்முறையில் மட்டும் ஈடுபட்ட ஹர் அமைப்பு அல்ல.

ஆயுதந் தாங்கிய வன்முறை எந்தவொரு மதத்திற்கும் விதிவலக்கானதல்ல. அன்பைப் பற்றி பேசுவதற்கு சிறிதும் யோக்கியதையேயில்லாத ஓர் அமைப்பு உண்டென்றால் அது மதம் தான் என்று யாரும் துணிந்து கூறலாம்.

வன்முறை வாயிலாக மட்டுமே அனைத்து மதங்களும், முக்கியமாக கிறிஸ்தவம், இஸ்லாம் மற்றும் இந்துமதங்கள் தங்களை நிலைநிறுத்தி வளர்ந்திருக்கின்றன.

ஆனால் இன்று மனித இனம் தனது அமைதிக்காகவும், சமாதனத்திற்காகவும், இளைப்பாறுதலுக்காகவும் மதத்தை அண்டி வாழ்வது போலதானதொரு தோற்றம் ஏற்பட்டிருக்கிறது அல்லது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சரி, எப்படியாயினும் மதம் இன்று நாம் எடுத்துக் கொண்டிருக்கும் தனித் தலைப்பல்ல.

இக்கட்டுரையைப் பொறுத்த வரையில் குறிப்பாக மதம் பெண்கள் வாழ்வில் வகிக்கும் பாத்திரத்தைப் பற்றி மட்டுமே பார்க்க இருக்கிறோம். இன்று நடைமுறையில் நாம் காணும் பெண்கள் மதத்தின் மீது தீவிர மரியாதையும் ஈடுபாடும் கொண்டு காணப்படுகின்றார்கள் மதரீதியிலான சடங்குகளில் அதீத ஆர்வம் காட்டுகிறார்கள். அதிலே அவர்களுக்கு எதிர்காலம் பாதுகாக்கப்படுவதாக ஓர் உணர்விருக்கிறது. ஒரு கோணத்தில் அவர்களுக்கு அது நல்லதொரு பொழுதுபோக்காகவும் இருக்கிறது. தங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சமூக இருத்தல், அங்கீகாரம் அல்லது மரியாதை இப்படியாக விளங்கியும் விளங்காததுமுமான உணர்வுகளும் அவர்களை உந்தித் தள்ளுகின்றன. உள்ளூற இவற்றை கடைப்பிடிக்கத் தவறினால் தாங்கள் தண்டிக்கப்பட்டு விடுவோம் என்ற மத அமைப்பு உருவாக்கி வைத்திருக்கும் உளவியல் அச்சமும் அவர்களை இயக்குகிறது. ஆக இப்படி பல்வேறு காரணிகளின் கூட்டு செயற்பாட்டினால் இவ்வமைப்பை சிரமேற் கொண்டு பெண்கள் தாங்கி வருகிறார்கள்.

அடிமை வாழ்வுக்கே உரித்தான தன்மானமின்மையும் பயமும் அருவெறுக்கத் தக்க குறுகிய சுயநலமும் தவிர இதில் பொதிந்திருக்கும் மகோன்னதமான உண்மை என்று எதுவுமில்லை. ஏங்கல்ஸ் வரலாற்றில் தோன்றிய காலத்துக்குச் சொன்ன வார்த்தைகளை நமது காலமும் சுமந்து கொண்டு நிற்கிறது.

ஆம் பெண்ணினத்தின் மீது ஆணினம் வெற்றி கொண்டு விட்டது. ஆனால் வெற்றி பெற்றவர்களுக்கு முடி சூட்டும் வேலையை தோல்வியுற்றவர்கள் தாராள சிரத்தையுடன் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் மதம் பெண், ஆண் இருபாலாரையும் வன்முறைக்குட்படுத்திய, உட்படுத்திக் கொண்டிருக்கின்ற ஒரு நிறுவனம் தான். ஆனாலும் நாம் தொடக்கத்திலேயே குறிப்பிட்டது போல மதம் யாருடைய நன்மைக்காக வளர்க்கப்பட்டதோ அந்த புரோகிதக் கூட்டத்தார் ஆண்கள் கூட்டமாகவே இருந்தபடியால் (குறிப்பாக ஏடறிந்த வரலாற்றுக் காலத்துக்குப் பிறகு) அது ஆண்களுக்கான அமைப்பாக என்று மட்டுமல்ல ஆண்களுக்காகவே பெண்கள் வாழ்ந்து தீர வேண்டும் என்று வலியுறுத்துகிற கொடுங்கோன்மை அமைப்பாகவும் பரிணமித்து விட்டது.

"சிகாகோவில்"போய் விவேகானந்தர் கூறுகிறார் இந்து மதத்தின் ரிஷிகள் பெண்களாக இருந்தார்கள் என்று. உடனே நாமும் அப்படியா? என்று எப்படிக் கேட்டுக் கொள்வது என்று தெரியவில்லை. அது உண்மையானால் அதனை அந்த எழுத்துக்கள் தான் நிரூபிக்க வேண்டும். மற்றப்படி கடவுள் நிலைதானே ரிஷிகளுக்கும் கண்டவர் யார்? விண்டவர் யார்?

கடவுள் ஆணாக இருக்கின்றான் மதங்கள் அனைத்தின் தலைமைக் கடவுள்களும் ஆண்கள் தான். பெண்ணியச் சிந்தனை என்ற பெயரில் சிலர் இப்போது கடவுளைப் பெண்ணின் உருவாக சித்தரிக்க முயற்சி செய்கிறார்கள். இதெல்லாம் பெண்ணினத்தைக் காப்பாற்ற அல்ல மாறாக மதத்தைக் காப்பாற்றவே உதவக்கூடும். கடவுள் மட்டுமல்ல தலைமைப் புரோகிதர்களும் எல்லா மதங்களிலும் ஆண்கள் தான். இன்று பெண்கள் சிந்திக்கத் தொடங்கியவுடனேயே கடவுளைப் பெண்ணாக சித்தரிக்க அவர்கள் முயல்கிறார்களே.. விவேகானந்தர் கூறுவதைப் போல் ஆதிகால இந்து ரிஷிகள் பெண்களாக இருந்திருப்பார்களேயானால் கடவுளை பெண்ணாக உருவகிக்கத் தானே விரும்பியிருப்பார்கள்?

உலகளாவிய மதங்களாகிய கிறிஸ்தவம், இஸ்லாம் நமது நாட்டின் இந்து மதம் இவை மூன்றையும் நாம் முகாமையாக எடுத்துக் கொண்டுள்ளோம். ஒவ்வொரு மதமும் பெண்ணின் படைப்பு. இருத்தல், வாழ்க்கை, படைப்பு பற்றிய கோட்பாடு

உலகம் கடவுளால் படைக்கப்பட்டது என்பதே மதத்தின் தொடக்கமாகும். தொடர்ந்து மனிதனைப் படைத்தவன் கடவுள் என்ற கருத்தை முன்வைத்தே அது தன் வரலாற்றைத் துவங்குகிறது. இந்த ஆண்டவனின்

படைப்பிலேயே ஆணும் பொண்ணும் சமமானவர்களாக இல்லை என்பது தான் ஆணாதிக்க சிந்தனையின் மூலமாகும். ஒவ்வொரு மதமும் படைப்புப் பற்றிய தனது கோட்பாட்டை எவ்வாறு முன்வைக்கிறது என்பதை நாம் முதற்கண் ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம்.

இன்று வரையிலும் கூட யூதர்கள் தங்களுடைய அன்றாட பிரார்த்தனையில் தங்களை பெண்ணாக படைக்காததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர். இப்படியாகப் படைக்கப்பட்டிருக்கிற ஒரு கடவுளை அந்தக் கடவுளின் பெயரால் புனையப்பட்டிருக்கிற மத நிறுவனத்தை எந்தப் பெண்ணாவது ஏற்றுக் கொள்வாளா?

## கிறிஸ்தவம் - ஆதியாகமம்

*18. பின்பு, தேவனாகிய கர்த்தர். மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.*



**யூதர்கள் தங்களுடைய அன்றாடப் பிரார்த்தனையில் தங்களைப் பெண்ணாகப் படைக்காததற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர். இப்படியாகப் படைக்கப்பட்டிருக்கிற ஒரு கடவுளை அந்தக் கடவுளின் பெயரால் புனையப்பட்டிருக்கிற மத நிறுவனத்தை எந்தப் பெண்ணாவது ஏற்றுக் கொள்வாளா?**

*19. தேவனாகிய காத்தர் வெளியின் சகலவித மிருகங்களையும் ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணிலே உருவாக்கி "ஆதாம்" அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும் படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்". அந்தந்த ஜீவஜந்துகளுக்கு ஆதாம் எந்தெந்தப் பெயரிட்டானே அதுவே அதற்கு பெயராயிற்று.*

*21. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார். அவன் நித்திரையடைந்தான். அவர் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார்.*

*22. தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளே மனுஷனிடத்தில் கொண்டு வந்தார்.*

*23. அப்பொழுது ஆதாம். இவன் என் எலும்பில் எலும்பும், என் மாமிசத்தில் மாமிசமுமாய் இருக்கிறாள். இவள் மனிதனில் இருந்து எடுக்கப்பட்டபடியினாலே "மனுஷி" எனப்படுவாள் என்றான்.*

*24. இதன் நிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாமிசமாய் இருப்பார்கள்?*

*14. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து நீ இதைச் செய்தபடியால் சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய் நீ உன் வயிற்றினால் நகர்ந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்*

*15. உனக்கும் ஸ்திரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார் நீ அவர் குதிக்காலை நசுக்குவாய் என்றார்.*

*16.அவர் ஸ்திரியை நோக்கி நீ கர்ப்பவதியாயிருக்கும் போது உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன் வேதனையோடு பிள்ளை பெறுவாய். உன் ஆசை உன் புருசனைப் பற்றியிருக்கும். அவன் உன்னை ஆண்டு கொள்ளுவான் என்றார்.*

*பின்பு அவர் ஆதாமை நோக்கி நீ உன் மனைவியின் வார்த்தைக்குச் செவி கொடுத்து, புசிக்க வேண்டாம் என்று நான் விலக்கிய விருட்சத்தின் கனியை புசித்தபடியினாலே,*

பூமி உன் நிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடு அதன் பலனைப் புசிப்பாய். மேற்கூறிய வார்த்தைகள் பைபிளிலிருந்து எடுக்கப்பட்டவை. நம் அனைவருக்கும் நன்கு அறிமுகமான வார்த்தைகளுமாகும்.

இவ்வார்த்தைகள் தெரிவிக்கும் கருத்து என்ன?

1. கடவுளின் படைப்பு வரிசையில் மிருகங்களுக்கு கீழே பெண் வருகிறாள்

2. "பெண்" படைப்புக்கான தேவை- ஆணிற்கு ஒரு துணை தேவை என்பதே. அதில்லாமல் பெண் படைப்புக்கான தேவை வேறு எதுவுமில்லை பெண் இல்லாமலேயே உலகம் படைப்பில் முழுமை பெற்றே இருந்தது. கடவுளின் இரண்டாம் பட்ச சிந்தனையே பெண்ணின் படைப்பு.

3. பெண் உடலியல் ரீதியாக ஆணின் ஒரு விலா எலும்புக்குச் சமமானவள்

4. பாவத்தைத் தூண்டுபவளாக பெண்ணே பணியாற்றி இருக்கிறாள்.

அதனால் ஆண்டவனால் சபிக்கப்பட்டு ஆணுக்கு இல்லாத மகப்பேற்று சுமைக்கு ஆளாகியிருக்கிறாள். அதாவது கர்ப்பம் பெண்ணுக்குக் கடவுளின் சாபமாகும். இதன் பின் மதத்துக்காக விரிவுரை மற்றும் விளக்கவுரை எழுதியிருக்கும் புனிதத் துறவிகள் இன்னும் மோசமாகச் சென்று மகப்பேறு, மாதவிடாய், குழந்தை வளர்ப்பு, பெண் அடிமையாய் இருக்க வேண்டியது, முக்காடிட்டுக் கொள்ள வேண்டியது இவையெல்லாமே கடவுளின் சாபங்கள் தான் என எழுதி வைத்திருக்கின்றனர்.

இன்று வரையிலும் கூட யூதர்கள் தங்களுடைய அன்றாடப் பிரார்த்தனையில் தங்களை பெண்ணாக படைக்காதற்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர்.

மகப்பேற்று வலியைக் குறைக்கும் மருத்துவக் கண்டுபிடிப்புகள் கூட ரோமன் கத்தோலிக்க மதகுருமார்களிடம் மோதித்தான் அறிவியல் அறிஞர்கள் நமக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பது வரலாறு. இன்று நாம் கர்ப்பம், பெண்ணின் உரிமை என்பதை பல்லாண்டுகள் போராட்டத்துக்குப் பின் பேசத் தொடங்கியுள்ளோம். ஆனால் நம் தோள்களில் இந்தப் போராட்டத்தை விதித்திருப்பது இந்த மதம் தான் என்பதை நாம் அடையாளம் காண்பது அவசியம் அல்லவா?

**ஆண், பெண் படைப்பு பற்றிய கோட்பாட்டில் இஸ்லாம் கிறிஸ்தவத்திலிருந்து மாறுபட்டதல்ல கிறிஸ்தவத்தின் மீது வைத்த விமர்சனங்கள் இதற்கும் பொருந்தும் எனக் கொள்வோம். ஆனால் சபிக்கப்பட்ட இடத்தில் வேறுபாடு வருகிறது.**



5. மனித இன வீழ்ச்சிக்குக் காரணமாகி மனித இனத்துக்கு மரணத்தை கொண்டு வந்தவள் பெண். ஆக, படைப்புப் பற்றிய கோட்பாட்டில் கிறிஸ்தவ மதம் எவ்வளவு தூரம் பெண்ணை இழிவுபடுத்தியிருக்கிறது என்பதை நமது வார்த்தைகளில் அதிகம் கூற வேண்டிய தேவையில்லை. இது தவிர மனித இனம் முழுமையுமே கடவுளால் சபிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மனிதர்கள் பாவிகள் பிறக்கும் போதே பாவ விமோசனம் பெறுவதே அவர்களின் வாழ்க்கையின் இலக்கு அதற்குத் தேவாலயங்கள் இறைத் தூதர்கள் இதை விட மனித இனத்தின் மீது வேறென்ன கொடுமை இனிமேல் நிகழ்த்தப்பட்டு விட முடியும்?

தன்மானமுள்ள எந்தப் பெண்ணாவது இப்படியாகப் படைக்கப்பட்டிருக்கிற ஒரு கடவுளை அந்தக் கடவுளின் பெயரால் புனையப்பட்டிருக்கிற மத நிறுவனத்தை ஏற்றுக் கொள்வாளா? ஆனால் என்ன சோகம் மெழுகுவர்த்தியைக் கொளுத்திக் கொண்டு முக்காடிட்ட தலைகளாய் எத்தனை பெண்கள் தேவாலயங்களின் வாசல்களில்?

மதத்தின் முதல் பலி அறிவார்ந்த உணர்வெழுச்சிதான். தேவனின்

வார்த்தைகளுக்கெதிராய் சிந்திப்பது பாவம் என்று பல நூற்றாண்டுகளாக இவர்கள் நம்ப வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## இந்து மதம்

இந்து மதத்தில் கிறிஸ்தவ மதத்தில் இருப்பது போல உலகம் படைக்கப்பட்டது குறித்தான வருணணைகள் இல்லை என்றே சொல்லப்படுகிறது. அம்மதத்தைப் பொறுத்த வரை உலகம் இருந்து கொண்டிருக்கிறது. பிரளயங்களும் அழிவும் வந்திருக்கிறது. ஆனாலும் உலகம் இருக்கிறது இனியும் இருக்கும் இந்த அனுமானத்தின் மீதே அதன் வேதங்கள் பேசுகின்றன. எனவே அம்மதத்தைப் பொறுத்தவரை பெண்கள் என்னவாக சித்தரிக்கப்பட்டார்கள் அவர்களுக்கான வாழ்க்கை விதிகள் எவ்வாறு வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதை வைத்தே அம்மதத்தை நம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

## இஸ்லாம் மதம்

ஆண், பெண் படைப்பு பற்றிய கோட்பாட்டில் இஸ்லாம் கிறிஸ்தவத்திலிருந்து மாறுபட்டதல்ல கிறிஸ்தவத்தின் மீது வைத்த விமர்சனங்கள் இதற்கும் பொருந்தும் எனக் கொள்வோம். ஆனால் சபிக்கப்பட்ட இடத்தில் வேறுபாடு வருகிறது. இஸ்லாம் பெண்ணை பாவம் செய்யத் தூண்டியவளாக நிறுத்தவில்லை. மாறாக அப்பாவத்தில் ஆண், பெண் இருவரையும் ஒரேவிதமாகப் பார்க்கிறது.

தத்துவார்த்த ரீதியில் இது ஒரு குறிப்பிடத்தக்க வேறுபாடு தான். ஆனால் நடைமுறையில் சாபத்தைத் தந்திருக்கும் கிறிஸ்தவ மதத்திலிருந்து வெளியே வந்திருக்கும் பெண்களை விட மோசமான நிலையில் சாபத்தைத் தராத இஸ்லாமிலிருந்து பெண் விடுதலையடைவது இடர் நிறைந்ததாக இருப்பதை என்னவென்று சொல்வது?

## உரிமைகளும் கடமைகளும்

இனி அடுத்து இம்மதங்களில் பெண்களுக்கான உரிமைகளும் கடமைகளும் எவ்வாறு வகுக்கப்பட்டிருக்கின்றன எனப் பார்ப்போம்.

## இந்து மதம்

ஒரு பிரிவு அல்லது இனத்தைச் சேர்ந்த மக்களின் உரிமைகளும் கடமைகளும் அவர்களுக்கு அந்த அமைப்பு எந்த இடத்தை அளித்திருக்கிறதோ அதிலிருந்து எழுபவையாகும். கிறிஸ்தவ மற்றும் இஸ்லாம் மதத்தில் படைப்புப் பற்றிய கோட்பாட்டிலேயே பெண்ணின் நிலை பற்றிய இந்த இருத்தல் நமக்கு புரிந்து விடுகிறது. ஆனால், இந்து மதத்தில் படைத்தல் பற்றிய வருணணைகள் ஆதாரபூர்வமாக இல்லையென்பதால் இந்த இருத்தலை நாம் அதன் இலக்கிய இதிகாசங்களிலிருந்து தேட வேண்டியவர்களாக இருக்கிறோம். முக்கியமாக மகாபாரதம், மனுநீதி, இராமாயணம் இவற்றை எடுத்துக் கொள்ளலாம். ஒரேயொரு சிரமம் அனைத்தையும் எடுத்து வைக்க நேரமும் இடமும் அனுமதி அளிக்காது என்பது தான். எனவே, சான்றுக்கு சில அடிப்படையானவற்றை மட்டும் எடுத்துப் பார்ப்போம்.

## மகாபாரதம்

எத்தனையோ அந்நியப் படையெடுப்புகளுக்கான பின்னரும், இந்து மதத்தை யாராலும் அழிக்க முடியாததற்குக் காரணம் அது இந்துப் பெண்களின் தூய்மையின் (கற்பு) மீது கட்டப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள் இந்துத்துவ மதவாதிகள்.

இதிலிருந்து நமக்கு ஏன் கற்பெனும் விலங்கு பெண்ணுக்கு மாட்டப்பட்டிருக்கிறது என்பதற்கு பதில் கிடைத்து விடுகிறது. இப்படியாக தனது மதத்தையும் அது தாங்கி நிற்கும் ஆணாதிக்க சமூகத்தையும், சமூக வளர்ச்சிகளினூடாகப் பாதிப்பின்றி தொடர்ந்து எடுத்துவர வேண்டுமானால் பெண்ணைக் கற்புடன் வைத்து நிர்வகிக்க வேண்டிய அவசியம் இந்து மதத்திற்கு இருந்திருக்கிறது, இருந்து வருகிறது, என்பதையும் இந்த வாத்தைகள் தெளிவாக நமக்குப் புரிய வைக்கின்றன.

நாம் இந்தக் கட்டுரையின் துவக்கத்திலேயே மதம் என்பது புரோகித கூட்டங்களின் சுயநலத் திட்டம் தான் என்பதை எடுத்துரைத்திருந்தோம். உலகில் ஒரு மதம் மற்ற மதத்தை எதிரியாகப் பார்க்கிற வரலாறு அனைவருக்கும் எளிதாகப் புரிகின்ற ஒன்று. ஆனால் ஒரு மதமானது முதலில் பலி கொள்வது தனது மதத்து மக்களின் சுதந்திர சிந்தனைகளையும் தனிமனித உரிமைகளையும் தான் என்பதை புரிந்து கொள்ள நமக்கு ஓர் ஆய்வுக் கண்ணோட்டம் தேவைப்படுகிறது.

ஒவ்வொரு மதமும் முதன்மையாக அம்மதத்தின் புரோகித வருப்பின் நலனுக்காக அம்மதத்தின் ஏனைய மக்களின் வாழ்க்கையை திட்டமிடும் ஓர் அமைப்புதான்.

இந்தத் திட்டத்தில் மற்ற மதங்களிலிருந்து இந்து மதம் மாறுபடும் முக்கியமான இடம், அது பிறவியை அடிப்படையாகக் கொண்டு அதன் திட்டத்தை வகுத்ததும் பெண்ணின் கற்பை தனது மதத்தின் முக்கிய முகமாக தூக்கிப் பிடித்ததும் தான்.

ஆனால் இந்தக் கற்பானது இவர்கள் கூறுவது போல் இந்துவாகப் பிறந்த ஓர் பெண்ணின் (ஓர் இந்துப் பெண்ணாகதான் பிறக்க முடியும்) இயல்பாக இருக்கிறதா இல்லையா என்பதை அம்மதத்திலிருந்தே இப்போது நாம் தெரிந்து கொள்ளலாம்.

நாரத ரிஷிக்கும் அப்சரஸூக்குமிடையே பெண்களின் இயல்பு பிறப்பு மற்றும் தன்மைகள் குறித்து ஒரு முக்கியமான உரையாடல் நடக்கிறது. நாரதர் பெண்ணின் இயல்பு நிலையை எடுத்து விளக்கும்படி அப்சரஸிடம் கேட்க அதற்கு பெண்ணாகிய நானே பெண்ணை இழித்துப் பேச வேண்டியிருக்கிறது. எனினும் அது தான் உண்மையாகும் என்று கூறி பெண் பிறவிலேயே இழிவானவள், எப்போதுமே காவல் மீறி தவறு செய்வதில் இச்சையுள்ளவள் என்ற பொருளில் எடுத்துரைக்கிறாள்.

அவை அத்தனையையும் இக்கட்டுரையில் இட்டு நிரப்புவது சாத்தியமில்லை எனவே சாரத்தை மட்டும் விவாதிப்போம் அதன் சாரம்சம் இது தான்.

பெண் பிறவிலேயே இழிவானவள். எப்போதுமே திருப்தியுறாதவள். குறிப்பாக காம இச்சையில் ஓர் ஆணுடன் வாழ்வது அவள் இயல்பன்று. பிரம்மன் படைக்கும் போதே இந்த இழி குணங்களுடன் தான் அவளைப் படைத்தான். எனவே, இந்த அம்சங்கள் அவளிடமிருந்து பிரிக்கமுடியாதவை.

மகாபாரதத்தில் மட்டுமல்ல, மனுநீதியில் பெண்ணைப் பற்றி வருகின்ற பல்வேறு சுலோகங்களின் அர்த்தமும் இவ்வாறே அமைவதுடன் அதனால் பெண் காவலில் வைக்கப்பட வேண்டியவள் என்று மிக அழுத்தமாக எடுத்துரைப்பதுடன் அந்த அடிப்படையிலேயே பெண் சிறுவயதில் தந்தைக்கும் இளவயதில் கணவனுக்கும் முதுமையில் மகனுக்கும் கட்டுப்பட வேண்டியவள் என்றும் விதித்திருக்கிறது.

ஆக, இந்து மதம் என்ன சொல்கிறது பெண் பிறவியில் ஒழுக்கமில்லாதவள், கற்பில்லாதவள் அவள் கற்போடு இருக்க வேண்டும் என்றால் அவள் வீட்டுக் காவலில் வைக்கப்பட வேண்டும். நாம் குறிப்பிட்டிருக்கும் இந்த ஆதார நூல்கள் எவையும் ஆண் ஒரு பெண்ணோடு மட்டுமே தன் வாழ்நாளில் உடலுறவு கொள்ள வேண்டும் என்று விதி செய்த இலக்கியங்களோ, நீதி நூல்களோ அல்ல. அப்படி இருக்க பெண்ணின் காம இச்சையைக் குறி வைத்து அதனை மையப்படுத்தி பெண்ணினம் முழுமையுமே தரந்தாழ்த்தி குறிப்பிட வேண்டிய அவசியம் இவர்களுக்கு எங்கிருந்து வந்தது. என்பது தான் நமக்கு எழும் வியப்புக்குரிய கேள்வியாகும்.

அந்தக் கோணத்திலிருந்து பார்க்கும் போது நமக்கு முன் சில ஆழமான உண்மைகள் விரிகின்றன. இந்து மதத்திற்கு பின்னால் நிற்கின்ற ஆண் மாபெரும் சுதந்திர வெளியில் நின்றிருந்த பெண்ணை இவனுக்கு சாதகமான குடும்ப அமைப்புக்குள் சிறைப்படுத்துகின்ற தனது சமூகக் கடமையை செய்ய வேண்டியவனாக நின்றிருக்கின்றான்.

இந்து மதத்தின் இந்தக் குரலானது அந்த சூத்திரதாரியான ஆண் தனது சக ஆண்களிடம் நடத்திய உரையாடலேயன்றி வேறல்ல. அவன் சொல்கிறான் இந்தப் பெண் மிகவும் கட்டுப்பாட்டிற்குள் வைக்கப்பட வேண்டியவள் அவள் காட்டும் அன்பின் பேரிலேயோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலேயும் நீ அவளை நம்பி உன் காவலை தளர்த்தி விடாதே.. இது தான் இம்மதத்தின் செய்தியாகும். இது பெண்ணை அடிமை செய்யும் ஆணாதிக்கவாதிகளால் தனது சமூக ஆண்களுக்காக எழுதப்பட்டது.

ஆக, இந்த வார்த்தைகள் முதலில் பண்ணுக்காக எழுதப்பட்டவையல்ல இரண்டாவதாக பெண்ணை மிக மிக இழிவுபடுத்துபவை. மூன்றாவதாக பெண்ணை சிறை வைத்திருக்க வேண்டிய அவசியத்தை அன்றாடப் பணியாக ஆணுக்கு எடுத்துரைத்தவை. இவ்வாறு சிறைப்படுத்திய இந்த அமைப்பின் சமூக இலக்குகளாகத்தான் தனிச் சொத்துரிமையும் வாரிசுரிமையும் நமக்கு புலனாகின்றன. பெண்ணின் மீது எழுப்பப்பட்ட கற்புக் கோட்டை தான் தனிச்சொத்துரிமையும் ஆண்வழி வாரிசுரிமையும் அதன் மீதான ஆண்வழி, அதன்பின் ஆணாதிக்க சமூகத்தையும் அரண் செய்து கட்டமைக்கிறது. பெண்ணின் உடல் சார்ந்த ஆளுமையையும் அவளின் பால்சார்ந்த பிறவி உரிமைகளையும் அடக்குவதற்கான கொடிய ஆயுதங்களாகத்தான் இம்மதத்தின் ஒவ்வொரு வரியும் நமக்கு

**மகாபாரதத்தில் மட்டுமல்ல, மனுநீதியில் பெண்ணைப் பற்றி வருகின்ற பல்வேறு சுலோகங்களின் அர்த்தமும் இவ்வாறே அமைவதுடன் அதனால் பெண் காவலில் வைக்கப்பட வேண்டியவள் என்று மிக அழுத்தமாக எடுத்துரைப்பதுடன் அந்த அடிப்படையிலேயே பெண் சிறுவயதில் தந்தைக்கும் இளவயதில் கணவனுக்கும் முதுமையில் மகனுக்கும் கட்டுப்பட வேண்டியவள் என்றும் விதித்திருக்கிறது.**



அறிமுகமாகின்றன. வேதங்களில் அவர்கள் (பெண்கள்) வாழும் பொய்கள் என்றே சொல்லப்பட்டிருக்கிறது அவர்களுக்கென்று வேதங்கள் கிடையாது. அதற்கான தகுதி அவர்களுக்கு கிடையாது. எனவே வேதத்தின்படி அவர்களுக்கென்று தனிக் கடமைகள் கிடையாது. அவர்களின் ஒரே வாழ்க்கைக் கடன் கணவனைச் சார்ந்து இருப்பது தான். பதிவிரதா தர்மா- இதுமட்டுமே பெண்ணிற்கான ஒரே தர்மம். இதற்குப் பிறகும் உரிமைகளைப் பற்றி பேசுகிற தைரியம் யாருக்கும் வராது என்று கருதுகிறோம்.

எனவே, மேற்கூறியவற்றிலிருந்து பெண்ணிற்கான கடமையே இந்து மதத்தைப் பொறுத்தவரையில் கணவனுக்காக வாழ்வது தான் அவளுக்குக் கணவன் தான் தெய்வம். அதில் எழுதப்பட்டிருக்கும் அத்தனை ஆயிரம் வார்த்தைகளும் இதைத்தான் மீண்டும் மீண்டும் சொல்கின்றன. இந்து இதிகாசங்களில் பெண் கதாபாத்திரங்கள் வாழ்ந்து காட்டியிருக்கும் நெறிகள் எதுவும் அந்த கதாபாத்திரங்களின் விருப்பத் தேர்வு அல்ல மாறாக அவர்களுக்கு வேதங்கள் விதித்த வாழ்க்கை தான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்

உதாரணமாக நளாயினி குஷ்டரோகியாகிய தனது கணவனை சுமந்து கொண்டு தாசி இல்லத்துக்குச் சென்றாள் என்பது கதை. இதில் நளாயினியின் தியாகமென்று எதுவுமில்லை. அவள் அப்படி மட்டுமே செய்ய முடியும். ஏனெனில் கணவனைத் திருப்திப்படுத்தாத பெண்ணுக்கு மோட்சத்தில் இடமில்லை.

மகாபாராதத்தில் அனுசாசனபர்வம் என்ற உரை பெண்ணின் கடமைகளை விவரிக்கிறது. அது மகாதேவனின் கூற்று என்ற வடிவத்தில் அமைந்திருக்கிறது. கணவனுக்கு எப்படி பணிவிடைகள் செய்வது என்பது தவிர அதில் வேறொன்றும் இல்லை. அது கூறுவதைக் கேளுங்கள்.

கணவனைத் திருப்திப்படுத்தாத பெண்ணுக்கு மோட்சத்தில் இடமில்லை. அந்தக் கணவன் மிகவும் ஏழையாக இருந்தாலோ அல்லது கடுமையாக நோய் வாய்ப்பட்டிருந்தாலோ எதிரிகளின் பிடியில் மாட்டியிருந்தாலோ அல்லது பிராமணனின் சாபத்திற்கு ஆளாகியிருந்தாலோ அது விதியின் செயலே என்று உணர்ந்து அந்தக் கணவன் என்ன தகாத காரியத்தைக் செய்யச் சொல்லிக் கேட்டாலும் அதனால் உயிருக்கே ஆபத்து வரும் எனினும் மனைவியாகிய பெண் எவ்விதத் தயக்கமுமின்றி அதனைச் செய்து அவனை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும்.

பெண் தெய்வங்களையும் நாம் வணங்குகிறோமே.. அவ்வாறிருக்க பெண்ணுக்கு மதத்தில் பெருமையளிக்கப்படவில்லை என்று எப்படிக் கூற முடியும் என்று கேட்கப்படலாம். இந்த வேதங்களில் இதிகாசங்களின் இந்த வெளிப்படையாகத் தெரியும் குரூரமான முகத்தைத் தவிர மென்மையான வேடமணிந்து இன்னொரு முகம் இருக்கிறது. வேதங்களில் பெண் உயர்வாக சித்தரிக்கப்பட்டிருப்பதாக, அதனை வைத்தே சிலர் வாதங்கள் எழுப்புகிறார்கள். அந்த முகம் என்ன சொல்கிறது என்றும் பார்த்தும் விடுவோம். பெண் எப்போதும் வணக்கத்துக்குரியவள் அவளை எப்போதும் பாசத்துடனும் பரிவுடனும் நடத்த வேண்டும்.

## மகாபாரதம் - அனுசாசனபர்வம்...

எங்கே பெண் கௌரவிக்கப்படுகிறாளோ அங்கே கடவுள்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். எங்கே பெண் கௌரவிக்கப்படவில்லையோ அங்கே எந்தப் புனிதமான சடங்கினாலும் எந்தப் பயனுமில்லை.

## மனுநீதி...

இதுபோன்ற சில வாசகங்களை எடுத்துக்காட்டி இந்து மதம் பெண்ணுக்கு உயர்வான இடமளித்திருப்பதாக சிலர் வாதிடுகிறார்கள். இதில் அடிப்படையான ஒன்றை நாம் கவனிக்க வேண்டும் ஆண்களை நன்றாக வைத்துக் கொள்ளச் சொல்லி எந்த மதமும் கேட்கவில்லை. ஆனால் எல்லா மதங்களும் பெண்களை நன்றாக வைத்துக் கொள்ளும்படி கேட்கின்றன. இதன் பொருள் எந்த மதங்கள் பெண்களிடம் பேசவில்லை ஆண்களிடம் பேசுகின்றன. அதனால் தான் நாம் கேட்கிறோம் நமக்காக எழுதப்படாத மதம் நமக்கு எதற்கு? சரி இவ்வாறு கனிவு காட்டச் சொல்லிக் கேட்கும் வார்த்தைகளெல்லாம் பெண்ணின் தன்மை, இயல்பு அவள் காவலில் எப்போதுமே வைத்திருக்கப்பட வேண்டிய அவசியம் இவற்றையெல்லாம் மறுத்தோ அவற்றிற்கெல்லாம் மாற்றாகவோ சொல்லப்படவில்லை. மாறாக அவற்றின் பின்னிணைப்பாக நாம் வீட்டில் வைத்து நம்முடைய தேவைகளுக்காக வளர்க்கின்ற மிருகங்களை அவற்றின் இயற்கையான முழு ஆற்றலையும் பயன்படுத்துவதற்காக அவற்றை நடத்த வேண்டிய விதம் குறித்து போதிக்கப்படுகின்ற அதே பாணியில் தான் பெண்ணைக் கனிவாக நடத்தச் சொல்லி அம்மதம் நமக்கு அறிவுறுத்துகிறது.

நாம் வளர்க்கின்ற மிருகத்துக்கு பரிவு காட்டாவிட்டால் அது இறந்து விடும்.

முக்கியமாகத் தாயாக கௌரவிக்கப்படுகிறாள் பெண் என்ற சிந்தனை முன்வைக்கப்படுகிறது. மேலைநாட்டு பெண்கள் நிலையுடன் நமது பெண்களின் நிலையை ஒப்பிட்டு பேசும் மதவாதிகள் அதில் பெரும் புளங்காங்கிதத்தை அடைவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். மேலைநாட்டு பெண்களிடம் மனைவி என்ற பாத்திரம் தான் முதன்மை வகிக்கிறது. ஆனால் நாம் தாயை முதன்மைப்படுத்தி சமூகத்தை வகுத்திருக்கிறோம் என்று கூறுகிறார்கள். ஆனால் தாய் என்ற பாத்திரமானது மனைவி என்ற சமூக வடிவத்தின் ஆன்மீக வடிவம் தான் என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மனைவியின் கடமைகளை உள்ளடக்கி அதன் மேல் அதின் தொடர்ச்சியாக நிற்பது தான் தாய் என்ற வடிவம். மனைவி தாய் இரண்டும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் தாம். இதில் ஒன்றை மறுத்து அடுத்ததில் நாம் மயங்கி நிற்பதில் அர்த்தமேதுமில்லை. மனைவி என்கின்ற பாத்திரத்தின் மீது கட்டாயப் பணிவிடையும் சுய மறுப்பும் திணிக்கப்பட்டிருக்கிறது என்றால் தாய் என்கின்ற பாத்திரத்தின் வாயிலாக தியாகம் பெண்ணின் மீது கடமையாக ஏற்றப்பட்டிருக்கிறது. இந்தப் பாத்திரங்களுக்குள் எல்லாம் பெண் மட்டும் சிறை வைக்கப்படவில்லை. அதற்கெல்லாம் மேலாக அன்பு, காதல், தாய்மை, பரிவு, பாசம் என்ற அனைத்து உணர்வுகளும் கடமைகளாக்கப்பட்ட காரணத்தினாலேயே அவை படுகொலைகளாகி விட்டன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். எனவே மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசைப்படுத்தலில் ஆறுதல் கிடைக்கலாம். ஆனால் அந்த ஆறுதல் உண்மையை மறைத்துத் திரையிடப்படுகிறது என்பதை நாம் உணரவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

நாகர் கோவிலைச் சேர்ந்த உளவியல் மருத்துவ நிபுணர் காமராசர் ஒரு முறை குறிப்பிட்டார் நமது நாட்டில் பெண்ணுக்குக் குழந்தைப் பருவமே கிடையாது. அவளை சிறு வயதிலேயே அம்மா என்று அடையாளப்படுத்தி விடுகிறார்கள் என்று தாயை முதன்மைப்படுத்தியதன் அடிப்படை சூட்சுமமே பெண்ணுக்கு வேறு ரோல் மாடலே அதாவது பங்களிப்பே இல்லாமல் செய்தமையேயாகும்.

*(கட்டுரையை சுருக்க வேண்டிய அவசியத்தின் காரணமாக நான் இக்கருத்துக்களை கோடி காட்டி விட்டு மட்டும் செல்கிறேன்.)*

எனவே, பெண் தெய்வங்கள் தாயை மனைவியை செல்வத்தைக் கல்வியைத் தருகின்ற...அதாவது யாருக்கு ஆணுக்கு தருகின்ற குறியீடுகள்தானே தவிர பெண்ணை சமூகத்தின் தலைவியாக உயர்த்துபவை அல்ல என்பதை நாம் சிந்தித்துப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

சிறுவயதிலிருந்து ஆணுக்குக் கட்டுப்பட்டு அனைத்து அடிமை விதிகளையும் ஏற்று நடக்கின்ற ஒரு பெண் தான் இந்த ஆணின் வழிபாட்டுக்குரிய தாயாக பரிணமிக்க முடியும். அவன் அந்த தாயைத்தான் வழிபடுகிறானே தவிர பெண்ணையல்ல.. மேலும் ஒன்றை அவசியம் புரிந்து கொள்ள வேண்டும். மேற்கூறியவையெல்லாம் இந்து மதத்தின் காலாவதியாகிவிட்ட கருத்துக்கள் அல்ல. இந்து மதம் என்ற ஒன்று இருக்கும் வரை இந்தக் கருத்துக்களை புதுப்பிக்கும் பணியை அவர்களில் யாராவது செய்து கொண்டுதானிருப்பார்கள்.

பெண்கள் வேலைக்குப் போவதை எதிர்த்து சங்கராச்சாரியார் விட்ட அறிக்கை பற்றி நமக்கெல்லாம் தெரியும். சில பத்தாண்டுகளுக்கு முன்பு கூட சுவாமி சிவானந்தா என்ற சாமியார் "பெண்கள் இனிமேலும் ஆண்கள் உலகத்தில் புகுந்து அவர்கள் செய்ய வேண்டிய வேலையைச் செய்வதும் அந்த ஆண்கள் பெண்களின் வேலையை செய்வதும் தகாது. அவர்கள் (பெண்கள்) வீடுகளிலிருந்து வெளியே வந்தால் அதனால் ஏற்படும் விளைவுகள் மிக பயங்கரமானதாக இருக்கும்" என்றார்.

இந்து மதத்தின் குரூர முகத்தை மறைத்துத் திரையிட்டு மென்மைப்படுத்திக் கொடுத்திருக்கும் சாமியார்களில் முக்கியமாக விவேகானந்தரைக் கூறலாம். அவர் பெண்ணைப் பற்றி எடுத்துச் சொல்லியிருக்கும் வார்த்தைகளையும் நான் ஓரளவு படித்துப் பார்த்தேன். எந்த விதத்திலும் அவர் இந்து மதம் பெண்ணுக்கு ஏற்படுத்தியிருக்கும் பாத்திரப் பங்களிப்புக்களை மாற்றிவிடவில்லை. வார்த்தைகளைத் தான் மாற்றியிருக்கிறார். இதிலே நமக்கு உடன்பாடில்லை.

இருந்த போதிலும் அதனைக் கூட ஓரளவு ஏற்றுக் கொள்ளலாமென்றால் அறிவார்ந்த இன்னொரு கேள்வி நமக்கு எழுகிறது.

அவ்வாறு பெண்ணைப் பெருமைபடுத்தி பேச முனைந்தவர் நாம் இக்கட்டுரையில் எடுத்தெழுதியிருக்கும் பெண்ணை இழிவுபடுத்தியிருக்கும் வேத உரைகளையும் மகாபாராத உரைகளையும் மனுநீதி சுலோகங்களையும் மறுத்து விட்டல்லவா வேறு வார்த்தைகளை எழுத வேண்டும். அதுதானே நேர்மை? இவர்கள் தர்மத்தின் பல இடங்களில் விலங்குகளிலும் கேவலமாக அல்லவா பெண் குறிப்பிடப்பட்டிருக்கிறாள். ஏன் இன்று இந்து மதத்தைக் காப்பாற்ற நினைப்பவர்கள் அதில் மனித இனத்துக்கு தேவையான மகோன்னதங்கள் ஒளிந்திருக்கிறது என்று கூறுபவர்கள் அதிலிருக்கும் இந்த இழிவான பக்கங்களை இவர்களே நீக்கி விட்டதாக ஓர் மதரீதியான அதிகாரபூர்வமான அறிவிப்பை வெளியிடத் தயாராக இருக்கிறார்களா?

எவ்வளவு இழிவுபடுத்த முடியுமோ அவ்வளவையும் செய்து விட்டு இந்த வேதங்களைப் படிக்க பெண்களுக்கு (சூத்திரர்களுக்கு) தகுதியில்லை என்றும் விதி செய்து வைத்திருக்கிற அயோக்கியத்தனத்துக்கு முதலில் பதில் சொல்லிவிட்டு பின்பு என்ன பெருமையைப் பற்றி வேண்டுமானாலும் இவர்கள் பேசட்டும். ■

**ஓவியா**

காலத்துக்குக் காலம் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகளின் காரணமாகச் சிங்கள பௌத்தர்கள் தேரவாதத்தின் பாதுகாவலர்கள் எனக் கூறிக்கொண்டு புத்த தருமத்துக்கு முரணானவற்றையும் செய்துள்ளனர் என்பது தெரிகின்றது. தற்காலிக காரணங்களினால் அத்தகையவற்றைச் சதாகாலமாக்கிக்கொள்வது தவறாகும். தேரவாதத்தைப் பாதுகாக்கும் போர்வையில் சீனாவிலிருந்து மீண்டும் பிக்குணி சாசனத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது நியாயமற்றது. புத்த வார்த்தையின்படி தருமம் ஓர் ஓடத்துக்குச் சமமாகும். ஓடமானது ஒரு நதியிலிருந்து அல்லது நீர்த்தேக்கத்திலிருந்து கரைசேர்வதற்கே தேவைப்படுகின்றது.

கரைசேர்ந்த பின்னர் ஓடத்தைத் தலையில் வைத்துச் சுமந்து செல்ல வேண்டியதில்லை. புத்த தருமத்தைப் பாதுகாப்பதன்மூலம் மட்டும் விடுதலை கிடைக்கமாட்டாது. அதன் தத்துவத்தைப் புரிந்துகொண்டு தியானத்தின்மூலம் உலகின் யதார்த்தத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்.
அவ்வாறு செய்பவரின் மூலம் புத்த தருமம் பாதுகாக்கப்படும்.

**பேராசிரியர் சந்திரா விக்கிரம கமகே**

*பிரித்தெடுத்தல் - மெஹெனி உதாவ - (1992) சஞ்சிகைக்கு எழுதியுள்ள கட்டுரை*

# புள்ளயப்பிடி பேயும் புனிதவதித் தாயும்

காஞ்சி போய்
விரிஞ்ச தலைமயிரும்
வெளிறிப்போய்
கிளிஞ்ச சீலயும்
உடுத்திக்
கொண்டு
சவக்காலயடியால
புள்ளயப்பிடி தம்பி
புள்ளயப் பிடியெண்டு
பொம்புளப் பேயொண்டு போகுது

மாட்டு வண்டியால
மரமேத்தி வந்தவயள்
தூஷணத்தைச் சொல்லி
துப்புணதாலதான்
தப்புணதாமெண்டும்
தருமரிட்டப் போய்
திருநீறுபோட்டதெல்லாம்
அப்ப நடந்ததெண்டு
அம்மாதான் சொன்னாவு

சின்னப் புள்ளயில
சோறு தின்ன வைக்க வேணுமெண்டு
பேயிட்டச் சொல்லி
பிடிச்சிக் குடுக்கிறதாய்
அம்மா சொன்னதெல்லாம்
இன்னும் மறக்கேலா

இப்ப வயதெனக்கு இருபத்திநாலு
போன கிழம பொழுது படக்குள்ள
சவக்காலயடியால
சக்கிளில
வயலுக்க நிண்டு வந்த நான்
அந்நேரம்
ஆலையைத் தாண்டி – நான்
அங்கால வரக்குள்ள
புள்ளயக் கொஞ்சம்
புடிச்சிக்க தம்பியெண்டு
சொன்னதைக் கேட்டு
சொற்றுணை வேதியன
உள்ளுக்க சொல்லி
உடனே இறங்கித்தன்

புள்ளையை வாங்கித்து
பொம்புளையைப் பாத்தன்
அம்மா சொன்ன
கதையில வாறது போல
கோரப்பல் கொண்ட
கொடிய பேய் இவ இல்ல

புருசன் செத்ததால
புள்ளயக் காப்பாத்த
அரிசி குத்தி விக்கிற
கொள்ளி எடுக்க வந்த
வள்ளியக்கை தானே இவா
புள்ளயக் கொஞ்சம்
பிடிச்சிக்க தம்பி
கழுத்தெல்லாம் கடுக்குதெண்டு
கதைச்சாவு

புருசனால கைவிடப்பட்ட
புனிதவதி அம்மையையும்
பேயெண்டு தானே
எழுதினாங்கள் சொன்னாங்கள்

தாயெண்டு சொல்ல
தைரியம் இல்லாமல்
பேயெண்டு சொல்லித்
திரத்தினாங்கள்
பேயுருவம் தாவென்று
கேட்கத் தந்த
சிவனென்று
கூவென்று
கத்திக் குதிச்சவங்கள்

புனிதவதி அம்மா
புருசனோட இல்லாம
தனியா இருந்ததெண்டா
தரங்கெட்டா போவாங்க

ஆதிக்கம் நிறைஞ்ச இந்த
அதிகார சூழலில
போதிக்கப்பட்டதெல்லாம்
பொம்புளயள் எல்லாம்
சாதிக்கமாட்டாத
சனங்களெண்டு தானே?

புனிதவதி கதை சொல்லும்
புராணத்தைப் போல
புள்ளையப் பிடியெண்ட
பொம்புளயப் பேயெண்டால்
வள்ளியக்கையெல்லாம்
வாழுறது என்னெண்டு

**த. சேரலாதன்**



# கடவுளர்கள் நிறைந்த இர்ந்துத்துவ வாதத்தினுள் தந்தைவழி உலக நோக்கு

நம்பிக்கை முறைமைகள், தத்துவவியல் சடங்குமுறைகள் மற்றும் வழக்கங்கள் பலவற்றைக் கொண்டமைந்துள்ள இந்துத்துவமானது வரலாற்று ரீதியான ஒர் காலத்துக்கு உரியதென அடிப்படை சிந்தனைசார் இணக்கப்பாடு தெரிவிக்கப்படவில்லையென்பதுடன், இலங்கைப் பின்புலத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசமான மூன்று வழிபாட்டு முறைகள் இடம்பெறுகின்றன. சிவபெருமானை முதலாகக்கொண்ட சைவ சித்தாந்த தத்துவவியலுக்கு இலங்கையைச் சேர்ந்த வடபுல இந்துக்களின் பங்களிப்புக் கிடைக்கின்றது. சோழ மரபுக்குரிய பல கடவுளர்களையும் பெண் கடவுளர்களையும் வழிபடுவது மட்டக்களப்பினை முதலாகக்கொண்ட கிழக்கு மாகாண இந்துக்களுக்கு மத்தியில் காணப்படுகின்றது.

வழிபாடுகளில் மட்டக்களப்பு மரபுக்கு வித்தியாசமான பல கிராமிய கடவுளர்கள் தோட்டப்புறத் தமிழ் மக்களின் வழிபாடுகளுக்கு உள்ளாகின்றனர். இந்துத்துவத்தினுள் தெட்டத்தெளிவாகத் தெரிகின்ற வித்தியாசம் யாதெனில் அதில் புத்தபெருமான், இயேசுநாதர், அல்லாஹ் போன்ற ஒரு தனி இறைதூதர் அல்லது போதனையாளர் இல்லையென்பதாகும். இந்து மத நம்பிக்கைகளில் பெண் கடவுளர்களும் வழிபாடுகளுக்குள்ளானாலும் ஒட்டுமொத்த வழிபாட்டுச் செயன்முறையினுள் பெண்களுக்குப் பாகுபாடு காட்டப்படுதல் தெளிவாகத் தெரிகின்றது.

இந்தியாவிலிருந்து கிடைக்கப்பெற்ற பிராமண இந்துத்துவத்தில் பெண்களுக்குப் பாகுபாடு காட்டப்படுதல், துன்புறுத்தல் நடத்தைமுறைகள் மற்றும் வழக்காறுகள் உள்ளடங்கியுள்ளதோடு, சகல விதமான இந்துத்துவ வாதங்களுக்கும் நீதியான தன்மையினையும் ஆதிக்கத்தையும் உருவாக்கும் பணியானது இலக்கியப் படைப்புகளின்மூலமும் நிறைவேற்றப்பட்டுள்ளது. மறுபுறத்தில் தமிழ் இலக்கியத்தின்மீது பாரிய தாக்கம் மத இலக்கியத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெண்களுக்குப் பாகுபாடு காட்டும் பிராமண இந்துத்துவவாத வழக்காறுகள் தமிழ் இலக்கியத்துக்குள்ளும் கசிந்து வந்துள்ளது.

செல்வி திருச்சந்திரனின் ஆய்வு நூலொன்றாகிய "இலங்கையில் இந்துத்துவ வாதத்தினுள் தந்தைவழி உலக நோக்கு" என்ற நூல் பற்றிய அறிமுகத்திற்கு ஒரு பிரவேசமாகவே நாங்கள் மேற்படி முகவுரையை வழங்கியிருந்தோம். பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு மையத்தினால் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலின்மூலம் இலங்கைத் தமிழ் மக்களின் இந்துத்துவவாதம், வழிபாடுகளிலுள்ள வேறுபாடுகள் மற்றும் பொதுவாக அங்கு பெண்களுக்குப் பாகுபாடு காட்டப்படும் விதம் என்பவை தொடர்பாகச் சிறப்பாகப் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இலங்கை இந்துக்களின் கண்ணோட்டத்தில் பால்நிலை பாகுபாடுகளைக் கொண்டதும் சுரண்டல் மிக்கதுமான வழக்காறுகளையும் வழிபாடுகளையும் இனங்காணுதல், அவை பற்றிய கூருணர்வை பொதுவாக

இந்து மக்கள், கல்வியியலாளர்கள், ஆசிரியர்கள், சட்டத்தரணிகள், அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்த செயற்பாட்டாளர்களுக்கு மத்தியில் ஏற்படுத்துதல் என்பதை நோக்கமாகக் கொண்டு இக்கூருணர்வுமிகு ஆய்வுநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## பிராமணர்களானாலும் பெண்களுக்குத் தடை

அனைத்துப் பொது சமய நடவடிக்கைகளின்போதும் வழிபாடுகளின்போதும் இந்துப் பெண்கள் புறந்தள்ளப்படுவது இதன்மூலம் தெளிவாகின்றது. கோயில் விழாக்களிலும் இறுதிக் கிரியைகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற சடங்குகளில் பெண்களுக்கு எந்தவோர் இடமும் கிடைப்பதில்லை. பெண்களுக்கு மாதவிடாய் ஏற்படுவதனால் அவர்கள் தீட்டு உடையவர்கள் என்ற கருத்துக்கு அடிமைப்பட்டு அவ்வாறு இடம்பெறுகின்றது. கோயிலுக்குள் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்துச் சமயக் கிரியைகளும் பிராமண குலத்தைச் சேர்ந்த ஆண்களால் மேற்கொள்ளப்படுவதோடு, பெண்கள் பிராமணர்களாகவிருந்தாலும் அவர்களுக்கு அதற்கான எந்த உரிமையும் கிடையாது. இந்துத்துவவாதத்தினுள் சாதிகளுக்கான கட்டமைப்புக்கு மேலதிகமாக ஆண்-பெண் எனவும் ஒரு கட்டமைப்பு உள்ளதென்பது இதன்மூலம் புலப்படுத்தப்படுகின்றது. இந்துத் திருமண விழாக்களில் அனைத்துச் சடங்குகளையும் பிராமண பூசகர்களே நடத்துகின்றனர். சடங்குகளிலே இயற்கையாகவே பெண்கள் ஆண்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்பது மேலெழுப்பிக் காட்டப்படுகின்றது. மாலை மாற்றிக்கொள்ளும்போது மணப்பெண் எழுந்து நின்று மணமகனுக்கு மாலையை அணிவிப்பதோடு, மணமகன் அமர்ந்துகொண்டே மாலையை அணிவிக்கின்றார். பெண்கள் தூய்மையைப் பாதுகாத்துக்கொண்டு கீழ்ப்படிவாக இருக்க வேண்டுமென்பதைப் புலப்படுத்துகின்ற இன்னும் சில மரபுகள் திருமண விழாவில் இடம்பெறுகின்றன. மத நிறுவனங்களில் அல்லது சடங்குகளில் பெண்களுக்கு வரவேற்பு இல்லாவிட்டாலும்கூட குடும்ப நலனுக்காக கடினமான விரதங்களில் ஈடுபடுவது பெண்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது. வரவேற்புக்குள்ளாகும் சகல நடவடிக்கைகளையும் ஆண்கள் உரித்தாக்கிக் கொண்டுள்ளதோடு, கடினமான அனைத்துச் செயற்பாடுகளையும் பெண்களுக்கு ஒதுக்கியுள்ளனர்.

இந்து சமய மரபுகளின் பிரகாரம் ஒரு பெண் குழந்தையைப் பிரசவிக்கின்ற பெண் ஒருத்தியின் தீட்டினைக் கழிப்பதற்காக 40 நாட்கள் அவள் வீட்டில் இருத்தல் வேண்டும். வெளியாட்கள் அந்த வீட்டிலிருந்து உணவு வகைகளைப் பெறமாட்டார்கள். ஆனால், ஆண் குழந்தையொன்று பிரசவிக்கப்படும்போது தீட்டினைக் கழிக்கும் நாட்களின் எண்ணிக்கை 30 ஆகும். மாதவிடாய் ஏற்படுதல், பிரசவம் என்பவற்றைத் தீட்டாகக் கருதும் இந்து மத கலாசாரத்தினுள் ஓர் ஆண் குழந்தை பிறக்கும்போது தீட்டுக் குறைவது எவ்வாறென்பது கேள்விக்குறியாகும்.

பெண்களைப் பாகுபாட்டுக்கு உள்ளாகின்ற மேற்படி பழைய கற்பித்தல்கள் அல்லது பின்பற்றல்கள் என்பவற்றை அவ்வாறே பேணிச்செல்ல வேண்டுமென்பது இந்து மத நிறுவனங்களைச் சேர்ந்த அதிகாரிகளின் ஏற்றுக்கொள்ளலாக அமைந்துள்ளதென ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. அவற்றின் நீதியான தன்மை தொடர்பாக அவர்களிடம் எதுவித கருத்தும் காணப்படவில்லை. பூஜைகளில் பங்கேற்பதற்காகப் பெண்கள் வருகைதந்தாலும் அவர்கள் அனுஷ்டானங்களில் ஈடுபடுவதில்லை. கோயிலுக்குள் பெண்கள் சுத்திகரிப்புச் செய்பவர்களாகவே பணியாற்றுகின்றனர். கோயில் வளாகத்தைக் கூட்டிப்பெருக்குகின்ற வயோதிபப் பெண்களுக்கு அப்பணியின்மூலம் மட்டும் திருப்தியடைய வேண்டி ஏற்படுகின்றது. நிறுவன நிருவாகத்தில் எந்தப் பெண்ணும் உள்ளடங்குவதில்லை. இலங்கை கோயில் நிருவாக வரலாற்றில் இருந்த ஒரேயொரு பெண் முகாமையாளர் தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களே. பெண் கடவுள் ஒருவருக்கான கோயிலாகிய அது யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற துர்க்கை அம்மன் கோயிலாகும். பெண் கடவுள்களுக்குரிய கோயில்கள் எவ்வளவோ இருப்பினும் ஒரு பெண் அதில் தலைவியானதில்லை. இங்கிருக்கின்ற தனித்துவமான விடயம் யாதெனில், அவர் நீண்டகாலமாக அவரது



தனிப்பட்ட பணத்தைக்கூடச் செலவிட்டு கோயிலைக் கட்டியெழுப்ப முன்வந்தமையாகும். அதேவேளை அக்கோயிலினூடாகச் சில சமூக சேவைகளையும் நடைமுறைப்படுத்தியதோடு அதன்பொருட்டுச் சில கொடையாளர்களையும் கண்டுபிடிப்பதற்காக அவரே முன்னின்று உழைத்துள்ளார். எனவே அவர் கோயிலை நிருவகித்துள்ளதுடன் ஏனைய பதவிகளை ஆண்கள் வகித்துள்ளனர். அவர் இருந்த காலப்பகுதியில் இரதத்தை இழுத்துச் செல்வதற்குப் பெண்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அவர் 2006ஆம் ஆண்டு மரணித்தாலும் அவரால் உருவாக்கப்பட்ட மரபின் பிரகாரம் துர்க்கை அம்மன் கோயிலின் இரதோற்சவத்தின்போது ஆண்கள் ஒருபுறமாகவும் பெண்கள் மறுபுறமாகவும் நின்று இரதத்தை இழுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் வரலாற்றிலிருந்த ஒரே பெண் கோயில் தலைவியாகிய அவரது மரணத்தின் பின்னர் அப்பதவி ஆண்களின் கைகளுக்குச் சென்றுள்ளது.



**இலங்கை கோயில் நிர்வாக வரலாற்றில் இருந்த ஒரேயொரு பெண் முகாமையாளர் *தங்கம்மா அப்பாக்குட்டி* அவர்களே. பெண் கடவுள்களுக்குரிய கோயில்கள் எவ்வளவோ இருப்பினும் ஒரு பெண் அதில் தலைவியானதில்லை. இங்கிருக்கின்ற தனித்துவமான விடயம் யாதெனில், அவர் நீண்டகாலமாக அவரது தனிப்பட்ட பணத்தைக்கூடச் செலவிட்டு கோயிலைக் கட்டியெழுப்ப முன்வந்தமையாகும்.**

## பெண் கடவுளர்களாலும் பெற்றுக்கொடுக்க முடியாத பெண்களின் விடுதலை

பெண் கடவுளர்களுக்கு முக்கிய இடம் கிடைத்திருக்கின்ற கிழக்கு மாகாணத்தின் இந்து மக்கள் மத்தியில் பெண்களுக்கு, யாழ்ப்பாணம் மற்றும் ஏனைய மாகாணங்களைவிட அதிக விடுதலை தமது மத வழிபாடுகளில் கிடைக்கப்பெறவில்லையென்பது இக்கற்கையின்மூலம் சுட்டிக் காட்டப்படுகின்றது. யாழ்ப்பாணத்தைவிட வித்தியாசமான பல்தேசிய, பல்மத, பல்கலாசார சமூகமாகிய கிழக்கு மாகாணத்தின் தமிழ் மக்கள் மத்தியில் பழைய மற்றும் புதிய மதக் கும்பல்களை நோக்கிய போக்கும் காணப்படுகின்றது. பெண் கடவுளர்களின் கோயில்களின் நிருவாக சபைகளில்கூடப் பெண்களுக்கு இடமில்லை. பெண் பாலை அடிப்படையாகக்கொண்ட மாதவிடாயின் காரணமாக அவர்கள் தீட்டாகக் கருதப்படுவதனால் புனிதமான இடங்கள், புனிதப் பொருட்கள் (விளக்குகள், கடவுள் சிலைகள்) மற்றும் மந்திரம் ஓதுதல் போன்றவை அவர்களுக்குத் தடையாகும். யாழ்ப்பாணத்தில் இடம்பெறுவதைப்போன்று நிலத்தைக் கூட்டிப் பெருக்குதல், வாடிய பூக்களை அகற்றுதல், மாலைகளைக் கட்டுதல் போன்றவற்றை மட்டுமே அவர்கள் மேற்கொள்ளலாம். பிள்ளைகளின் திருமணங்கள், வீடு குடிபுகுதல், புதுவருடப்பிறப்பு போன்ற வாழ்க்கையின் சுபமான நிகழ்வுகளை இழக்கச்செய்தல், விரும்பிய ஆடைகள் அணிவதை அங்கீகரிக்காமை போன்ற, மதத்தின் பெயரால் விதவைகளைத் தனிமைப்படுத்துகின்ற மனோபாவங்களைப் பெண்களுக்கெதிரான வன்முறைச் செயற்பாடுகளாக ஏற்றுக்கொள்வதற்கு மதத் தலைவர்கள் அல்லது பெண்கள் தயாராக இல்லை என்பதும் இக்கற்கையின்மூலம் வெளிக்கொணரப்படுகின்றது.

பேரழிவுகள் அல்லது வறுமையின் காரணமாகப் பெண்களுக்கு ஏற்படுகின்ற மன அழுத்தங்களுக்கு மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுக்காது அவர்களை ஓரங்கட்டும் நிலைமை காணப்படுகின்றதெனவும் சமயம் சாராத கோயில்களில் பேய்களை விரட்டும் சடங்குகள் போன்றவற்றை அவர்கள் தனித்தனியாக மேற்கொள்ளுகின்றனர் எனவும், பேயை விரட்டியடிப்பதற்காகப் பூசகர்கள் பெண்களைத் தாக்குகின்றனர் எனவும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. சில விசேடமான கோயில்களில் மேற்கொள்ளப்படுகின்ற சூனியம் மற்றும் மாந்திரீகம் என அழைக்கப்படுகின்ற

இச்சடங்குகளின்மூலம் கடவுளின் கிருபை எதிர்பார்க்கப்படுவதனால் அவற்றை மதத்துடன் இணைத்துக் கொண்டுள்ளனர். இந்த வழிபாடுகளுக்கும் கும்பலான செயற்பாடுகளுக்குமிடையில் பெண்களை மையமாகக்கொண்ட பல்வேறுபட்ட அனுஷ்டானங்களும் விரதங்களும் உள்ளதாகவும் அவை பெண்களை மத ரீதியான பாகுபாடுகளுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்குகின்றதாகவும் இங்கே வெளிக்கொணரப்படுகின்றது.

## தோட்டப்புறத்தின் சடங்குகளுக்கு மத்தியில் விதவைப் பெண்

கிழக்கு மாகாணத்தைப் போன்று போலி வழிபாட்டுக் குழுக்களுடன் இணைந்திருத்தல், உருவேறுதல், இந்து சமய மரபினுள் காணப்படுகின்ற விரதம் இருத்தல் போன்ற மிகவும் கடினமான வழிபாடுகளில் ஈடுபடுதல், தோட்டப்புற இந்துப் பெண்களிடமும் காணப்படுகின்றது. சோழ மரபுக்குரிய கிராமிய கடவுளர்களையும் பெண் கடவுளர்களையும் வழிபடுகின்ற அவர்கள் இந்துத்துவ வாதத்தில் இலங்கை வகைகளுடன் இணைந்துக் கொள்ளாமைக்கான காரணம் கடினமான வாழ்க்கை முறைகளின் விளைவாக அவகாசம் கிடைக்காமையே என நூலில் குறிப்பிடப்படுகின்றது. எவ்வாறாயினும் ஒரு சிறுமியின் முதலாவது மாதவிடாயை (பூப்பெய்தல்) கோலாகலமாகக் கொண்டாடுகின்ற அவர்கள், அதன் பின்னர் ஏனைய விழாக்களின்போது அதனைத் தீட்டாகக் கருதி அப்புறப்படுத்துகின்றனர். ஏனைய மாகாணங்களைவிடச் சற்று வித்தியாசமாக பெண் கடவுளர்களுடன் சம்பந்தப்பட்ட கோயில்களில் பெண்கள் சில வழிபாடுகளில் ஈடுபட்டுவருவதாகவும் வெளிக்கொணரப்படுகின்றது.

மத ரீதியான போக்கினைக் கொள்கின்ற, பெண்களும் சம்பந்தப்படுகின்ற, பெண்களுக்கு எதிரான மிலேச்சத்தனமான ஒரு வழிபாடு தோட்டப்புறங்களில் இடம்பெறுகின்றது. அதாவது ஒரு பெண் விதவையாவதை அறிவிக்கும் மரபாகும். இந்தியாவில் அமுலிலுள்ள இந்த முறையானது மலையகத்தில் இடம்பெற்றுவருவதற்கான காரணம் தோட்டச் செய்கைக்காக இந்தியாவிலிருந்து வருகைதந்த ஆதி பரம்பரைகளுடன் அவர்களது மத நம்பிக்கைகளும் வழிபாடுகளும் இணைந்து வந்தமையேயாகும். எவ்வாறாயினும் மணமகளைப் போன்று அலங்கரித்து கோயிலுக்கு வரும் விதவையின் முன்னால் வருகின்ற அவளது மரணித்த கணவரின் சகோதரி அவளது தாலி, பூ போன்ற அலங்காரங்களை அகற்றி, பொட்டை அழிக்கின்றாள். கைகளிலுள்ள கண்ணாடி வளையல்களை உடைத்துவிடுகின்றாள். கோலாகலமாக வெள்ளைப் புடவையொன்றைப் பெற்றுக் கொடுக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் பங்கேற்கின்ற அனைத்துப் பெண்களும் விதவைப் பெண்ணுடன் இணைந்து அழுதுபுலம்பி அவள் ஒரு விதவை என்பதை உத்தியோகபூர்வமாக அறிவிக்கின்றனர். அதன் பின்னர் சகல விழாக்களிலிருந்தும் சடங்குகளிலிருந்தும் அவள் அகற்றப்படுதல் இடம்பெறுகின்றது. மத ரீதியான சம்பிரதாயமாக இதனை நிறைவேற்றி விதவையை எதுவித மங்களகரமான நடவடிக்கைக்கும் பொருத்தமற்றவளாக மாற்றியமைத்து அவளது பாலியல் தேவையும் கட்டுப்படுத்தப்படுகின்றது)). இருப்பினும் இதற்கு முரணாக மேற்படி கலாசாரத்தினுள்ளேயே விதவைகள் மீண்டும் திருமணம் செய்துகொள்வது சாதாரண ஒரு விடயமாக மாறியுள்ளமையின்மூலம் மத ரீதியான கலாசாரத்தினுள் பெண்களைத் தரக்குறைவுக்குள்ளாக்கும் மரபுகள் கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

இவ்வகையில் மூன்று பிரதான வீச்சுக்களிலுள்ள தமிழ் மக்கள் இந்துத்துவவாதத்தினுள் செயற்படும் விதமும் அதில் உள்ளடங்கியுள்ள தந்தைவழி உலக நோக்கினுள் பெண்களுக்குப் பாகுபாடு காட்டப்படுகின்ற விதமும் தொடர்பான குறுகிய கற்கையாக இருப்பினும் மேற்படி தகவல்கள் தொடர்பான முழுமையான விபரங்கள் இந்த நூலில் உள்ளடங்கியுள்ளன. சாதகமான சிறிய வெற்றிகளும், இடம்பெறுகின்ற பாகுபாடுகளுக்கு எதிரான சாதகமான விழிப்பினைப் பெற்ற சமூகமொன்று உள்ளதென்பதும் இதன்மூலம் வெளிக்கொணரப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக தற்காலத்தின் வறுமை, வாழ்க்கையின் துன்பங்கள் மற்றும் வேதனைகள் என்பவற்றுக்குச் சலுகையை எதிர்பார்த்து, போலியான மத வழிபாட்டுக் குழுக்களையும் மதப் பிரிவுகளையும் நோக்கி அதிகமாக இழுபட்டுச்செல்கின்ற பெண்களின் அனுபவங்களும் விபரிக்கப்படுகின்ற இந்த நூல் அச்சமற்ற சமர்ப்பணமொன்றாக எடுத்துக்காட்டப்படலாம். ■

கலந்துரையாடல் மற்றும் புகைப்படங்கள்

**சீதா ரஞ்சனி**

## ஏற்றத் தாழ்வற்ற தேவ இராஜ்ஜியமொன்றில் பெண்களின் வகிபாகம்,

# வெற்றிகள் மற்றும் சவால்கள்

"பெண்கள் நாட்டின் கண்கள்" என்று தமிழில் ஒரு கூற்றுள்ளது. அதேவேளை தாய்மையை அர்த்தப்படுத்துகின்ற தாய்நாடு, இலங்கைத் தாய் என எமது நாடு அழைக்கப்படுகின்றது. ஆசியாவில் தோன்றிய மதங்கள் பெண் விடுதலையை உள்ளடக்கியதாக உருவாகியுள்ளன. உதாரணமாக, இந்துப் பிராமண மதத்தில் இருந்த பெண் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக பௌத்த தர்மம் தோற்றம் பெற்றுள்ளது. யூத மதத்தில் இருந்த பெண் அடிமைத்தனத்திலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்காக இயேசுநாதரின் வருகை இடம்பெற்று, கிறிஸ்தவ மதம் தோற்றம் பெற்றதாக பேராசிரியர் சன்க் கூறுகின்றார். அந்த வகையில் நோக்கும்போது மக்கள் அடிமைத்தனத்திலிருந்து மீட்சி பெறுவதற்கு மதமானது அவர்களது வாழ்க்கைமீது பாரியளவில் தாக்கம் செலுத்தியுள்ளது.

### இயேசு கிறிஸ்துவுக்கு முன்னர்

ஆண்டவர் ஆணையும் பெண்ணையும் தமது சொரூபத்தில் படைத்ததாக புனித வேதாகமத்தின் தொடக்க நூலில் 1:23-26 வரையிலான வசனங்களில் குறிப்பிடப்படுகின்றன. ஆண்டவர் பெண்ணையும் ஆணையும் ஒரே சமத்துவத்துடனும் சுதந்திரத்துடனும் படைத்தார். அதேவேளை, இயேசுநாதரின் பிறப்பின்போது பெண்ணின் முக்கியத்துவம் மற்றும் தலையீட்டுத்தன்மை என்பவற்றை புனித மத்தேயுவின் நற்செய்தியில் 1:18–25 வரையுள்ள பகுதியிலிருந்து நாம் தெளிவாகக் காணலாம். அந்த வகையிலேயே இயேசுநாதரின் சேவையின்போது தமது வளங்களை அர்ப்பணித்து அவருக்குத் தொண்டாற்றிய பல பெண்கள் இருந்ததாக புனித வேதாகமத்தில் லூக்கின் நற்செய்தியில் 8:1–3இல் குறிப்பிடப்படுகின்றது. அப்போதைய யூத சமூகத்தில் பெண்களுக்கு மிகவும் கீழ்மட்ட இடமே கிடைத்திருந்தது. குறிப்பாக யூத மதத்தை எடுத்துப் பார்க்கும்போது, யூத மதகுருமார் தினமும் காலையில் "சுவாமியே நீர் என்னை ஒரு பெண்ணாக மற்றும் நாயாக இன்றிப் படைத்தமைக்கு நன்றி" என மன்றாடியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் யூத மதத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்டிருந்த தாழ்ந்த அந்தஸ்து தொடர்பாக எமக்குச் சிறப்பாகப் புரிகின்றது. அதேபோன்று கிரேக்க மதத்தை நோக்கும்போது ஆண்கள் தமக்குத் தேவையான பிள்ளைகளைப் பெற்றெடுப்பதற்காகவும் தமது இன்பத்திற்காகவும் மனைவிமார்களையும் துணை மனைவிமார்களையும் வைத்திருந்ததாகக் கூறப்படுகின்றது. உரோம கலாசாரத்தை எடுத்து நோக்கும் போதும் அக்காலத்தில் ஒரு பெண் குழந்தை இவ்வுலகின் ஒளியைக் காணும்போது தந்தை அவளைத் தூக்கினால் மட்டும் அவளுக்கு உயிர் வாழ்வதற்கான சிறப்புரிமை கிடைக்கின்றது. இந்த நிலைமைகளை ஆராய்ந்து பார்க்கும்போது பெண்களுக்கு அக்காலத்தில் வழங்கப்பட்டிருந்த இடம் பற்றிய சிறந்த புரிதலை நாம் பெற்றுக்கொள்ளலாம்.

### பெண்களுக்குப் பெறுமதியைப் பெற்றுத் தந்த இயேசுநாதர்

மேலே நாம் குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்புகள் நிலவிய காலப்பகுதியில் கிறிஸ்தவ மதத்தின் முதல் வித்தான இயேசுநாதர் பெண்ணின் விடுதலைக்காகத் தோற்றினார். அக்காலப்பகுதியில் ஒரு தகப்பன் தனது மகளுக்கு யாப்பினைக் (வேதாகமத்தில் பழைய ஒப்பந்தத்தின் சட்டவிதிகள்) கற்பித்தல் என்பது அவளுடன் தகாத உறவைப் பேணுதலுடன் சமப்படுத்தப்பட்டிருந்தது. இக்கருத்தியலின் காரணமாகப் பெண்ணுக்கு யாப்பினைக் கற்றுக் கொள்ள முடியாத சூழல் உருவாகியிருந்தது. அத்தகையதொரு சமயத்தில் இயேசுநாதர் மேற்படி கருத்தியல்களை முறியடித்து மரியா போன்ற பெண்களுக்கு யாப்பினைக் கற்பித்ததாக லூக்கின் நற்செய்தியில் 10:38-42 வரையிலான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேவாறு, இயேசுநாதர் பகிரங்கமாக சாமானியப் பெண்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டதாக புனித ஜொஹானின் நற்செய்தியில் 4:1-42 வரையிலான பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உதாரணங்களின் மூலம் பெண்

அடிமைத்தனத்திற்கு எதிராக இயேசுநாதர் செயற்பட்டிருப்பது எமக்குத் தெளிவாகப் புலனாகின்றது.

அதேவேளை ஆண்களால் மட்டும் விவாகரத்துப் பெறக்கூடியதாக இருந்த அக்காலப்பகுதியில் அதனை எதிர்த்து, பெண்களுக்காகவும் அதனைச் செய்ய முடியுமென இயேசுநாதர் சுட்டிக்காட்டியதோடு, ஒரு தம்பதியினர் விவாகரத்துப் பெறாமல் வாழ்வதானது கடவுளின் விருப்பமென்பதையும் வலியுறுத்தினார். அதாவது புனித மாக்கின் நற்செய்தியில் *10:2-10* வரையிலான பகுதியில் இது தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் "எனவே ஆண்டவரால் ஒன்று சேர்க்கப்பட்டவர்கள் மனிதர்களால் பிரிக்கப்படாதிருக்கட்டும்" எனக் குறிப்பிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல, அப்போதைய வழிபாடுகளின்போது பெண்களின் காணிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்கான காரணம் பெண்கள் அக்காலத்தில் இரண்டாம்தர வகுப்பினராகக் கருதப்பட்டு, அறவே கணக்கெடுக்கப்படாதமையாகும். அத்தகைய சூழ்நிலையில் இயேசுநாதரால் ஏழைப் பெண்ணின் காணிக்கையானது உன்னதமான காணிக்கையாக மக்களுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது (லூக்கின் நற்செய்தியில் 21ஆம் அத்தியாயம்). அந்த வகையில் பெண்கள் ஒதுக்கப்பட்டிருந்த நிலைமையின்கீழ், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த இயேசுநாதர் முதல் தடவையாக மக்தலீனா மரியா எனும் பெண்ணுக்குக் காட்சியளித்ததன் மூலம் பெண்ணின் அந்தஸ்து மிகவும் உயர்வானதும் பெறுமதியானதும் எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அறம் ஆரம்பமாகும்போது பெண் காணாமற்போதல்

இயேசுநாதர் பெண்கள் மீதான துன்புறுத்தலுக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தாலும் கிறிஸ்தவ மதத்தின் ஆரம்ப காலப்பகுதியில், அதாவது கி.மு. 50ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், ஆரம்ப திருச்சபை வரலாற்றில், திருச்சபையில் பெண்கள் பேசுவதைத் தடைசெய்து, அவர்கள் பலவீனமானவர்களெனக் குறிப்பிட்டு அவர்களது ஆளுமைக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த வகையிலே 1ஆம் கொரெந்தி *15:1-9* வரையுள்ள பகுதியில் புனித போல் அவர்கள் இயேசுநாதரின் உயிர்தெழுகை தொடர்பாகப் பேசுகின்றார். உயிர்த்தெழுந்தபோது இயேசுநாதர் மனிதர்களுக்குக் காட்சியளித்த விதம் தொடர்பாகவும் காட்சியளிக்கப்பட்டவர்கள் தொடர்பான பட்டியலொன்றையும் அவர் முன்வைக்கின்றார். இருப்பினும் இப்பட்டியலில் மக்தலீனா மரியா தொடர்பாகக் குறிப்பிடப்படவில்லை. இதன்மூலம் பெண்களைப் பாகுபாட்டுக்குள்ளாக்கும் ஒரு தோற்றப்பாட்டினை நாம் காண முடிகின்றது. எவ்வாறாயினும், ஆரம்ப காலப்பகுதி போல் அவர்கள் பெண்கள் தொடர்பாகத் தவறான சிந்தனையைக் கொண்டிருந்தாலும் பிற்காலத்தில் அவரது உள்ளார்ந்தத்திலும் ஒருவகையான கைவிடல் காணப்படுகின்றது. எனவே, ஆரம்பத்தில் திருமணத்துக்கு எதிராகப் பேசிய போல் அவர்கள், பிற்காலத்தில் கணவனினதும் மனைவியினதும் தொடர்பினை இயேசுவுக்கும் திருச்சபைக்குமிடையிலான தொடர்புடன் இணைத்துக் கருத்துத் தெரிவிக்கின்றார். அதுமட்டுமல்ல, இயேசுவிடம் ஆண்-பெண் பாகுபாடு இல்லையென எடுத்துக்காட்டுகின்றார் *(கலாதி 3:28)*.

ஆரம்பத் திருச்சபையின் 2ஆம், 3ஆம் நூற்றாண்டுகளுக்கு வரும்போது மொன்டேனியஸ் எனப்படும் திருச்சபை ஊழியர் ஒருவருக்கு, மக்சில்லா மற்றும் பிரிசீலா என்போர் இருந்ததாகக் குறிப்பிடப்படுவதோடு அவர்கள்


வண. மிகிரி த சில்வா


வண. சீதா மாரசிங்க


வண. மாலினி தேவானந்த


வண. ரஞ்சனி லியன ஆராய்ச்சி

ஒன்றாக இணைந்து பணியாற்றியதாகவும் கூறப்படுகின்றது. அதேவேளை, கி.மு. 1ஆம் நூற்றாண்டு முதல் 4ஆம் நூற்றாண்டு வரை காணப்பட்ட துன்புறுத்தல் காலப்பகுதியில் ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் வேத சாட்சியாளர்களாக மரணித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## இன்றைய வெற்றிகளும் சவால்களும்

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பமானது இலங்கைப் பெண்கள் தமது உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்துவதற்கு ஆரம்பித்த காலப்பகுதியாகும். அதாவது துன்புறுத்தல்களுக்குள்ளான பெண்கள் சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார காரணங்களை அடிப்படையாகக்கொண்டு தமது உரிமைகளுக்காகக் குரலெழுப்ப ஆரம்பித்தனர். குறிப்பாக திருச்சபையும் இப்போராட்டங்களுடன் இணைந்தது. அதேவேளை, பெண்கள் தேவதரும கல்வியில் ஈடுபடவேண்டுமென்ற சிந்தனை 1981ஆம் ஆண்டு மேலெழுந்தது. முதலாவது தேவதரும மாணவியாக வண. மிஹிரி டி சில்வா பெண் போதகர் அவர்கள் இலங்கை தேவ தரும கலாசாலையில் சேர்ந்ததோடு, அவர் மெதடிஸ்த திருச்சபையின் திருநிலைப்படுத்தப்பட்ட முதலாவது பெண் போதகராவார். அதன் பின்னர் பெருமளவிலான பெண்கள் மெதடிஸ்த திருச்சபையின் தேவதர்ம கலாசாலையில் தேவதர்மத்தைப் பயின்று பெண் போதகர்களாகப் பணியாற்றி வருகின்றனர். மெதடிஸ்த திருச்சபையில் பெண்களுக்கு குருத்துவத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டுமென்ற பிரேரணை 1979ஆம் ஆண்டு திருத்தந்தை வெஸ்லி அரியராஜா அவர்களால் திருச்சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. பெண் போதகர்களாக பூச்சினைப் பெற்று தற்போது 30 வருடங்களுக்கும் அதிகமான காலம் கடந்துள்ளது. ஆரம்பத்தில் பெண்களுக்கு குருத்துவத்தை வழங்குவதற்கு எதிராகப் பல எதிர்ப்புகள் கிளம்பினாலும், பிற்காலத்தில் அவை ஓரளவு தணிந்துள்ளன.


இலங்கைச் திருச்சபையை நோக்கும்போது கொழும்பு மறைமாவட்டத்தில் பெண்களை குருத்துவத்திற்கு நியமித்தல் தொடர்பான ஒரு பிரேரணை 1992ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தாலும் அது 2006ஆம் ஆண்டே யதார்த்தமானது. அதாவது முதலாவது பெண் போதகராக வண. மாலனி தேவானந்த அவர்கள் அந்த வருடத்தில் போதகர் பதவியைப் பெற்றுக்கொண்டார். குருணாகல் மறைமாவட்டத்தில் நீண்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் 2011ஆம் ஆண்டு பெண் குருத்துவத்திற்கு இடம் கிடைத்தது. குறிப்பாக, வண. சீதா மாரசிங்க மேற்படி மறைமாவட்டத்தில் முதலாவது பெண் போதகர் பதவியைப் பெற்றுக்கொண்டார். பெப்டிஸ்ட் திருச்சபையின் முதலாவது பெண் போதகர் பதவியை வண. ரஞ்சனீ லியனாரச்சி அவர்கள் 2001ஆம் ஆண்டு பெற்றுக்கொண்டார். கத்தோலிக்கத் திருச்சபையிலும் பெண் போதகர் பதவி தொடர்பாகப் பேசப்பட்டு வருகின்றது.

20ஆம் நூற்றாண்டில் பெண்கள் இவற்றைப் பெற்றுக்கொண்டாலும் இன்னும் உயர் பதவிகளை நோக்கிச் செல்லும்போது ஆண் ஆதிக்கத்தை நோக்கிச் சாய்கின்ற திருச்சபையினுள் பெண் போதகர்கள் பெரும் சிரமங்களுக்கு முகங் கொடுக்கின்றனர். சில திருச்சபைகளில் பெண் போதகர்கள் ஆராதனைகள் செய்வது தொடர்பாக குறைந்த விருப்பம் காட்டப்படுவதோடு, திருச்சபையின் பலிபீடத்திற்குள் பிரவேசிப்பதற்கும் நற்செய்தியை வாசிப்பதற்கும் பெண் போதகர்களுக்கு இன்னமும் தடையான தன்மை காணப்படுகின்றது.

இன்று திருச்சபைகளிலே மனித உரிமைகள் தொடர்பாகப் பேசப்பட்டாலும் திருச்சபைக்குள் இருக்கின்ற பெண்களின் உரிமைகள் மீறப்படுவது பற்றிக் குறைவாகவே பேசப்படுகின்றது. திருச்சபைக்குள் இருக்கவேண்டிய தனித்துவமான பண்புகளில் ஒன்று யாதெனில், கத்தோலிக்கம் எனப்படும் எண்ணக்கருவாகும். இதன் பொருள், திருச்சபையானது எந்தவொரு நாட்டுக்கும், எந்தவொரு இனத்துக்கும், எந்தவொரு மொழிக்கும், எந்தவொரு கலாசாரத்துக்கும், எந்தவொரு பால்நிலைக்கும் மட்டும் சொந்தமானதல்ல என்பதுடன், அவை அனைத்துக்கும் அது சொந்தமானதென்பதாகும். இத்தகையதொரு பண்பு திருச்சபைக்குள் எழுமா என்பது இன்னமும் கேள்விக்குறியாகவே உள்ளது. மத்தியுவின் நற்செய்தி 8:11இல் "கீழைத்தேயம், மேலைத்தேயம் ஆகிய இருபுறங்களிலுமிருந்தும் வருகைதந்து தேவராஜ்ஜியத்தில் அமர்வார்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றது. எனவே, தேவராஜ்ஜியம் சதாகாலமும் சகலருக்கும் உரித்தான இராஜ்ஜியமாகும். அதில் எந்தவித ஏற்றத்தாழ்வும் கிடையாது. அத்தகையதொரு புதிய யுகம் கிறிஸ்தவ திருச்சபையினுள் பெண்களுக்காக எப்போது பிறக்கும்? ■

**வண. மதகுரு வத்சலா செனெவிரத்ன**

இலங்கைச் சபை, குருணாகல் மறை மாவட்டம்



## நினைப்பு

மனைவி : இஞ்சேப்பா, உங்களோட ஒரு விசயம் கதைக்கவேணும்.....

கணவன் : ம்...... சொல்லு.......

மனைவி : இப்பெல்லாம் நீங்க ஒவ்வொருநாளும் குடிக்கிறமாதிரி தெரியுது. என்ன ஏதும் பிரச்சினையா?

கணவன்: இல்லையே......

மனைவி : இதில மறைக்க என்னப்பா இருக்கு? வெளிப்படையா கதையுங்க... ஒவ்வொரு நாளும் குடிச்சிற்று வாறது எனக்குத் தெரியுது. முந்தி இப்பிடி இல்ல நீங்க. கிழமையில ஒரு நாள் எடுப்பீங்க. இப்ப என்னாச்சு?

கணவன்: ........

மனைவி : சிலவேளை நீங்களே இதை யோசிச்சு பாத்திருக்கமாட்டீங்க. பாட்டிக்கு போனா மட்டும் குடிக்கிறதெண்டு இருந்தீங்க. பிறகு கிழமைக்கு ஒருக்கால் எண்டு வந்தது. இப்ப ஒவ்வொரு நாளும் என்றாயிற்று. குடி உங்களை அடிமையாக்கீற்று எண்டு எனக்கு தோணுது. நீங்க என்ன நினைக்கிறீங்க?

கணவன் : சீ...சீ... அப்பிடி ஒண்டும் இல்ல.. எனக்கு அளவு தெரியும். என்ர நிலையை மறக்கிற மாதிரி குடிக்கமாட்டன்.

மனைவி : உங்கட தன்நிலையை மறக்கிற அளவுக்கு நீங்க போறதில்ல. அது எனக்கு தெரியும். ஆனால் அந்த "தன்நிலையை மறக்கிற" அளவு அல்லது அந்த "லிமிற்" என்று சொல்லுற அளவு முந்தி இருந்ததைவிட இப்ப கூடி இருக்கு என்டு உணர்கிறீங்களா?

கணவன் : ........

மனைவி : முந்தி அரை கிளாஸ் எண்டால் இப்ப ஒரு கிளாஸ் எண்டு மாறியிருக்கும். என்ன? சரி, இது உடம்புக்கும் கூடாது பொருளாதாரத்துக்கும் கட்டாது. பிள்ளையளும் வளந்திற்றுதுகள். அதுகளுக்கு கௌரவமாகவும் இருக்காது.

கணவன் : என்ன இப்ப, குடிகாரன் எண்டு சொல்ல வாறியா?

மனைவி : இல்ல உங்கள நீங்களே கேட்டு பாருங்கள் "நான் குடிக்கு அடிமையாகிற்றனா? அல்லது அது என்ர கண்றோளில இருக்கா?" எண்டு.

கணவன் : ........

மனைவி : சரி. உங்கள நீங்களே பரிசோதிச்சுப் பாருங்க. ஒரு கிழமைக்கு குடிக்காமல் இருந்து பாருங்கள். முடிந்தால் நல்லது. முடியவில்லை என்றால் சொல்லுங்கள். ஏதாவது செய்வம். இப்ப இதுகெல்லாம் டொக்டரிட்ட ஆலோசனை கேக்கலாம்.

கணவன் : சரி செய்து பாக்கிறன்.

## நடப்பு

மனைவி : கடவுளே அவர் அதிகமா குடிக்க தொடங்கீற்றார். அவர அதிலிருந்து விடுவித்து விடு தாயே... அவர் இந்த குடியை விட்டா நான் காணிக்கை தாறன் உனக்கு.

மனைவி : ஆண்டவா வரவர மோசமாகுது. ஒவ்வொரு நாளும் குடிச்சிற்று வாறார். அவற்ற உடம்பும் கெட்டு காசும் வீணாப் போகுது... பிள்ளையளும் வளந்திற்றுதுகள். நாளைக்கு அதுகளின்ர கௌரவமும் கெட்டுபோயிரும். நானும் ஒவ்வொரு வெள்ளியும் விரதம் இருந்து உன்னட்ட வாறன். எனக்கு ஒரு நல்ல வழியை காட்டு அப்பனே......ஆண்டவா........

மனைவி : நானும் ஒரு மாசத்துக்கு மேலா உன்னட்ட வந்திற்றன் கடவுளே... எந்த முன்னேற்றமும் இல்ல... இந்த வருசம் நடந்து கற்பூரச்சட்டி எடுக்கிறன்....... கடவுளே அவரக் காப்பாத்து.... அந்தப் பழக்கத்தில இருந்து விடுவிச்சு விடு ஆண்டவா... ■

**கொற்றவை**


# "கரு" விற்குள்ள கர்வம் பெண்களிடம் இல்லாமல் போனது ஏன்?

உலகில் உள்ள அனைத்து மதங்களும் உலகத்தைப் படைத்தது முதல் உயிரினங்களைப் படைந்தது வரை ஆண் கடவுள்கள் என்பதில் முரண்பாடின்றி கூறும்போது, ஆணாதிக்க அமைப்பதின் இடைச்செருகல் திட்டவட்டமாக இயற்கைக்கு எதிராக அம்பலமாகிறது.

## மதம் என்பது என்ன?

பலரும் பல வியாக்கியானங்கள் இதற்கு சொன்னாலும் சகல மதங்களும் "மனித உயிரி, பாவங்கள் ஒழித்து, அன்பு செலுத்தும் மன உணர்வையும் அதனூடான மன அமைதியையும் எவ்வாறு பெற்றுக்கொள்வது" என்பதற்கான வழிகளை முன்வைப்பதிலில் இருந்துதான் கட்டமைக்கப்பட்டுள்ளது. இந்த மூலக்கருவினூடாகத்தான் வாழ்க்கை முறைகளை விளக்கிச் செல்கிறது என நம்புகிறோம். நம்பவைக்கப்படுகிறோம். மதங்கள் என்பவை தோற்றுவிக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்ட ஒரு "அமைப்பாதல்" முறைமை. எனவே, மனித உயிரி மனம் சம்பந்தப்பட்டு ஒரு அமைப்பாதல் முறைமைக்குள் உள்வாங்கப்படுகின்றபோது ஆண்-பெண் பேதமற்ற ஒரு நிலை உருவாக்கப்பட்டிருந்கவேண்டும் அல்லது அங்கு, ஆண் பெண் சமத்துவமாக நிலைநிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அது நடைபெறவில்லை. அனைத்து மதங்களும் தம்மை நிலை நிறுத்திக் கொள்வதற்காக வன்முறையை வழியாகக் கொள்வதும் இன்று வரை குறையவில்லை. இன்று வன்முறையும் பெண் எதிர்ப்பும் மதங்களின் அச்சாணியாகிவிட்டன.

இயற்கைக்கு பயந்து இயற்கையை வழிபட்ட காலம் தாய்வழிச் சமூகமாக இருந்த காலம் பெண் பெரும் கடவுளாக போற்றிய காலம் ஒன்றிருந்தது. சிந்து வெளி நாகரிகத்தில் "ஒரு பெண்ணின் வயிற்றில் இருது மரம் ஒன்று முளைப்பது போன்ற உருவம் கண்டறியப்பட்து என வரலாற்றாசிரியர்கள் கூறுவர். அந்த குறியீடு பெண் படைப்புடன் தொடர்பட்ட நிலையை சித்தரிப்பதும் அதனூடாக பெண்ணின் மாபெரும் சக்தியை காட்டுவதுமாகும்.அன்று படைப்பின் "மூலமாக" பெண் கண்டறியப்பட்டாள்.



"மானிட இனத்தின் கதை பெண்ணுடன் தொடங்குகிறது. மூலமனித இனமரபு நுட்பஅணுக்களைக் கொண்ட இனக் கீற்றைப் பெண்தான் தாங்கியிருந்தாள். இன்று வரையிலும் அவள்தான் அதைத்தாங்கியிருக்கிறாள். பரிணாம வளர்ச்சிக்கேற்ப அவள் தன்னை இசைவாக்கிக் கொள்ளும் தன்மை மனித இனம் தொடர்ந்து உயிர்வாழ்வைதையும் வெற்றியடைவதையும் உறுதிப்படுத்தியது." என்ற கூற்று கவனிப்புக்குரியது. ராதா கிருஸ்ணன் மொழிபெயர்த்த "உலக வரலாற்றில் பெண்கள்" என்ற நூலில் உள்ள குறிப்பு இது. (Rosalind Miles எழுதிய The women's history of the world' ) ஆனால் எந்த ஒரு மதமும் உயிரின் உருவாக்கத்தில் பெண்ணை முதன்மைப்படுத்தியதே இல்லை.

"இயற்கை சார்ந்த உயிரியல் அமைப்பில் (இங்கு பால் ரீதியில் பிரிந்த ஆண்-பெண் பிரிந்த உயிரியல் தொகுதியில்) பெண்கள் மறு உற்பத்தியில் விதிவிலக்கின்றி அனைத்து உயிரினங்களும் ஈடுபடுவது எதார்த்தமான உயிரியல் விதியாக இருக்கின்றது. ஆனால் உலகில் உள்ள அனைத்து மதங்களும் உலகத்தைப் படைத்தது முதல் உயிரினங்களைப் படைந்தது வரை ஆண் கடவுள்கள் என்பதில் முரண்பாடின்றி கூறும்போது, ஆணாதிக்க அமைப்பதின் இடைச்செருகல் திட்டவட்டமாக இயற்கைக்கு எதிராக அம்பலமாகிறது. சமுதாயத்தின் ஆணாதிக்க விளைவுகளே இன்றுள்ள மதங்கள் என்பது இதைத் தெளிவாக அம்பலப்படுத்துகிறது."என்று "ஆணாதிக்கமும் பெண்ணியமும்" என்ற நூலில் திரு.பி. இரயாகரன் குறிப்பிட்டுச் செல்வார். இந்த நூலில் "மதங்களும் பெண்ணும்" என்ற தலைப்பில் ஒவ்வொரு மதமும் எவ்வாறு பெண்ணை இரண்டாம் பிரஜையாக்கியது பற்றி காரண காரியங்களுடன் வரலாற்று தகவல்களை முன்னிறுத்தி விளக்கிச் செல்கிறார். உண்மைதான் சிவபெருமானின் நெற்றிக்கண்ணில் இருந்து ஆறு குழந்தைகள் உருவானதும், ஆணின் விலா எலும்பில் இருந்து பெண் படைக்கப்பட்டதும், பெண்களை விளைநிலங்களாக பார்ப்பதும் ஒவ்வொரு மதங்களும் தம்கென எழுதிக்கொண்ட உயிரின் படைப்பு வழியாகிறது.

இன்றைய நவீன யுகத்தில் கூட ஒரு ஆணின் ஊடாக மறு உற்பத்தியை நிகழ்துவது என்பது எவ்வகையிலும் சாத்தியம் இல்லை. புதிய முறை இனப்பெருக்கமுறையில் ஒரு ஆணின் விந்தணு இல்லாமல் பெண்ணின் கருவில் இருந்தே அவளைப்போல் இன்னொரு பெண்ணை உருவாக்கிவிட முயும் என்பது கண்டறிப்பட்டது. இதனூடாக ஒரு ஆணை உருவாக்குவதை பெண் மறுதலிக்க முடியும் சாத்தியங்களும் உண்டு. இந்நிலையில் உயிரின் படைப்பு வழியை ஆண் தனதாக்கிய மதக் கதைகள் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவை. வரலாற்று இயங்கியலில் பெண்ணுக்கான இடம் பின்தள்ளப்பட்ட காலத்தில் கட்டமைக்கப்பட்டவை. ஆணாதிக்கத்தை மையப்படுத்திய சமூக இயக்கத்திற்கு அரசியல், பொருளாதார, மத, பண்பாட்டு கூறுகள் அனைத்தும்

**இன்று மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறைகளும் பாலியல்வல்லுறவுகளும் அதிகரித்தமைக்கும் இந்தக் கேள்வி கேட்க முடியாத நிலைகளும் ஒரு காரணம். மதத்ததை மத தலைவர்களை கேள்விக்குட்படுத்த முடியாத நிலையை ஆணாதிக்க சமூகம் தமது பிற அரசியல் பொருளாதார தேவைக்காக நன்கு பயன்படுத்திக்கொள்கின்றன.**

துணை நிற்கவேண்டிய கட்டாயத்தில் மதம் விதிவிலக்காகிவிட முடியாது. அதனால்தான் மதங்கள் பெண் ஒடுக்குமுறையை மிகலாவகமாக நிகழ்த்தியுள்ளன. மேற்குறித்த நூலில் இராயகரன் அவர்கள் "மறுஉற்பத்தியை இயற்கை சார்ந்து எப்படி ஆண் ஈடுபடுவது சாத்தியம்? என்ற அடிப்படையான கேள்வியே மதத்தின் ஆணாதிக்கக் கற்பனைகளைத் தகர்க்க போதுமானது" என்று கூறிச்செல்வதும் கவனிக்கத்தக்கது.

ஆணின் விந்தணு இல்லாமலே ஒரு உயிரை உருவாக்க முடியும் என்பது இன்றைய விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு. ஆனால் ஒரு பெண்ணின் கர்ப்பபை இல்லாமல் உயிர்

உற்பத்தியாகும் சாத்தியம் விஞ்ஞானத்தில் இதுவரை இல்லை. எனவே, மறு உற்பத்தி என்பது எப்போதும் பெண்ணின் மூலமே சாத்தியமாகிறது. உண்மையில் இயற்கையாகவே பெண்ணினால்தான் உலகம் இயங்குகிறது. இந்த இயற்கை உண்மையை மறுதலிக்க புற உலகில் காத்தலும் அழித்தலும் ஆணிடமே இருக்கும்படி எல்லா நிறுவனங்களும் வடிவமைக்கப்பட்டன. அதில் ஒன்றுதான் மதம் என்ற நிறுவனம். ஒரு பெண் சுதந்திரமாக இருப்பது இயங்குவது ஆபத்து. இன்று சிறு பெண் குழந்தைகள் கூட ஆபத்துக்குள்ளாகியுள்ளனர்.

*யாரால்?*

ஆணினால்.

பாதுகாப்பும் அந்த ஆணின் கையில்தான். (அப்பா, அண்ணா, கணவன்) ஆனால் இன்று இந்த உறவுகளாலேயே பெருந் துன்பங்களை அனுபவிக்கும் குழந்தைகளும் பெண்களும் இருப்பதையும் மறுத்துவிடடுடியாது. உற்பத்தியின் மூலாதரமான பெண்ணிடம் இருந்து அதிகாரம் பறிக்கப்பட வேண்டும் என்பதற்காக கட்டமைக்கப்பட்ட சமூக ஒழுங்குவிதிகளில் ஆண் முதன்மைப்படுத்தப்பட்டது வரலாற்று உண்மை.

ஆயிரம் கோடி விந்தணுக்களில் வீரியம் உள்ள ஒன்றை மட்டுமே தேர்தெடுக்கும் பெண்ணின் "கரு"விற்குள்ள கர்வம் பெண்களிடமிருந்து திட்டமிட்டு அழிக்கப்பட்டது. இந்த அழிப்பினூடாக ஆண் சமத்துவத்தை நிலைநிறுத்தியிருக்கலாம். ஆனால் ஆண் அதிகாரத்தை நிலை நிறுத்தியதுதான் திட்டமிட்ட செயல். தீர்மானிக்கும் சக்தியாக பெண் உருவாகி விடக்கூடாது என்பதில்தான் அனைத்து நிறுவனங்களினதும் கவனம் இருக்கிறது.

ஒவ்வொரு மதமும் தமது கோட்பாடுகளை விளக்கும் நூல்களில் பெண்களுக்கு புத்திசொல்வதிலும் ஆண்களுக்கு பெண்களைப் பற்றியும் அவர்களை எப்படி கையாள வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றபோது ஆண் - பெண் பாலுறவு அடிப்படையிலேயே அவற்றை உருவாக்கியுள்ளமை தெளிவாகிறது. மதங்களில் பெண்கள் மதகுருமாராக உருவாக முடியாத நிலையும், மதகுருமாருக்கான பாலுறவு மறுப்பும் பெண்வெறுப்பை அல்லது பெண் விலக்கலை முன்னிறுத்துகிறது. மக்களுக்குள் பயத்தை உருவாக்கிவிட்டிருக்கும் மத நம்பிக்கைகள் எப்பேதும் கேள்விகளுக்குட்படாதவை. அந்தப் பலம்தான் மதத்திற்குள் பெண் ஒடுக்குமுறையை புகுத்துவதற்கும் இன்றளவும் அதை வளர்த்துச் செல்வதற்கும் சாதகமாக சூழலை உருவாக்கியுள்ளது.

இன்று மதத்தின் பெயரால் நடக்கும் வன்முறைகளும் பாலியல்வல்லுறவுகளும் அதிகரித்தமைக்கும் இந்தக் கேள்வி கேட்க முடியாத நிலைகளும் ஒரு காரணம். மதத்தை மத தலைவர்களை கேள்விக்குட்படுத்த முடியாத நிலையை ஆணாதிக்க சமூகம் தமது பிற அரசியல் பொருளாதார தேவைக்காக நன்கு பயன்படுத்திக்கொள்கின்றன. பெண் எங்கும் விலக்கப்பட்டவளாகிவிட்டாள். குற்றத்திற்கு ஆட்படுபவளாகிவிட்டாள். சமூகத்தின் சரிபாதியினரான பெண்களுக்கு அரசியலில் பொருளாதாரத்தில் எத்தகைய இடம் உள்ளது? இவற்றில் அவளது பங்காற்றல் எத்தகையதாக உள்ளது? இப்படிப் பெண்ணின் இடத்தை தீர்மானிப்பதில் மதத்தின் பங்கு மிகமுக்கியமானதகவுள்ளது. சமூகத்தின் அடிப்படை அலகான குடுப்ப அலகை கட்டமைப்பதில் மதத்தின் பங்கு கணிசமானது. மதச் சடங்குகளூடாக திருமண பந்தத்தில் ஆண்-பெண் இணைக்கபடுகின்றனர். அதன்போது சொல்லபபடுகின்ற மந்திரங்களாகட்டும் சடங்குகள் சம்பிரதாயங்களாகட்டும் எல்லாமே ஆணை முதன்மைப்படுத்தியவையே. வாழ்க்கையில் ஆணுக்கு துணையாக பெண் போவது பற்றியும் அவள் அங்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றியுமே அவை முன்னிறுத்துகின்றன. பெண் பாதுகாக்கப்பட வேண்டிய ஒரு பொருளாக அவனிடம் ஒப்படைக்கப்படுகிறாள்.

அனைத்து மதங்களினதும் மத நூல்களில் பெண்கள் பற்றிய நோக்கு, அவர்களுக்கான இடம் என்பன பற்றி பல்வேறு கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. அவற்றில் மிக விரிவாக பெண்ணின் இரண்டாம் பட்ச நிலை விபரிக்கப்பட்டுள்ளது. ஆனால் மதம் சார் கொள்கைகளில் யாருக்கும் கேள்வி எழுப்பப்படமுடியாத நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ■

**தேவகௌரி மகாலிங்கசிவம்**

# 'த லொஸ்ற் போய்' The Lost Boy நீ எங்கே?



தொழிலொன்றைத் தேடிக்கொண்டிருந்த எனக்கு, அவசரமான ஓர் அறிக்கையை சிங்களத்தில் தட்டச்சு செய்து கொள்ள வேண்டுமெனத் தெரிவித்து, பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பைச் (பெ.ஊ.கூ) சேர்ந்த சகோதரி வயலாவைச் சந்திக்குமாறு எனது நண்பியொருவர் தகவலொன்றை அனுப்பியிருந்தார். காலை 6.30 மணியளவில் வருமாறு எனக்கு அறிவிக்கப்பட்டிருந்ததோடு, எஸ்கொற் அவனியுவில் உள்ள இரண்டுமாடி வீடொன்றின் மேல்மாடியில் அதன் அலுவலகம் அமைந்திருந்தது. கதவு பூட்டப்பட்டிருந்தமையால் அழைப்பு மணியை ஒலிக்கச்செய்து சில நொடிகளுக்குப் பின்னர் ஒருவர் கதவைத் திறந்து "ஹலோ" என என்னை விளித்தார். அது சஞ்சய. பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினரால் அப்போது பிரசுரிக்கப்பட்டுவந்த "பெண்களின் உரிமைகளை ஆராய்தல்" எனும் மூன்றுமாத அறிக்கைக்குத் தேவையான செய்திகளின் தரவுகளைக் கணினியில் உள்ளடக்குவதற்காக அவர் காலையிலேயே வேலைக்கு வந்திருந்தார்.

அன்று முதல் பெ.ஊ.கூ நிறுவனத்தில் நிரந்தர சேவையை ஆரம்பித்த நான், பாடசாலை முடிந்து பெ.ஊ.கூ விற்கு வருகின்ற சஞ்சய, புத்தகப் பையை ஒருபுறம் வைத்துவிட்டு, தனது காதுகளில் "வோக்மன்"ஐப் பொருத்திக் கொண்டு பாடலொன்றைச் செவிமடுத்துக்கொண்டு தரவுகளைக் கணினியில் உள்ளடக்கும் பணியில் ஈடுபட்டு வருவதை நிதமும் கண்டேன். சில காலம் எம்முடன் மிகவும் ஐக்கியத்துடனும் சகோதரத்துவத்துடனும் பணியாற்றிய அவருக்கு, அப்போது 16 வயது. அவரது தாயாகிய சகோதரி சுனிலா அபேசேகரவும் பெ.ஊ.கூ வில் ஓர் இணைப்பாளராகவிருந்தார். கணினித் தொழில்நுட்பம் பற்றிய சிறந்த அறிவு அவருக்கு இருந்தது. ஒருநாளில் சில மணித்தியாலங்களுக்கு என வரையறுக்கப்பட்டிருந்த அவரது சேவைக் காலத்தினுள் பெரும்பாலும் எமக்கும் அறிவுறுத்தல்களை வழங்கி, அவரது தினப்பணிகளை வினைத்திறனுடன் பூரணமாக நிறைவேற்றுமளவுக்குப் பொறுமைசாலியானவர் சஞ்சய. அப்போது இரண்டு கணினிகள் மட்டுமே நிறுவனத்தில் இருந்ததோடு, அலுவலகத்தில் சுமார் 10 பேர் பணியாற்றியதனால் நாங்கள் அனைவரும் ஒரு நேரசூசிகைக்கு ஏற்ப வேலைகளைப் பகிர்ந்துகொண்டு கணனிகளைப் பயன்படுத்தினோம். பாடசாலை முடிந்து வருகின்ற சஞ்சயவுக்கு நாங்கள் பிற்பகலை ஒதுக்கியிருந்தோம். அது 1998ஆம் ஆண்டாகும்.

அவரது பெயர் சஞ்சய கமல் சேனாநாயக்க என்றபோதிலும், நாங்கள் அவரை "சஞ்ஜ்" என்ற சுருக்கப் பெயராலேயே அழைத்தோம். சிறுவயதாக இருந்தாலும் பெண்ணியல்வாத அமைப்பொன்றுடன் பணியாற்றுமளவுக்கு நல்ல புரிந்துணர்வும், வெளிப்படையான உள்ளமும் அவருக்கு இருந்தது. அவரது தாய் சுனிலா அபேசேகரவிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுபவத்தினாலோ என்னவோ பெண்ணியல்வாத நோக்கு மற்றும் மனிதநேயப் பண்பு என்பன அவரிடத்தும் அவ்வாறே காணப்பட்டது. அது அவரது தனித்துவமான பண்பாகும்.

சுனாமியினால் இலங்கையில் பல கடற்கரைப்பகுதி மாகாணங்கள் பாதிக்கப்பட்டிருப்பதை அறியக் கிடைத்தவுடனேயே சஞ்சய தமது குடும்பத்தாரையும் நண்பர்களையும் தேடிச்சென்ற சந்தர்ப்பத்தில் நாடு பூராவும் தொலைபேசி வலையமைப்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதைப் புரிந்துகொண்டார். இருப்பினும் தமது கையடக்கத் தொலைபேசியின்மூலம் SMS செய்திகளை தொடர்ந்தும் அனுப்பமுடியுமென்பதை அறிந்துகொண்ட அவர், பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அந்த இடங்களினதும் ஆட்களினதும் நிலைமை தொடர்பாகவும், தேவைப்படுகின்ற உதவிகள் தொடர்பாகவும் SMS செய்திகள் ஊடாக இந்தியாவிலுள்ள தமது நண்பர்களுக்கு அறிவித்துள்ளார். Dogs without Borders எனப்படும் இணையத்தளமானது சஞ்சயவின் இந்த SMS செய்திகளை வெளியிட ஆரம்பித்தது. சில நாட்களில் சுமார் 4000 SMS செய்திகளை அனுப்பி இலங்கையின் நிலைவரத்தை இடையறாது அறிக்கையிட்ட முதலாவது நபர் சஞ்சய என மேற்படி ப்ளொக் தளத்தின் உரிமையாளர் குறிப்பிட்டார்.

காலம் உருண்டோட, எமது நிறுவனத்துடன் மட்டும் நில்லாமல் வெகுசன ஊடகவியலாளராகத் தொழில்சார் திறனை மேம்படுத்திக்கொள்ளும் பாதைகளைத் திறந்துகொண்ட அவர், "யங் ஏஷியா டெலிவிஷன்" (யாரீவீ - YATV) நிறுவனத்துக்கு நிகழ்ச்சித் தயாரிப்பாளராக அடியெடுத்து வைத்தார். பல சாதனைத் திரைப்படங்களைத் தயாரித்த அவர் திரைக்கதை, நெறியாக்கத்தில் மட்டுமல்ல, கமரா தொழில்நுட்பவியலாளராகவும் பணியாற்றினார். இதற்கிடையில் யாரீவீ தயாரிப்பிலும் அசோக ஹந்தகம அவர்களின் நெறியாக்கத்திலும் உருவாக்கப்பட்ட "நெகெனஹிர வெறளென் எசென" (கிழக்கு கரையின் அழைப்பு) தொலைக்காட்சி நாடகத்தில் மனித மோதல்கள், வன்முறை மற்றும் அநீதி என்பவற்றுக்கெதிராக எழுகின்ற பக்கச்சார்பற்ற புரட்சிகரமான பிக்கு ஒருவரின் பாத்திரத்தை ஏற்று நடித்தார். அவர் நடிப்பிலும் பரிபூரணமானவர் என்பதை அந்தத் தொலைக்காட்சி நாடகத்தைப் பார்த்த சந்தர்ப்பத்திலேயே நான் புரிந்துகொண்டேன். அவர் அந்தக் கதாபாத்திரத்துக்கு மிகவும் பொருத்தமானவர் என்பது எனது கருத்தாகும். இன்றுகூட "யாரீவீ " யைச் சேர்ந்த நண்பரொருவரை எங்கேனும் ஓரிடத்தில் சந்திக்கக் கிடைக்கும்போதும் அவர்கள் சஞ்சயவைப் பற்றி "அவர் மிகத் திறமையான கலைஞர் - ஒரு நேர்மையான தோழர்" என்றே குறிப்பிடுகின்றனர்.

ஊடகவியல் தொடர்பாகச் சென்னையில் அமைந்துள்ள ஆசிய ஊடகவியல் கல்லூரியில் படிப்பினை 2004ஆம் ஆண்டு பூர்த்திசெய்த சஞ்சய, சிலகாலம் "ட்ரான்ஸ் பேரன்ஸி இன்டர்நெஷனல்" நிறுவனத்திலும் ஊடக மற்றும் தொடர்பாடல் பிரிவின் பிரதானியாகப் பணியாற்றியுள்ளார்.

இலங்கை இதழியல் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிய அவர், திறமையான ஓர் ஆசிரியர், ஊடகவியலாளர் மட்டுமல்ல, சமூக-அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக நுணுக்கமான விமர்சன அறிவுடன் தமது கருத்துக்களை அச்சமின்றி வெளியிட்ட ஒருவருமாவார். சமூக அநீதி, முறையற்ற ஆட்சி என்பவற்றைக் கண்டவுடனேயே தனது கருத்துக்களை அச்சமின்றி சமூக ஊடகங்களினூடாக எழுதுவதன் மூலம் ஏனைய நண்பர்களை இணையத்தளத்தினூடாக விழிப்பூட்டுதல், மற்றும் அது தொடர்பான சொல்லாடலொன்றைக் கட்டியெழுப்புதல் என்பவற்றுக்காக அவர் நிதமும் எதிர்க்கருத்துடையோரின் விமர்சனத்துக்கு ஆளானார்.

யுத்தம் முடிவுற்றவுடன் இந்த நாட்டில் மதத் தீவிரவாதம் தலைதூக்கிய ஆரம்ப

காலத்திலிருந்து அது தொடர்பாக பாரிய மனவருத்தத்திற்குள்ளான அவர், ஏற்பட்ட பிரச்சினைகள், சம்பவங்கள் தொடர்பாகவும் நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும் எம்முடன் அவரது கருத்துக்களை மனிதநேயம் மிக்கவராகப் பகிர்ந்துகொண்டார். இந்நாட்டு அரசியல் நிலவரம் தொடர்பில் சமூக ஊடகம் மற்றும் புதிய ஊடகம் என்பவற்றின் பயன்பாடு தொடர்பாக ஆழமான நோக்குடன் பணியாற்றிய அவருக்கு அதுபற்றிய நிபுணத்துவ அறிவும் இருந்தது. அவர் இறுதி யாத்திரை செல்லும்வரை கலைஞர் தர்மசிறி பண்டாரநாயக்க அவர்களுடன் இணைந்து "த்ரீகோணீ " என்னும் நிறுவனத்தில் ஆவணத் திரைப்பட உருவாக்கத்தில் ஈடுபட்டுவந்தார். அவர் பெ.ஊ.கூ பின் ஒரு நண்பரென்பதற்கு மேலதிகமாக பல வகையில் வளப் பகிர்வாளராகவும் ஆலோசகராகவும் சிலகாலம் பணியாற்றினார். குறுந்திரைப்படங்களுக்கான போட்டியில் திரைக்கதை மற்றும் திரைப்படத் தேர்வுச் சபையின் அங்கத்தவராகிய அவரின் தீர்மானங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மாற்றுக் கலந்துரையாடல்களுக்கு வழிசமைத்தது. இந்தப் பணியில் ஒவ்வொரு வருடமும் பெருவிருப்போடு ஈடுபட்டுவந்த அவர், குறுந்திரைப்படங்களைத் தெரிவுசெய்யும்போது புன்னகைபூத்த முகத்துடன் அவற்றை உச்ச மட்டத்தில் இரசித்த விதத்தை நான் மட்டுமல்ல, எங்கள் நிறுவனத்தைச் சேர்ந்த சகலரும் கண்டனர். இறுதியாக அவர் எங்களுடன் தொழிற்சங்கங்களில் பணியாற்றுகின்ற பெண்களின் தலைமைத்துவத்தை மேம்படுத்துவதற்கான ஊடகப் பயன்பாடு பற்றிய செயலமர்வில் பயிற்சியாளராகப் பங்கேற்றிருந்தார். 2014 வைகாசி 21ஆம் திகதி காலை அவர் எம்மிடமிருந்து நிரந்தரமாக விடைபெற்றுச் சென்றது இரண்டு வருட குறுகிய காலப்பகுதியில் பாதிப்புக்குள்ளான நுரையீரல் புற்றுநோயினாலாகும்.

சமூகச் செயற்பாட்டாளராக இந்நாட்டு மனித உரிமை மீறல்கள் மற்றும் சமாதானத்துக்கு எதிரான மோதல்மிகு நிலைமைகள் பற்றி, குறிப்பாக சில காலமாக முஸ்லிம் இனத்தவர்களுக்கெதிராக எழுந்த வன்முறை ரீதியான குரலுக்கு எதிராக, அவர் மிகவும் விழிப்புடன் காணப்பட்ட ஒருவராவார். அது, நேர்மையானதும் இனரீதியான கூருணர்வு மிக்கதுமான ஊடகவியலாளர்களின் பண்புகள் அவரிடம் காணப்பட்டதனாலேயேயொழிய, அவர் எவரினதும் கைப்பாவையாக ஆனதனால் அல்ல.

எம்முடன் பகிர்ந்துகொள்ளப்பட்ட அவரது மனிதத்துவத்திற்கு, சகோதரத்துவத்திற்கு, அறிவுக் களஞ்சியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டாலும், இச்சமூகத்துக்குத் தேவையான ஒரு சந்தர்ப்பத்தில் திடீரென நாம் இழந்த தோழர் "The Lost Boy" (தொலைந்த பையன்) அவரேயாவார்.

> "13 வயதுச் சிறுவனாகத் தொடர்ந்தும் வாழ முடியுமென்றே நான் புரிந்து கொண்டிருந்தேன்...
> அது எப்படியென்றால், சரியாக ஜே.எம். பரீசின் " த லொஸ்ட் போய்" எனும் தேவதைக் கதையில் வருகின்ற பீற்றர் பானின் கதாபாத்திரம் போன்றவாறு... ஆனால், நான் முதிர்ச்சியடைய வேண்டுமென ஒரு சந்தர்ப்பத்தில் புரிந்துகொண்டபோது அதனைக் கைவிட்டுவிட்டு நான் "மோர்கன்டி" (*Morquendi*) என்ற புரைபெயரைத் தெரிவுசெய்து கொண்டேன்."
>
> — சஞ்சய சேனாநாயக்க

அது 2004ஆம் ஆண்டு www.worldchanging.com இணையத்தளத்திற்கு சஞ்சய தம்மை ஒரு ப்ளோகராக அறிமுகம் செய்துகொள்வதன் பொருட்டுப் பயன்படுத்திய புனைபெயர் தொடர்பாகச் சஞ்சயவினாலேயே வழங்கப்பட்ட ஓர் அறிமுகமாகும். மோர்கன்டி எனப்படுவது எந்தவொரு அநீதிக்கும் எதிராக எழுகின்ற, தேவதைக் கதைகளில் வருகின்ற அசுர சக்தியைக் கொண்ட ஒருவராகும். இடம்பெறுகின்ற சமூக அநீதிக்கெதிராகப் போராடுவதற்காக மோர்கன்டியின் சக்தியும் எல்லையற்ற பலமும் தேவையென்பதைப் புரிந்துகொண்டமையினாலேயே அவர் அப்பெயரைத் தெரிவு செய்திருக்கக்கூடும். அவர் அத்தகைய சக்தியுடனும் பலத்துடனும் அர்ப்பணிப்புடனும் பாடுபட்ட தன்னிகரற்ற ஓர் இளைஞராவார். ■

**வேலாயுதம் ஜெயசித்ரா**

---

1. http://ojournalism.blogspot.com/2005/01/text-messages-aid-disaster-recovery.html, http://boingboing.net/2004/12/27/smses-from-sri-lanka.html

**பெண்கள் ஊடகக் கூட்டமைப்பு**
56/1, சரசவி லேன், காசல் வீதி,
கொழும்பு 8, இலங்கை.
தொலைபேசி : 94-11-5632045 / 5635900
தொலைநகல் : 94-11-2690192
மின்தபால் : wmcsrilanka@gmail.com

ரூ. 50/-